# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 27 வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 13 வியாழக்கிழமை (29.12.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 033




09 தமிழர்களால்தான் தீர்வு தாமதிக்கிறது



21 தமிழர்கள் மீது அக்கறை இல்லாத ஒருவர் சிதம்பரம்



25 கர்ஜிக்கும் சிங்கங்கள்!

வாசகர்களே! 31.12.2011 உதயன் நாளிதழுடன் இலவச வர்ண நாள்காட்டி. உங்கள் பிரதிக்கு முந்துங்கள்.

## அடிமையாக்க பார்க்கிறது மேற்குலகு அதற்கு ஒரு போதும் இடமளியேன்

### கர்ச்சிக்கிறார் ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு, டிசெ.29

புலிகளின் அதே மனோபாவத்துடனேயே தமிழ்க் கூட்டமைப்பினர் உள்ளனர். அவர்களின் கோரிக்கைகளான வடக்கு, கிழக்கு இணைப்பு, பொலிஸ் மற்றும் காணி அதிகாரப்பகிர்வு என்பன நடைமுறைச் சாத்தியமற்றவை. இந்த அதிகாரங்களை வழங்குவதன் மூலம் அவர்கள் என்னைக் கைதுசெய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்களா?

மேற்குலகம் என்னைத் தங்களின் அடிமையாக வைத்திருக்கப் பார்க்கிறது. அதற்கு நான் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை.

-இவ்வாறு இந்தியாவில் இருந்து வெளியாகும் 'டெக்கன் குரோனிக்கல்' நாளேட்டின் செய்தியாளர் பகவான் சிங்கிற்கு அலரி மாளிகையில் வைத்து அளித்துள்ள செவ்வியில் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேற்கு நாடுகளில் எஞ்சியுள்ள புலிகள் தான், இலங்கைக்கு எதிராக அடிப்படையற்ற விவகாரங்கள் குறித்து, அங்குள்ள அரசியல் தலைவர்களுக்கு அழுத்தம் கொடுக்கிறார்கள். மேற்கு நாடுகள் காஷ்மீர் தொடர்பாகவும் இலங்கை தொடர்பாகவும் தமது நாடாளுமன்றங்களில் பேசுகின்றன. ஆனால் ஆப்கானிஸ்தானிலும், பாகிஸ்தானிலும், ஈராக்கிலும் தாம் என்ன செய்தன என்பதில் மௌனம் காக்கின்றன என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

(செவ்வியின் முழு விவரம் 14 பக்கத்தில்) (த-சி)

## மார்ச் 03 ஆம் திகதி முல்லைத்தீவு தேர்தல்

கொழும்பு, டிசெ.29

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தல்களை தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய மீண்டும் ஒத்திவைத்துள்ளார்.

இந்த இரு பிரதேச சபைகளுக்குமான தேர்தல்களை எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதி நடத்துவது தொடர்பில் கலந்தாலோசிப்பதற்காக அனைத்து அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்களை ஜனவரி மாதம் 13ஆம் திகதி நடைபெறவுள்ள கூட்டத்திற்கு வருமாறும் தேர்தல் ஆணையாளர் அழைப்பு விடுத்துள்ளார்.

குறித்த பிரதேச சபைகளுக்கான வேட்புமனுத் தாக்கல்கள்

பக் 27

## 60 வருடங்களுக்குப் பின்னர் குளிரில் உறைந்தது கொழும்பு

கொழும்பு, டிசெ.29

இலங்கையின் தலைநகர் கொழும்பில் கடந்த 60 ஆண்டுகளில் இல்லாதளவுக்கு வெப்பநிலை ஆகக்குறைந்தளவை நேற்று எட்டியது.

கொழும்பில் நேற்றைய வெப்பநிலை 18.2 பாகை செல்சியஸ் ஆகப் பதிவாகியுள்ளது. இது 1951 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பதிவாகியுள்ள ஆகக் குறைந்த வெப்பநிலையாகும்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் லா-நினா காலநிலை தாக்கத்தினால் ஜனவரி மாதம் வீசிய குளிர் அலையின் போது கொழும்பில் ஆகக் குறைந்த வெப்பநிலை 18.8 பாகை செல்சியசாகப் பதிவாகியிருந்தது.

அதைவிடக் குளிரான காலநிலை நேற்றுக் காணப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

## கொழும்பு விரைகிறார் கிருஷ்ணா ஜனாதிபதி, சம்பந்தனுடன் சந்திப்பு

### அதிகாரப் பகிர்வு குறித்து பேச்சு நடத்துவார்

கொழும்பு, டிசெம்பர் 29

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா முக்கியத்துவம் வாய்ந்த விஜயமொன்றை மேற்கொண்டு ஜனவரி நடுப்பகுதியில் இலங்கை வரவுள்ளார். இதன் போது அவர் இங்கு பலதரப்பினரையும் சந்தித்துப் பேசவுள்ளதாக ராஜதந்திர வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. அமைச்சர் கிருஷ்ணாவின் இந்த விஜயம் அரசு - தமிழ்க் கூட்டமைப்பு இடையே நடைபெறும் பேச்சுக்கள் தொடர்பாக இந்திய அரசு கொண்டுள்ள நிலைப்பாட்டை இரு தரப்புக்கும் வலியுறுத்துவதாக அமையும் என அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.



காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்வது குறித்த விவகாரத்தால் அரசுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான பேச்சுகள் இக்கட்டான ஒரு நிலையில் உள்ளன. இனப்பிரச்சினைக்கான

பக் 27

## பொன்சேகாவை நிபந்தனையின்றி விடுவிக்கக் கோருகிறது ஐ.தே.க.

கொழும்பு, டிசெ.29

எந்தவொரு குற்றமும் செய்யாமல் சிறைத்தண்டனை வழங்கப்பட்டிருக்கும் சரத் பொன்சேகாவை, அரசு நிபந்தனைகள் இன்றி விடுதலை செய்யவேண்டும் என்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நேற்றுக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாற்றியபோது அவர் மேலும் கூறுகையில்,

சரத் பொன்சேகாவுக்கு எதுவித குற்றமும் செய்யாத நிலையில் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. பயங்கரவாதத்தில் இருந்து நாட்டை மீட்டெடுத்தது அவர் செய்த தப்பா?

அவருக்கு மன்னிப்பு வழங்குவதாக இருந்தால் அவர் ஜனாதிபதியிடம் மன்னிப்புக் கோரவேண்டுமாம். மன்னிப்புக் கோரும் அளவுக்கு

பக் 27

## ஆணைக்குழு அறிக்கை குறித்து அமைச்சர்கள் முரணான கருத்து

### உண்மைநிலைப்பாட்டை அறிவிக்கக் கோருகிறது ஐ.தே.க.

கொழும்பு, டிசெ.29

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக அமைச்சர்கள் முரண்பட்ட கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். இந்த அறிக்கை தொடர்பிலான அரசின் உண்மையான நிலைப்பாட்டை அரசு தெரிவிக்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி நேற்று அரசிடம் கோரிக்கை விடுத்தது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் தெரிவித்ததாவது:-

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதுமுதல் பலரும் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்து வருகின்றனர். ஆனால், இந்த அறிக்கையைப் பொறுப்புடன் நடைமுறைப்படுத்தவேண்டிய அமைச்சர்கள் இதுதொடர்பில் முன்னுக்குப்பின் முரணான கருத்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

அமைச்சர் விமல் வீரவன்ஸ ஒரு கருத்தை

பக் 27

## எங்களை மட்டுமே மடக்கிப் பிடிக்கிறீர்கள் இந்திய, சிங்கள மீனவர் விதிவிலக்கா?

### கடற்றொழில் திணைக்களத்திடம் வல்வெட்டி மீனவர் கேள்வி

யாழ்ப்பாணம், டிசெ.29

தடை செய்யப்பட்ட கடற்றொழில் உபகரணங்களைப் பயன்படுத்துவதாக்கக் கூறி உள்ளூர் மீனவர்களை மட்டும் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் மடக்கிப் பிடிக்கின்றனர்.

அதுபோல அத்துமீறி நுழையும் இந்தியா மற்றும் தென்னிலங்கை மீனவர்களை மட்டும் அதிகாரிகள் பிடிக்கமுடியாமல் இருப்பது ஏன்? இவ்வாறு கேள்வி எழுப்புகின்றனர் வல்வெட்டித்துறை நகரக் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களில் ஒரு பகுதியினர்.

இந்தச் சங்கத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களில் ஒரு பகுதியினர் நேற்று யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்துக்கு நேரில் வந்து இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளனர். சுமார் 40 இற்கும் மேற்பட்டவர்கள் இதில் அடங்கியிருந்தனர்.

இந்த மீனவர்கள் கடற்றொழில்

பக் 26

## சடலத்தை எடுத்துவரச் சென்ற 11 பேரை பத்து நாள்களாகியும் காணவில்லை

கொழும்பு, டிசெ.29

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து எடுத்துவரப்பட்ட சடலமும், அதனைக் கொண்டுவரப் போயிருந்த பதினொரு பேரும் கடந்த 10 நாள்களாக காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது-

இந்தியாவில் உள்ள வைத்தியசாலையொன்றில் கடந்த 18 ஆம் திகதி மட்டக்களப்பை வாழ்விடமாகவும் ஏழாலையை பிறப்பிடமாகவும் கொண்ட தனஞ்சயன் (வயது-38) என்பவர் மரணமாகியிருந்தார்.

இவருடைய சடலம் 19 ஆம் திகதி நண்பகல் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு விமானம் மூலம் எடுத்து வரப்பட்டு அங்கிருந்து தனியார் வாகனத்தின் மூலம் யாழ்ப்பாணம் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து ஏழாலை மேற்கில் உள்ள ஒன்றுவிட்ட சகோதரியின் வீட்டில் மரணக் கிரியைகளுக்கான ஏற்பாடுக

பக் 26

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்
செய்தி : 021-5678844
விளம்பரம் : 021-5679731
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




சகல மாவட்டங்களிலும் குளிரான, அசாதாரண காலநிலை நிலவும்.

## வேலணை, புங்குடுதீவில் நன்னீர் மீன்வளர்ப்பு

வேலணை, புங்குடுதீவுப் பகுதிகளில் உள்ள தெரிவுசெய்யப்பட்ட குளங்களில் நன்னீர் மீன்வளர்ப்புத் திட்டம் பரீட்சார்த்தமாக நேற்று புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தேசிய நீரியல் வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் கூட்டுறவுத் திணைக்களத்துடன் இணைந்து நேற்று வேலணை, புங்குடுதீவுப் பகுதிகளில் உள்ள தெரிவுசெய்யப்பட்ட குளங்களில் இந்த நன்னீர் மீன் இனங்களை வளர்க்கும் திட்டத்தை ஆரம்பித்து வைத்தது.

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரால் முன் மொழியப்பட்டு இத்திட்டம் செயற்படுத்தப்பட்டுவருகிறது. பளைபிரதேசத்தில்நாடாளுமன்றஉறுப்பினர்நாமல் ராஜபக்ஷ நேற்று இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். (த-26)

# கட்டுநாயக்காவில் மாலைபோட்டு வரவேற்று தங்காலையில் வைத்து சுட்டுக்கொன்றது அரசு

### பிரிட்டிஷ் பிரஜை கொலை குறித்து ரவி.எம்.பி.காட்டம்

கொழும்பு, டிசெ.29

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கட்டுநாயக்க விமானநிலையத்தில் மாலை போட்டு வரவேற்கும் அரசு அவர்களைத் தங்காலையில் வைத்து சுட்டுக்கொல்கின்றது என்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நேற்றுக் கூறினார்.

தங்காலை கொலைச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தத் தனியான விசாரணைக்குழு வொன்று அமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இரண்டொரு நாள்களில் நாட்டில் பல சம்பவங்கள் இடம் பெற்றுவிட்டன.

மரக்கறிகளைக் கொண்டு செல்வதற்கு கூடைகள் பயன்படுத்துதல், ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் குழறுபடி மற்றும் தங்காலையில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணி சுட்டுக்கொலை போன்ற சிக்கல்கள் தோன்றின.

இவற்றுள் வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணியின் கொலை என்பது பாரதூரமான ஒன்றாகும். சுற்றுலாத்துறையையே இது ஆட்டங்காணச் செய்யக் கூடியது.

கட்டுநாயக்க விமானநிலையத்தில் சுற்றுலாப்பயணிகளை மாலைபோட்டு வரவழைத்து அவர்களைத் தங்காலையில் வைத்துச் சுட்டுக்கொல்கிறது இந்த அரசு. அரசின் முக்கியஸ்தர் ஒருவர்தான் இந்தக் கொலையுடன் தொடர்புபட்டிருக்கின்றார்.

அரசினாலேயே சுற்றுலாப் பயணிகளுக்கு இவ்வாறு ஆபத்து ஏற்படுத்தப்படும்போது அவர்கள் எப்படி இந்த அரசை நம்பி இந்த நாட்டுக்கு வருவர்? இது சுற்றுலாத்துறையை வீழ்ச்சியடையச்செய்யும்.

இக்கொலைச்சம்பவம் தொடர்பாக சுயாதீன விசாரணை நடத்துவதற்குத் தனியான விசாரணைக்குழுவொன்று அமைக்கப்படவேண்டும் - என்றார். (த-சி)

# சாதனை மாணவனுக்கு சரவணபவன் எம்.பி பாராட்டு



உயர்தரப் பரீட்சையில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற சாதனை மாணவனுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் சாதனை நினைவுச் சின்னம் ஒன்றினை வழங்கியுள்ளார்.

தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற மாணவனான கமலவாசனின் வீட்டுக்கு இன்று காலை நேரடியாகச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மாணவனின் திறமையினைப் பாராட்டி நினைவுச் சின்னம் ஒன்றினை வழங்கியுள்ளார்.

தற்போது வெளியிடப்பட்ட ஜி.சீ.ஈ. உயர்தரப் பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியைச் சேர்ந்த கமலக்கண்ணன் கமலவாசன் கணிதப் பிரிவில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்று யாழ். மாவட்டத்துக்குப் பெருமை தேடிக் கொடுத்துள்ளார். (ங)

# குருதிசிந்தும் நாள்கள் மீண்டும் வருவதை தமிழ் மக்களும், கூட்டமைப்பும் விரும்பவில்லை

### சிறிதரன் எம்.பி.

யாழ்ப்பாணம், டிசெ.29

குருதி சிந்தும் நாள்கள் மீண்டும் வருவதைத் தமிழ் மக்களும், கூட்டமைப்பும் விரும்பவில்லை. ஆனால் சிங்கள அரசும், சிங்கள தலைவர்களும் அதனையே விரும்புகின்றனர் என்றே தெரிகிறது. மீளவும் தமிழ் மக்கள் அடக்குமுறைக்குள் உட்படுத்தி துன்புறுத்தவே சிங்கள அரசியல்வாதிகள் முயற்சிக்கிறார்கள்.

ஊடகவியலாளர்களை நேற்று சந்தித்து, உரையாடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளமை வருமாறு:

தமிழ் மக்களின் அடிப்படை அரசியல்அபிலாசைகளானவடக்கு கிழக்கு இணைப்பு, பொலிஸ், காணி அதிகாரம் உள்ளிட்ட தமிழ்த் தேசிய இனம் என்ற அடிப்படையில் எம்மை நாமே ஆளும் சுயநிர்ணய அடிப்படையிலான ஒரு தீர்வைத் தவிர வேறு எந்தத் தீர்வையும் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

மக்களுக்கு விரோதமாக, அவர்களது அடிப்படை அரசியல் அபிலாசைகளுக்கு- தேவைகளுக்கு - முரணாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நடந்து கொள்ளாது. குழப்பங்கள், கருத்து வேறுபாடுகள் வரலாம். ஆனால் ஒருபோதும் கூட்டமைப்பு அதன் அடிப்படைக் கொள்கைகளிலிருந்து மாறுபடப்போவதில்லை.

அரசாங்கத்துடன் பல தடவைகள் பேச்சு வார்த்தை நடத்தியும், விட்டுக்கொடுத்தும் எது வித பயனும் ஏற்பட்டிருக்கவில்லை. எமது உரிமைகளை நாங்கள் தானே கேட்க வேண்டும். அரசுடனான பேச்சு வார்த்தை தொடர்ந்தாலும் இழுபட்டாலும் ஒரு கட்டத்தில் முடிவுக்கு வந்தே ஆகவேண்டும்.

பேச்சுவார்த்தை மூலமாக எமக்கு உரிய தீர்வு கிடைக்காத பட்சத்தில் வெகுஜன போராட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டி இருக்கும். இதில் நாம் மிகத் தெளிவாகவுள்ளோம். எமது மக்களை மீண்டும் துன்பகரமான வாழ்க்கையைத் தொடர நாம் விரும்பவில்லை.

பேச்சு வார்த்தையின் போது தமது பொறுமையைச் சோதிக்கக் கூடாது என அரசு கூறுகிறது. எமது மக்களின் உரிமைகள், தீர்வுகள் பற்றி நாங்கள் தானே பேசவேண்டும். இதன்போது உள்நாட்டு ரீதியாக, வெளிநாட்டு ரீதியாக, இராஜதந்திர ரீதியாகச் சில தடங்கல்கள் வரலாம். அதுபற்றி நாம் மௌனம் காப்பதாக பொதுமக்களும் சில ஊடகங்களும் எண்ணலாம். எனினும் இத்தகைய மௌனிப்புகளைக் கொண்டு கூட்டமைப்பு தன் கொள்கைகளைக் கைவிட்டு விட்டதாக எண்ணக்கூடாது.

வடக்கு-கிழக்கு இணைப்பில்லாது வடமாகாண சபைத் தேர்தல் நடந்தால் அதில் கட்சி ரீதியாகப் போட்டியிடக்கூடாது. தேசியக்குழுவாகவோ அல்லது அமைப்பாகவோ போட்டியிடுவது பற்றி பரிசீலிக்க வேண்டும் எனச் 'சிவில்' சமூகம் கேட்டுக் கொண்டுள்ளது.

2012 இல் இந்தத் தேர்தல் நடைபெறுமாக இருந்தால் சிவில் சமூகத்துடன், துறைசார் வல்லுநர்களுடன் கலந்துரையாடி என்ன அடிப்படையில் போட்டியிடுவது என்பது பற்றி பேசுவோம்.

தமிழ் மக்களுக்கு விரோதமான சக்திகளின் கைகளுக்கு வடக்கு மாகாணம் சென்றுவிடக் கூடாது என்பதில் ஒவ்வொரு தமிழனும் உறுதியாக இருக்க வேண்டும். எம்மை அழிப்பவர்கள், காட்டிக்கொடுப்பவர்கள், இறுதி யுத்தத்தில் பொதுமக்கள் எவருமே இறக்கவில்லை என்று சொன்னவர்கள், ஆட்சிக்கு வருவதற்கு ஒரு போதும் இடமளிக்கக் கூடாது. இதனைத் தடுப்பதற்காக வேனும் வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடத்தான் வேண்டும். இதுபற்றி சிவில் சமூகத்துடன் கலந்துரையாடப்படும்.

அரசுடன் பேசும் விடயங்களைச் சில தந்திரோபாயங்களுக்காக நாம் வெளியே சொல்லவில்லை. அரசு சிலவற்றைச் சொல்வதனால் சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட பலர் அங்கு பிரச்சினைகளை உண்டு பண்ணுகின்றனர். இனவெறியையும் ஊட்டுவார்கள். ஆனாலும் அரசுடன் பேசிய எந்த விடயங்களும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

சிறையிலுள்ள கைதிகளின் பெயர் விவரங்கள் உள்ளடங்கிய பட்டியலை வெளியிடுவதாக அரசு கூறியது. அதேவேளை பெண்கள், குழந்தைகளை விடுதலை செய்கிறோம் என்றும் ஜனாதிபதி கூறினார். இதுஇரண்டுமே நடக்கவில்லை. மாறாக வெலிக்கடை, போகம்பரை, அநுராதபுர சிறைச்சாலைகளில் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள், அவயவங்களை இழந்தவர்கள் எனப் பலர் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் - என்றார். (ங-14)

# நிகழ்வுகள் இன்று

**ஒருங்கிணைப்புக் கூட்டம்**

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் ஒருங்கி ணைப்புக் குழுக்கூட்டம் முற்பகல் 10மணிக்கு மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-313)

**பொதுக்கூட்டம்**

யாழ். மாநகர சபையினால் ஒத்திவைக்கப்பட்ட பதினோராவது மாதாந்தப் பொதுக்கூட்டம் முற்பகல் 10 மணிக்கு மநாாட்டு மண்டபத்தில் மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெற்றவுள்ளது. (ம-313).

**மாதாந்த மாநாடு**

பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் மற்றும் பொது முகாமையாளர்களுக்கான மாதாந்த மாநாடு காலை 9மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-313)

**ஒளி விழா**

கோப்பாய் பிரதேச செயலகத்தில் ஒளிவிழா நிகழ்வு பிற்பகல் ஒரு மணிக்கு பிரதேச செயலக மாநட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-313)

* * *

உடுவில் மல்வம் திருக்குடும்ப ஆலயத்தின் ஒளிவிழா நிகழ்வு மாலை 5மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. உடுவில் அந்திரான் சங்குவேலி மற்றும் மல்வம் பங்கு மக்கள் இணைந்து நடத்தும் இந்த நிகழ்வில் ''சின்னவன் வென்றான்'' நாட்டுக்கூத்தும் இடம்பெறும். (ம-313)

* * *

நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணிமனையின் ஒளிவிழா நிகழ்வு இன்று உதவி அரச அதிபர் ஆ.சிறி தலைமையில் நடைபெற வுள்ளது. (ம-7)

* * *

தென்மராட்சியில் படையினரின் ஏற்பாட்டில் நத்தார் தின நிகழ்வுகள் பிற்பகல் 5 மணிக்கு சாவகச்சேரி கச்சாய் வீதியிலுள்ள லிகோரியார் தேவாலயத்தில் லிகோரியார் தேவாலயப் பங்குத்தந்தை யேசுரட்ணம் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச 522 ஆவது, 523 ஆவது பிரிகேட்டுக்களின் கட்டளை அதிகாரிகளான பிரிகேடியர்கள் தெப்பட்டம்பிட்டிய, அத்துரு சில்வா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (த-131)

முழுமையான விசாரணை நடத்தப்படவில்லை என்ற

# இலங்கைக்கு எதிரான நிலைப்பாட்டில் இருப்பதையிட்டு கனடா பெருமிதம்

ரொறன்ரோ, டிசெ.29

இறுதிக்கட்டப் போரின் போது படையினரால் இழைக்கப்பட்டவை எனக் கூறப்படும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக போதுமானளவு விசாரணைகள் நடத்தப்படவில்லை - என்று இலங்கை அரசுக்கு எதிரான நிலைப்பாட்டில் இருப்பது குறித்து தாம் பெருமைப்படுகிறோம் என கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயார்ட் தெரிவித்துள்ளார்.

60 வருடங்களைக் கொண்ட ஐ.நா. வரலாற்றில், பாதுகாப்புப் பேரவையின் தற்காலிக உறுப்பினர் பதவிக்கு நடத்தப்பட்ட தேர்தலில் முதல்முறையாக கடந்த ஆண்டு கனடா தோல்வியைச் சந்தித்தது குறித்தும், கனேடிய வெளிவிவகாரத் திணைக்களத்தின் செயற்பாடுகள் குறித்தும் நேற்றுமுன்தினம் கனேடிய ஊடகங்களிடம் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

இலங்கை தொடர்பான எமது கவலைகளை வெளிப்படுத்தாமல் மௌனமாக இருந்திருந்தாலோ, ஈரானின் மனித உரிமை மீறல்கள் பற்றி கண்டுகொள்ளாமல் இருந்திருந்தாலோ, ஐ.நா. பாதுகாப்புச்சபை உறுப்பு நாடுகளுக்கான தேர்தலில் எமக்கு வாக்குகள் கிடைத்திருக்கும். ஆனால், நாம் அப்படிச் செய்யவில்லை. நாம் எதைப் பற்றியும் வருந்துவதாக நான் நினைக்கவில்லை. எமக்கு எதிராக ஈரான் வாக்களித்திருக்கலாம். வடகொரியாவோ, கடாபியோ எமக்கு எதிராக வாக்களித்திருக்கலாம்.

அவையனைத்தும் எமக்கு வழங்கப்பட்ட கௌரவ விருதுகளாகவே நினைக்கிறேன்.

குறிப்பாக, விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடத்தப்பட்ட இறுதிக்கட்டப் போரின்போது இலங்கைப் படையினரால் இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக போதுமானளவு விசாரணைகள் நடத்தப்படவில்லை என்று இலங்கை அரசுக்கு எதிரான கொண்டுள்ள நிலைப்பாடு குறித்து நான் பெருமைப்படுகிறேன்.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்து நாங்கள் திகைப்படைந்துள்ளோம்.

யாராவது ஒருவர் எழுந்து போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறப்படவில்லை, அர்த்தமுள்ள எந்தவொரு நல்லிணக்கமும் மேற்கொள்ளப்படவில்லை என்று கூறவேண்டும்.

அது மிகவும் பிரபலமாகாது போகலாம். ஆனால், யாரோ ஒருவர் இந்த உண்மைகளை வெளிக் கொண்டுவரவேண்டும். இது மிகவும் முக்கியமானதென்று நான் நினைக்கிறேன்.

புதிதாக வந்த பெருமளவு கனேடியர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்காக - புலம்பெயர் அரசியல்- நடத்துவதாக விமர்சகர்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டு தவறானது.

தேர்தலுக்கு முன்னர் அதை நாங்கள் செய்யவில்லை - என்றார் அவர். (த-சி)

# சொந்த இடத்தில் குடியமர்த்துமாறு முகமாலை மக்கள் நாமலுக்கு மகஜர்

1996 ஆம் ஆண்டிலிருந்து அகதிகளாக அலைந்து வரும் எங்களைச் சொந்த இடங்களில் மீள் குடியமர்த்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிடம் முகமாலை மக்கள் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர். இந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:

யுத்தம் முடிவடைந்த பின்னர் நமது நாடு துரித கதியில் அபிவிருத்தி அடைந்து வருகின்றது. எனினும் கடுமையான யுத்தம் நடைபெற்ற இடமான முகமாலையும் அதனை அன்மித்த பகுதியும் மிகவும் மோசமாக சேதமடைந்த நிலையில் பார்ப்பதற்கு மயான பூமியாகக் காட்சி தருகின்றது. இப்பகுதிகள் கண்ணிவெடிகள் நிறைந்த இடமாக அடையாளம் இடப்பட்டு மக்கள் குடியமர முடியாத இடமாகக் காணப்படுகின்றது.

1996ம் ஆண்டு இடம்பெயர்ந்த நாம் அனைவரும் இன்று வரை எமது கிராமங்களில் மீளக் குடியமர முடியாத நிலையில் எமது மாவட்டத்திலும் ஏனைய மாவட்டங்களிலும் உறவினர், நண்பர்களின் வீடுகளில் பாரிய நெருக்கடிகளுடன் வாழ்ந்து வருகின்றோம்.

எனவே எமது பகுதிக்கு தாங்கள் அடிக்கடி வருகை தந்து எமது பிரதேசத்தின் அபிவிருத்திப் பணியில் அக்கறைகொண்டு செயற்படுவதினால்எமதுஉண்மை நிலையினைத் தாங்கள் நேரில் ஆராய்ந்து எமது கிராமத்தில் நாம் விரைவாக மீளக்குடியமரக் கூடிய நிலையை ஏற்படுத்தித் தந்துதவுமாறு தயவாக வேண்டுகின்றோம்.

அத்துடன் எமக்கு வழங்கப்பட்டு வந்த உலர்உணவு நிவாரணம் தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ளது. இந்த நிவாரணம் எமது மீள்குடியேற்றம் வரை கிடைப்பதற்கும் ஏற்புடைய ஒழுங்குகளைச் செய்து தந்துதவுமாறு தயவாக வேண்டுவதுடன் இவற்றுக்கான சாதகமான பதில்களையும் வேண்டி நிற்கின்றோம். (ந)

# இலங்கைப் பெண் இந்தியாவில் கைது

இந்தியப் பிரஜை எனக் கூறி, கொழும்பு செல்ல முயன்ற இலங்கைப் பெண் ஒருவர் இந்தியாவில் கைதுசெய்யப்பட்டார்.

இலங்கையைச் சேர்ந்தவர் கீதா (வயது - 35). சில ஆண்டுகளுக்கு முன் இந்தியா வந்த இவர், சென்னை, சாலிகிராமத்தில் தங்கினார். பின்னர் முருகன் என்பவரை திருமணம் செய்துகொண்டு, அப்பகுதியில் வீட்டுவேலை செய்து வாழ்ந்தார். தற்போது இலங்கை செல்ல விரும்பிய கீதா, போலி ஆவணங்களைப் கொடுத்து இந்தியக் கடவுச்சீட்டு பெற்றார். அதை பயன்படுத்தி, நேற்றுமுன்தினம் மதியம் ஒரு மணிக்கு ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானத்தில், கொழும்பு செல்ல விமான நிலையம் வந்தார். குடியுரிமைச் சோதனையில் உண்மை வெளிவந்தது.

# முப்படைத் தலைமையக கட்டடத்துக்கு மின்சாரம் பெற ரூபா 18 கோடி ஒதுக்கீடு

கொழும்பு, டிசெ.29

பத்தரமுல்லை, அக்குரேகொடவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் முப்படைகளுக்கான தலைமையகக் கட்டடத் தொகுதிகளுக்கு மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக 18 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இம்மாத இறுதிக்குள் இந்தப் பணத்தை இலங்கை மின்சாரசபையிடம் செலுத்துவதற்கான ஏற்பாடுகளை பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு செய்துவருகிறது. முன்னதாக இந்த நிதி ஒதுக்கீட்டுக்காக பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்திருந்த பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.

முப்படைத் தலைமையகத்தை ஒரே கூரையின் கீழ் கொண்டுவருவதற்கான தீர்மானத்தை எடுத்த அரசு, அதற்கான கட்டடத்தொகுதியை பத்தரமுல்லையில் அமைத்துவருவது குறிப்பிடத்தக்கது. (த-சி)

# பொலிஸ் டயரி

இந்தப் புதுவருட பண்டிகைக் காலத்தில் 'பிக்பொக்கற்' திருடர்கள், பஸ்கள்மற்றும் கடைத் தெருக்களில் அதிகமாக உலாவுகின்றனர் என்றும் பொதுமக்களை விழிப்பாக இருக்குமாறும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மோட்டார் சைக்கிள்களில் வந்து சங்கிலிகளைப் பறிக்கும் திருடர்களிடமிருந்து தப்புவதற்காக வெளியே செல்லும் பெண்கள் விலை உயர்ந்த தங்க நகைகளை அணிவதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என்றும் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# அடுத்த ஆண்டிலும் பேரிடர் முகாமைத்துவ அமைச்சால் உதவிகள் வழங்கப்பட வேண்டும்

## முல்லை அரச அதிபர் வேண்டுகோள்

கிளிநொச்சி, டிசெ.29

அடுத்த ஆண்டிலும் பேரிடர் முகாமைத்துவ அமைச்சின் மூலம் உதவிகள் வழங்கப்பட வேண்டுமென முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பேரிடர் முகாமைத்துவ அமைச்சரால் உதவிப் பொருள்களை வழங்கும் நிகழ்வு கடந்த 27 ஆம் திகதி கிளிநொச்சியில் இடம்பெற்றபோது உரையாற்றிய மாவட்ட அரச அதிபர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

இந்த உதவிகள் எமது மாவட்ட மக்களுக்கு பேரிடர் முகாமைத்துவ அமைச்சினால் கிடைக்கப்பெற்றமைக்கு அமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். எமது மாவட்டத்தின் மீள்குடியமர்வுச் செயற்பாடுகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன. மேலும் உதவிகளும் தேவையாக உள்ளன.

அடுத்த 2012 ஆம் ஆண்டில் பேரிடர் முகாமைத்துவ அமைச்சின் மூலம் மேலும் பல உதவிகள் கிடைக்க வேண்டும். அதனை வழங்க வேண்டும் என்று அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன் எனத் தெரிவித்த அவர் தமது மாவட்டத்தில் மேலும் 12 கிராம அலுவலர் பிரிவுகளில் மீள்குடியமர்வு மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார். (க-6)

# தொடர்ந்து ஏமாற்றப்படும் வன்னி மக்கள்

காப்புறுதி என்ற பெயரில் ஒரு மோசடியும், வெளிநாட்டு ஆசை காட்டிப் பணத்தை பெற்று பின் தலைமறைவான மோசடியும் அண்மையில் நடந்துள்ளன.

வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறிப் பண மோசடி. இவ்வாறு மோசடி செய்தவர்கள் தமிழர்கள். தண்ணீரூற்று, முல்லைத்தீவுப் பகுதிகளில் இவர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டியுள்ளார்கள். இதற்குத் தலைமை தாங்கி வந்தவர் கலா என்ற பெயர் தாங்கிய பெண்.

இவர்களின் செயற்பாடுகள் மக்களைக் கவரும் வகையில் அமைந்திருந்தன. தண்ணீரூற்றில் உள்ள முன்பள்ளி ஒன்றுக்கு 30 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கினர். மற்றும் கள்ளப்பாடு அ.த.க. பாடசாலையின் மாணவர்களுக்கு 30 ஆயிரம் ரூபாவை வழங்கினர்.

இவ்வாறான செயற்பாடுகளினூடாகத் தங்களின் மோசடி மற்றும் ஏமாற்று வேலைகளுக்கு ஆள்களை இவர்கள் தெரிவு செய்து கொண்டனர். 30 ஆயிரத்தை எம்மிடம் முதலீடு செய்வதன் மூலம் மூன்று மாதங்களில் ஒரு லட்சம் ரூபாவைப் பெறுவீர்கள் என ஆசை வார்த்தை கூறினர்.

எனவே அவர்களின் பசப்பு வார்த்தையில் மயங்கியவர்களும், அன்பளிப்புகளைப் பார்த்தவர்களும் உடனே தம்மிடம் எஞ்சியிருந்த நகைகளை விற்றும், அடகு வைத்தும் பணத்தைக் கொடுத்தனர். அதிக பணம் கொடுத்தவர்களுக்குத் திகதியிடப்பட்ட வங்கிக் காசோலைகளும் வழங்கப்பட்டுள்ளன. அவர்களும் காசோலையில் உள்ள திகதி வரும் வரை காத்திருந்தனர். உரிய திகதியில் வங்கி சென்றபோது காசோலை வழங்கியவரின் கணக்கில் பணம் இல்லாத விடயம் தெரிய வந்தது. அவரும் இங்கு இல்லை. தொலைபேசியில் தொடர்பு மேற்கொண்டால் சேவையில் இருந்து துண்டிக்கப்பட்ட இலக்கமாக அது மாறிக் காணப்பட்டது.

இவ்வாறாகத் தண்ணீரூற்று, முல்லைத்தீவு, கள்ளப்பாடு குமுழமுனை போன்ற பகுதிகளில் சுமார் 4 லட்சம் ரூபா வரையில் (இது வரை தெரிய வந்தது) கலா அக்காவால் 'அபேஸ்' பண்ணப்பட்டுள்ளது.

இப்போது கலா அக்கா குழுவுக்கு முச்சக்கர வண்டியை வாடகைக்கு விட்டவர், வீட்டுக்குப் பணம் கொடுத்து ஏமாந்தவர்கள் நாளாந்தம் வந்து போகின்றார்கள். இது இவ்வாறிருக்க முச்சக்கர வண்டியை வாடகைக்கு விட்டவர் பாடும் ஏமாற்றம்தான். அவரும் பல ஆயிரங்களைக் கொடுத்துள்ளார். அவருக்கும் போனஸ் காசோலை வழங்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

மேலும் வேறொரு நபர் குறிப்பிட்ட சிலரைக் கனடா, லண்டன் போன்ற இடங்களுக்கு அனுப்புவதாகக் கூறி ஒவ்வொருவரிடமிருந்தும் 3 லட்சம் ரூபா வீதம் பெற்றுள்ளார். அவர்களை இங்கிருந்து கொழும்புக்கு அழைத்துச் சென்று நட்சத்திர விடுதியில் தங்கவைத்து நன்றாகக் கவனித்துள்ளார்.

பின்னர் மலேசியா வரை அழைத்துச் சென்று அங்கு அழைத்துச் சென்றவர்களை நடுத்தெருவில் விட்டு விட்டு ஆள் தலை மறைவாகியுள்ளார்.

இங்குள்ள 'உறவுகள் நேற்றுத்தான் பிளைற்' என்று சொல்லிக் கொண்டிருக்க ஐந்தாம் நாள் முல்லைத்தீவுக்கு குறிப்பிட்ட நபர்கள் வந்து இறங்கியுள்ளனர்.

''மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதைதான் இது'' போருக்குள் சிக்கி எல்லாவற்றையும் இழந்து உயிர் மட்டும் எஞ்சிய நிலையில் எங்களின் சொந்த மண்ணில் சந்தோஷமாக வாழலாம் என்று வந்தவர்கள் சந்தடியில்லாமல் வந்த பிசாசுகளால் இருந்ததையும் இழந்து நிற்கின்றனர்.

### இறை

இந்த ஏமாற்றுக்காரர்களுக்குத் தண்டனை வழங்கப் போவது யார்? மீண்டும் கடவுளில் பாரத்தை இறக்கிவைக்க வேண்டிய நிலைதான்.

# எத்தகைய இடர்களிலிருந்தும் மீண்டெழும் வல்லமை தமிழருக்கு உண்டு

## வவுனியா நகரசபையின் உப தலைவர் ரதன் உரை

யாழ்ப்பாணம், டிசெ.29

எத்தனையோ துயரமான நிகழ்வுகளை எமது இனம் சந்தித்தபோதிலும் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட கடல் கோள் பேரிடரையும் 2009ஆம் ஆண்டு தமிழ் இனம் மீது சிங்களப் பேரினவாதம் புரிந்த முள்ளிவாய்க்கால் பேரவலத்தையும் எமது இனம் மறக்கத் தயாரில்லை. இவ்வாறான இடர்களிலிருந்து மீண்டெழும் வல்லமை படைத்த இனமே தமிழினம் என வவுனியா நகர சபையின் உபதலைவர் எம்.எம்.ரதன் கூறியுள்ளார்.

கடல்கோள் காரணமாக உயிர் நீத்த மக்களின் ஏழாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் ஏற்பாடு செய்த நிகழ்வு இறம்பைக்குளம் கருமாரி அம்மன் ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

இலங்கையிலும் குறிப்பாக வடக்கு - கிழக்கு இணைந்த எமது தாயகப் பகுதியில் கடல்கோளின் தாக்கம் அதிகமாகக் காணப்பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டன. பலர் அங்கவீனராகினர்.

கடல்கோள் பாதிப்பின் பின்னர் வெளிநாடுகள் இலங்கைக்குப் பெரியளவில் நிதி உதவிகள், பொருள் உதவிகள் புரிந்தன. ஆயினும் அந்த உதவிகள் அன்று ஆட்சியில் இருந்த சந்திரிகா அரசினால் வடக்கு - கிழக்கு இணைந்த தாயகப் பிரதேசத்தைச் சென்றடையவில்லை.

மீள் கட்டுமானப் பணிசார்ந்த குழு ஒன்று அமைக்கப்பட்ட போதிலும் இனவாதிகளினால் அக்குழுவும் அன்றைய சூழ்நிலையில் நிறுத்தப்பட்டது. எனினும், எமது மக்கள் தங்கள் சுயமுயற்சியாலும் புலம்பெயர் உறவுகள் வழங்கிய உதவிகளாலும் தம்மை மேம்படுத்தினர்.

இதைப்போன்றே இறுதி மோதலின் பின்னர் மீள்குடியமர்வு செய்யப்பட்ட மக்கள் குறிப்பாக எமது வன்னி உறவுகள் அடிப்படைத் தேவைகள் இன்றி வாழ்வதைக் காணமுடிகிறது. கடல்கோள் ஏற்பட முன்னர் உள்ள சூழ்நிலை போன்றுதான் இன்று எமது போராட்டமும் அடங்கிக் காணப்படுகிறது.

எனவே இவ்வாறான இடர்களிலிருந்து எம்மை நாமே ஆறுதல்படுத்திப் புதிய பாதையில், புதிய சிந்தனையுடன் பயணிப்போம். இந்த இடர்களினால் உயிர் நீத்த மக்கள் அனைவருக்கும் அஞ்சலி செலுத்திப் பிரார்த்திப்போம் - என்றார்.

(க-4-435)

# மேம்பாலம் அமைக்க கோரிக்கை

அக்கராயன், டிசெ.29

கிளிநொச்சி அக்கராயன் குளம் வான்பாயும்போது பிரதான வீதியால் மக்கள் சிரமமின்றிப் பயணிக்கத்தக்க வகையில் மேம்பாலம் ஒன்றை அமைக்குமாறு அக்கராயன் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வழக்கமாக அக்கராயன் குளம் வான் பாயும் காலங்களில் மழைநீர் இந்த வீதியைக் குறுக்கறுத்துப் பாய்வதால் மக்கள்' பல்வேறு சிரமங்களுக்கும் ஆளாகி வருகின்றனர்.

இந்த நிலையில் வீதியைக் குறுக்கறுத்து மழைநீர் பாயும், இடத்தில் மேம்பாலம் ஒன்றை அமைக்க வேண்டுமென்பதே மக்களின் வேண்டுகோள் ஆகும்.

(க-410)

# செத்த யானைக்கு அஞ்சலி செலுத்த மக்களை நிர்ப்பந்தித்தது இராணுவம்

முள்ளியவளை, டிசெ.29

புதுக்குடியிருப்புப் பகுதியில் இறந்த யானை ஒன்றுக்கு அஞ்சலி செலுத்துமாறு இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று மக்களிடம் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு வேணாவில் பகுதியில் இறந்த நிலையில் யானை ஒன்று நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த யானை சுமார் நான்கு தினங்களுக்கு முன்னர் இறந்திருக்கலாமெனக் க்ருதப்படுகின்றது.

இங்கு நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினர் இறந்த யானையின் உடலைப் பார்வையிட்டதுடன், அதனை எரியூட்டித் தகனம் செய்வதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தனர். இந்த நிலையில் நேற்றைய தினம் புதுக்குடியிருப்பில் மக்கள் மீள்குடியமர்ந்த வீடுகளுக்குச் சென்ற இராணுவத்தினர், யானையை எரியூட்டித் தகனம் செய்யும் நிகழ்வில் அனைத்து மக்களும் கலந்து கொள்ள வேண்டுமென வற்புறுத்திக் கேட்டுள்ளனர்.

இந்தப் பகுதியில் உணவுக்கான வேலைக்குச் செல்வோரும்கூட வேலைக்குச் செல்லாமல் கட்டாயம் இதில் கலந்து கொள்ள வேண்டுமென இராணுவத்தினரால் கூறப்பட்டுள்ளது.

நேற்று மதியம் அளவில் யானையை எரியூட்டுவதற்கான ஒழுங்குகள் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. புதுக்குடியிருப்பில் மீள்குடியமர்ந்த மக்களால் மீள் நடுகை செய்யப்பட்ட தென்னைப் பயிர்கள் யாவும் யானைகளால் அழிக்கப்பட்டுவிட்டன. இந்த யானையும் இத்தகைய அழிவுகளில் ஈடுபட்டிருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகின்றது.

மேலும் தென்பகுதியில் வளர்க்கப்பட்ட பல யானைகள் இங்கு கொண்டுவரப்பட்டு விடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(க-433)



யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையகம் நடத்திய நத்தார் விழா நேற்று மாலை யாழ். அடைக்கல அன்னை ஆலய முன்றலில் நடைபெற்றுள்ளது. இதில் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் விளக்கேற்றுகிறார். அருகில் யாழ். மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க காணப்படுகிறார். அடுத்துள்ள படத்தில் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை நத்தார் செய்தியை வழங்குகிறார்.

# மத்திய ஆரம்ப வித்தியாலய கட்டடத் திறப்பு விழா இன்று

கிளிநொச்சி, டிசெ.29

கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று முற்பகல் 8.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் இக்கட்டடத்தைத் திறந்து வைக்கவுள்ளனர்.

இந்த மாடிக் கட்டடத்தின் கீழ்த்தள வேலைகள் போருக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட போதும் முடிவுறாது அரைகுறை நிலையில் நீண்ட காலமாக காணப்பட்டன. தற்போது அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் நிதியுதவியுடன் மேற்படி கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

இந்த நிலையில் கட்டடத் திறப்பு விழாவுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பாடசாலை அதிபருக்கு மிகக் குறுகிய கால அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இந்த வித்தியாலயம் ஆரம்பப் பிரிவு தனிப் பிரிவாக இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இயங்கத் தொடங்கியதுடன் தற்காலிகக் கட்டடங்களில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமன்றி கிளிநொச்சி மத்திய கல்லூரி இசுறுப் பாடசாலைத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டதால் இதன் ஆரம்ப பிரிவுகள் தனியாக இயங்கத் தொடங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

(க-405)

# மலசல கூடம் இல்லாத நூலகம்; அவதிக்கு உள்ளாகும் வாசகர்கள்

அக்கராயன், டிசெ.29

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசசபையின் நூலகத்துக்குச் செல்வோர் மலசலகூட வசதிகள் இல்லாததால் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி நகரின் மையத்தில் அமைந்துள்ள நூலகத்தில் மலசலகூட வசதிகள் இதுவரை அமைக்கப்படவில்லை. இதனால் நீண்ட நேரம் நூலகத்தில் தரித்து நிற்க முடியாதுள்ளதாக முதியவர் ஒருவர் தெரிவித்தார்.

நூலகத்தில் கடமையாற்றுபவர்களும் இவ்வசதியீனம் தொடர்பாக அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. முக்கியமான நகரொன்றில் அமைக்கப்பட்டுள்ள இந்த நூலகத்தில் மக்களின் அடிப்படைத் தேவைகளுள் முக்கியமானதாகக் கருதப்படும் மலசல கூட வசதிகள் அமைக்கப்படாமை மக்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் கரைச்சிப் பிரதேச சபையின் மக்கள் பிரதிநிதிகளின் நிர்வாகம் நடைபெறுவதால் அவர்கள் இதற்கு முன்னுரிமை வழங்கி இந்தக் குறைபாட்டை நீக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

(க-405)

# பிள்ளையார் கதை நிறைவும் திருவெம்பாவை ஆரம்பமும்

கிளிநொச்சி, டிசெ.29

கிளிநொச்சி கணேசபுரம் அருள்மிகு சார்வார்த்த சித்தி விநாயகர் ஆலயத்தின் பிள்ளையார் பெருங்கதை இறுதிநாள் அபிஷேகமும் திருவெம்பாவை ஆரம்ப நாள் அபிஷேகமும் நாளைய தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளன.

விசேட அபிஷேகமும், பூசைகளும் நடைபெறவுள்ளதால் அடியார்களை உரிய நேரத்துடன் வருகை தந்து விநாயகனின் அருளினைப் பெற்றுக்கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் வேண்டுகின்றனர்.

(க-405)

# சேவை நலன் பாராட்டு விழா

அக்கராயன், டிசெ.29

கிளிநொச்சி அக்கராயன் பிரதேச மருத்துவமனையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கான சேவை நலன் பாராட்டு விழா நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வு தாதிய உத்தியோகத்தர் எஸ்.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது. பாராட்டுரைகளைத் தாய் சேய் மருத்துவர் எஸ்.முரளிகரன், மருத்துவமனையின் மேற்பார்வையாளர் எஸ்.பூலோகநாதன் ஆகியோர் நிகழ்த்தினர்.

ஓய்வு பெற்றவர்களான மா.கதிரவேல், வே. சண்முகதாஸ், ஞா.திருச்சிற்றம்பலம், திருமதி லட்சுமி சூசைப்பிள்ளை, செல்வி பொ.தவயோகி, திருமதி ச.லீலாவதி, இ.இராமச்சந்திரன், சி.கணேசமூர்த்தி, யா.பாக்கியராசா ஆகியோரே கௌரவிக்கப்பட்டவர்களாவர்.

இவர்கள் அக்கராயன் மருத்துவமனையில் பொதுமக்களுக்கு சிறந்த முறையில் சேவைகளை வழங்கியிருந்தனர். குறிப்பாக போர் நடந்த வேளையில் பாதிப்புக்களுடன் மருத்துவமனையை நாடிவந்த பொது மக்களுக்கு இரவு, பகல் பாராது தமது சேவைகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

(க-410)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## யதார்த்தத்தை உணரும் போக்கில்....

சிறுபான்மை இன மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் உட்பட உச்சமட்ட அதிகாரப் பகிர்வு அவசியம். சிறுபான்மை இன மக்களின் பிரச்சினைகள் இன்று நேற்று தோற்றம் பெற்றவையல்ல. அவை நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் நிலைத்து நிற்கின்றன. நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்துவதன் மூலம் சிறுபான்மை இன மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ரி. ஹஸன் அலி.

நாட்டின் இரண்டு பிரதான சிறுபான்மை இனங்களில் ஒன்றான முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான கட்சி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ். அது மட்டுமன்றி அது அரசாங்கத்திலும் அங்கம் வகிக்கிறது. அவை காரணமாக எம்.ரி.ஹஸன் அலி கூறியவை கருத்தில் கொள்ளப்பட வேண்டியவையாகும்.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருடன் நடத்தி வரும் பேச்சுவார்த்தைகள் முறிந்துபோய் விடும் அளவுக்கு அரச தரப்பு பகிரங்கப்படுத்திய அறிவித்தலின் மத்தியில், முஸ்லிம் காங்கிரஸ் வெளிக்கொணர்ந்துள்ள கருத்து மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது.

அரசமைப்புச் சட்டத்தின் பதின்மூன்றாவது திருத்தத்தில் வகை செய்யப்பட்டுள்ள, ஏற்கனவே பல வருடங்கள் நடைமுறையில் இருந்த வடக்கு - கிழக்கு இணைப்பை மீள்விக்க அரசு மறுத்துவிட்டது. (வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண சபைக்கு ஏற்கனவே இணங்கியமை பகிரங்கமான ஒன்று). இப்போது, ஆகக் கடைசியாக பதின்மூன்றாவது சட்டத் திருத்தத்தில் மாகாண சபைகளுக்கு உள்ள காணி,பொலிஸ் அதிகாரங்களைக் கையளிக்க முடியாது என்று கைவிரித்து நிற்கிறது அரசு. பெரும் குரலில் சிங்கமாகவே கர்ச்சிக்கிறது.

இந்த வேளையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் அறிவித்தல் முக்கியமானதும் அரசை விழிப்படையச் செய்யும் ஒன்றாகவும் அமைந்துள்ளது.

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்களும் முஸ்லிம்களும் சிறுபான்மை இனங்கள் என்று அடையாளப் படுத்தப்பட்டாலும், அவர்கள் தமிழ் மொழி பேசுவோரே. இலங்கைக்குச் சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னர், கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களுமே வாழ்ந்தார்கள். அந்தக் காலத்தில் அங்குள்ள இனப்பரம்பலை தமிழ், முஸ்லிம் அரசியல் தலைவர்கள் தேங்காய்ப்பூவும் பிட்டும் போல என்று வர்ணித்து வந்தார்கள். இன்று அந்த நிலை இல்லை. கொழும்பு அரசுகளால் கிழக்கில் நடத்தப்பட்ட, நடத்தப்பட்டுவரும் குடியேற்றத் திட்டங்களால் - அபிவிருத்தித் திட்டங்களால் - இரு சாராரின் நிலங்களும் அதிக விஸ்தீரணத்தில் பெரும்பான்மை இனத்தவர்களின் சொத்துக்களாக மாற்றப்பட்டு விட்டன.

அதனை மனதிற்கொண்டு, மாகாண சபைகளுக்கு காணி அதிகாரம் முழு அளவில் வேண்டும் என்று தமிழ்த் தலைவர்களும் முஸ்லிம் தலைவர்களும் ஒன்று சேர்ந்து குரல் கொடுக்க வேண்டிய வேளை இது. அரசமைப்புச் சட்டத்தின் 13 ஆவது திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்ட காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைப் பறிப்பதற்கு அரசாங்கம் கங்கணம் கட்டி நிற்கிறது. அதனைத் தடுப்பதற்கு சிறுபான்மை இனங்கள் இரண்டும் கைகோர்த்துக் கருமமாற்ற வேண்டிய காலம் இது.

இந்தியா மற்றும் சர்வதேச நாடுகளிடம், சிறுபான்மை இன மக்களின் அரசியல் உரிமைகளை வழங்குவதற்குத் தாம் தயாராக இருப்பதாகப் பேச்சளவில் - போசக்கைக்குக் - காட்டிக் கொண்டு, அவற்றை வழங்குவதில் வழுவல் நழுவல் போக்கை, இரட்டை வேடத்தை, நயவஞ்சகத்தனத்தை இலங்கை அரசு கடைப்பிடித்து வருகிறது.

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு ஒன்றைக் காண்பதற்குக் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை அரசு நழுவவிடக் கூடாது என்று நீதி அமைச்சரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவருமான ரவூப் ஹக்கீம் கடந்த வாரத்தில் அறிக்கை மூலம் தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்குக் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை நழுவவிடக்கூடாது. அரசு தனக்குள்ள வெற்றிக்களிப்பில் தீர்வை முன்வைக்க முற்படலாகாது. அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒரு நெகிழ்வுத் தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். அதனூடாக அரசின் உண்மையான கரிசனையை அறிந்து கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும் - என்று தமது அறிக்கையில் அமைச்சர் தெரிவித்திருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் நடைபெறும் பேச்சைப் பாதிக்கக்கூடிய, இறுக்கமான நெருக்குதல் இல்லாத வகையில், இரு தரப்பாரும் நெகிழ்வுத் தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அவர் அறிவுறுத்தி இருந்தார்.

அதன் பின்னர், இப்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஹஸன் அலி தனது காத்திரமான, காட்டமான கருத்தை முன்வைத்துள்ளார். தமது அபிப்பிராயம் அரசாங்கத்தின் மனதை நோகச் செய்யும் என்று தெரிந்து கொண்டும் அவர் இதனைக் கூறியிருக்கிறார்.

அரசோடு ஒட்டியிருப்பதற்காக, தமது மக்களுக்குரிய உரிமைகளை விட்டுக்கொடுக்கக் கூடாது என்ற அவரது நிலைப்பாடு அதிலிருந்து வெளிப்படுகிறது. இது யதார்த்தத்தை உணரும் போக்கைத் தொட்டுக்காட்டுகிறது.

இதனை அடிப்படையாகக் கொண்டு, தமிழ் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் தமது மக்களின் நலன்களுக்கு முதன்மைத்துவம் கொடுத்துக் கூட்டாகச் செயற்படுவது குறித்து ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய தேவை நெருங்கி வருகிறது.

இரண்டு தரப்புகளும் தத்தமது மக்களின் நலன்களை நாடிச்செயற்பட முன்வந்தால் இரண்டு தரப்புகளின் பலமும் ஓங்கும்.

அரசாங்கத்துடன் சேர்ந்து உழைப்பதால், தமது மக்களுக்குரிய தேவைகளைத் தற்காலிகமாக இலகுவில் நிறைவேற்றலாம் என்று சிந்திப்பதை விட, தமது எதிர்காலச் சந்ததியினரின் உரிமைகளை பெரும்பான்மையினர் தமது பலம் கொண்டு மிதித்து, நசுக்கிவிட இடங்கொடுக்கலாகாது என்று மனங்கொண்டால் மட்டுமே இரு சாராருக்கும் விடிவு தரும். தமிழ், முஸ்லிம் அரசியல் தலைவர்களுக்கும் - இரு சாராருக்கும்- இது பொருந்தும். உணர்வார்களா?

# வடக்கில் ஆங்கில வைத்தியம் செய்வதை ஆயுள்வேதத்துறையினர் நிறுத்தவேண்டும்

## கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரம்

அச்சுவேலி, டிசெ.29

வடபகுதியில் ஆயுள்வேதம் - சித்த மருத்துவ துறை சார்ந்த சுதேச வைத்தியர்கள் ஆங்கில மருந்து வகைகளை வழங்கி நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதைத் தடுத்து நிறுத்தி மேல் நடவடிக்கை எடுப்பதற்கு தீவிரமான கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுதொடர்பாக வடக்கில் வடக்கு மாகாண சுதேச வைத்தியர் திணைக்களம், பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் பணிமனை, பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள் என்ற மூன்று நிலை யில் தனித்தனியாகவும் கூட்டாகவும் நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த விடயம் தொடர்பாகப் பொதுமக் கள் கிராம மட்டத்தில் தகவல்களை வழங்கி வருவதால் ஆங்கில மருந்துகளை வழங்கி வைத்தியம் செய்யும் சுதேச வைத்தியர்கள் பலர் கண்காணிப்புக்கு ஆளாகி இருப்பதோடு சிலர் கையும் மெய்யுமாக ஆங்கில மருந்துகளுடன் பிடிபட்டு எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தவகையில் அச்சுவேலி மத்தியைச் சேர்ந்த பிரபல சுதேச வைத்தியர் ஒருவர் இரண்டு தடவைகள் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளார். இவரிடம் இருந்து காலாவதியான ஆங்கில மருந்து வகைகளும் கைப்பற்றப் பட்டுள்ளன. அத்துடன் குழந்தைகளுக்கு காலாவதியான மருந்துகளை அவர் வழங்கியதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இவ்வாறு கண்டுபிடிக் கப்படுவோர் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுவார்கள் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

ஆயுள்வேத - சித்தமருத்துவ மற்றும் சுதேச மருத்துவர்கள் ஆங்கில மருந்து வகைகளை நோயாளர்களுக்கு வழங்கி வைத்தியம் செய்வது, சட்டவிரோத மானதும் தண்டனைக்குரிய குற்றமும் என வடக்கு மாகாண சுதேச வைத்திய சுகாதார அமைச்சும் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக வடக்குமாகாண சுதேச வைத்திய சுகாதார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் தகவல் தெரிவிக்கையில்;

கற்றுக்கொண்ட துறைசார் நிலையில் தான் மருந்துகளை வழங்கி நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்க வேண்டும். ஆயுள்வேதம், சித்த மருத்துவம் உள்ளிட்ட சுதேச வைத்தியத்துறை சார்ந்தவர்கள் ஆங்கில மருந்து வகைகளை நோயாளர்களுக்கு வழங்கி சிகிச்சை அளிப்பதை அனுமதிக்க முடியாது.

அவர்கள் துறைசாரா நிலையில் மருந்து வகைகளை வழங்குவது எதிர் பாராத பக்க விளைவுகளை ஏற்படுத்துவ தோடு உயிர் ஆபத்தையும் ஏற்படுத்தலாம். இந்த விடயத்தில் பொதுமக்கள் மிகவும் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

சுதேச வைத்தியர்கள் சிலர் தனியார் துறையில் மருந்தாளர் கற்கை நெறியை கற்றுக் கொண்டதால் தங்களுக்கு ஆங்கில மருந்துகள் தொடர்பான அறிவு இருப்பதாகவும் காட்டிக் கொள்கின்றனர். இது ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல.

நோயாளர்கள் தாம் யாரிடம் சிகிச்சை பெறுகின்றோம் அவர் வழங்கும் மருந்துகள் துறைசார் நிலையில் சரியானவையா? என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும் - என்று கூறினார். (ம-11)

# யாழில் 12 குடும்பங்களைச் சேர்ந்த 19 சிங்கள மக்கள் வதிவிடப் பதிவு

யாழ்ப்பாணம், டிசெ.29

2010ஆம் ஆண்டில் யாழ். மாவட்டத்தில் 12 குடும்பங்களைச் சேர்ந்த 19 சிங்கள மக்கள் இங்கு வசிப்பதற்கான பதிவுகளை மேற் கொண்டுள்ளனர். அத்துடன் 981 குடும்பங்களைச் சேர்ந்த 3ஆயிரத்து 264 முஸ்லிம் மக்களும், ஒரு லட்சத்து 88 ஆயிரத்து 501 குடும்பங்களைச் சேர்ந்த 6 லட்சத்து 11 ஆயிரத்து 56 பேரும் இங்கு வசிப்பதற்கான பதிவுகளை மேற்கொண் டுள்ளனர்.

யாழ். மாவட்ட செயலகத்தால் வெளியிடப் பட்ட 2010ஆம் ஆண்டுக்கான புள்ளி விவரவியல் கையேட்டிலேயே இந்த விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

2010 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் ஒரு லட்சத்து 89 ஆயிரத்து 497 குடும்பங்களைச் சேர்ந்த 6 லட்சத்து 14 ஆயிரத்து 342 பேர் வசிப்பதாகப் பிரதேச செயலக மக்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. சிங்கள மக்களில் வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த இருவரும், யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 5பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும் பத்தைச்சேர்ந்த 5பேரும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரும். கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரும், தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 2பேரும், கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் ஒருவரும், பருத்தித் துறை பிரதேச செயலர் பிரிவில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த இருவரும் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த புள்ளிவிபரத்தில் நாவற்குழியில் தங்கியுள்ள சிங்கள மக்களின் விவரங்கள் சேர்க்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (த-15)

## தெய்வீகத்தை தெரிந்து கொள்ளும் நிலை

வெளியுலகில் காண்கின்ற எல்லாமே தெய்வீகத்தின் வெளிப்பாடு. சரியான பார்வை இல்லாததால் மனிதன் இதனை உணர்ந்து கொள்ளத் தவறி விடுகிறான். கண்ணால் கண்டு கொண்டும் உண்மையை உணர்ந்து கொள்ளாதவன் ஒரு மூடன். இந்த உலகில் மனிதன் காண்பது, செய்வது, அனுபவிப்பது தெய்வீகம்தான். ஆனால் மனிதனால் இந்த தெய்வீகத்தைக் கிரகித்துக்கொள்ள முடியவில்லை. கடவுளுக்கு ஒரு மேன்மையோ, வேறுபாடோ இல்லை. இவருக்கு செய்வது இது, செய்யக்கூடாதது இது என்று எவரும் நிபந்தனை விதிக்க முடியாது. எல்லாவற்றிலும் ''அவர் உள்ளபடியால், எல்லாமாகவும் அவர் உள்ளபடியால் அவரால் எதுவும் செய்ய முடியும். அவருக்கு மேற்பட்ட ஒரு தலைவன் இல்லை.



ஒருவன் அவரை தன் மனக் கண்முன் தோற்றுவிக்க முனைவதாயின் எல்லாவிதத்திலும் தன்னிலும் பார்க்க மேம்பட்ட ஒரு மனித உயிரில்தான் அவரைப் பார்க்கமுடியும்.

## சாயி சிந்தனை

### நாளை

மார்கழி 14, வெள்ளிக்கிழமை 30.12.2011
திதி: ஷஷ்டி மு.இ. 11.35 வரை
விநாயக ஷஷ்டி விரதம்- திருவெம்பாவை பூஜாரம்பம்
நட்சத்திரம்: சதயம் மு.ப. 11.02வரை
சுபநேரம்: 6.29-7.59 வரை, ராகு காலம்:10.59-12.29 வரை

உதயன்
29 டிசெம்பர் 2011 வியாழக்கிழமை

# தெளிவுடன் கூடிய சுயகற்றல் வெற்றியை அள்ளித் தரும்



**உயர்தரத்தில் உயிரியல் பிரிவில் தேசிய ரீதியில் இரண்டாமிடம் பெற்ற சஞ்ஜயன்**

திறமைசாலிகளான யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் விடா முயற்சியுடன் கல்வி கற்று யாழ்.மண்ணின் கல்விப் பெருமையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

தேசிய ரீதியில் இரண்டாமிடமும் மாவட்ட ரீதியில் முதலாமிடத்தையும் உயிரியல் பிரிவில் பெற்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் செல்வன் ஆனந்த நடராஜா சஞ்ஜயன் 'உதயனுக்'குத் தெரிவித்தார்.

இவர் தனது வெற்றி குறித்து உதயனுக்கு வழங்கிய விசேட செவ்வியின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தனது வெற்றி தொடர்பாக சஞ்ஜயன் மனந்திறந்து மேலும் தெரிவித்த தாவது:

எனது அப்பா ஒரு வர்த்தகர். எனக்கு ஒரு அக்காவும் அண்ணாவும் உள்ளனர். நான் ஆரம்பக் கல்வியை வவுனியா றம்பைக்குளம் பாடசாலையிலும் கொழும்பு இந்துக் கல்லூரியிலும் கற்றேன். பின்னர் 6 ஆம் தரக் கல்விக்காக சென்.ஜோன்ஸ் கல்லூரியில் சேர்ந்து உயர்தரக் கல்வியையும் சென்.ஜோன்ஸ் கல்லூரியிலேயே தொடர்ந்தேன். புலமைப் பரிசில் பரீட்சையில் 159 புள்ளியைப் பெற்று சித்தியடைந்த நான் க.பொ.த.சாதாரண தரத்தில் '9ஏ' பெற்றுச் சித்தியடைந்தேன்.

நான் உயர்தரம் படிக்கத் தொடங்கும் போதே மாவட்ட ரீதியில் முதலாமிடம் பெற வேண்டும் என்ற உயரிய இலக்கு இருந்தது. தவணைப் பெறுபேறுகளில் குறைவு ஏற்பட்டால் முயற்சி எடுத்து அடுத்தமுறை அந்தக் குறையை நிவர்த்தி செய்து கொள்வேன். வெளியிடங்களிலிருந்து கிடைக்கும் வினாத்தாள்களைப் பெற்று பயிற்சிகளைத் திரும்பத் திரும்பச் செய்து பார்ப்பேன். எனது நண்பர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களைத் தெளிவுபடுத்துவதன் ஊடாக நான் அந்தப் பாடத்தில் பூரண அறிவைப் பெறுவேன். சாதாரண தரத்தில் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்றேன். இதனால் உயர்தரத்தில் ஆங்கிலப் புத்தகங்களை இலகுவாகப் படிக்க முடிந்தது.

எந்தப் பாடத்தையும் பரீட்சை வரும் வரை என்று சேர்த்து வைக்காமல் அன்றாடம் அந்தப் பாடத்தைப் படித்துத் தெளிவுபடுத்திக் கொள்வேன். கிடைக்கும் நேரத்தைக் கல்விக்காகச் செலவழிப்பேன்.

உயிரியல் பாடத்தில் மாதிரி வினாத்தாள்களையும் கடந்த காலங்களில் இடம்பெற்ற உயர்தரப் பரீட்சை வினாத்தாள்களையும் செய்து பார்ப்பேன். மாதிரி வினாத்தாள்களைத் தொகுத்து எதிர்பார்க்கை வினாக்கள் பற்றித் திட்டமிட்டுப் படிப்பேன்.

உயிரியல் பாடத்தில் குறிப்பு எடுத்துப் படிக்கும் வழக்கத்தைப் பேணி வந்தேன். பாடங்களை மனனம் செய்யாமல் விளங்கிப் படித்தேன். நான் அன்றாடம் படித்ததால் பரீட்சை நெருங்கும் போது பதட்டம் எதுவும் ஏற்படவில்லை. எனது வெற்றிக்கு வலுச் சேர்த்த அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள், நண்பர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது வெற்றிக்கு உதவிய கடவுளுக்கும் வணக்கம் செலுத்துகிறேன்.

எதிர்காலத்தில் பரீட்சையில் தோற்ற இருக்கும் மாணவர்கள் தமது உயரிய இலக்கை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். உங்களால் முடியாதது என்று எதுவுமே இல்லை. தன்னம்பிக்கையுடன் முயல வேண்டும். இலக்கை அடைவதில் விடா முயற்சி இருக்க வேண்டும். சுயகற்றலுக்கு நேரம் ஒதுக்க வேண்டும். எனது இலட்சியம் சிறந்த வைத்தியராகி நாட்டுக்குச் சேவையாற்றுவதே. இங்கு படித்து வெளிநாடுகளில் சென்று வைத்தியராக வேலை பார்ப்பவர்கள் நாட்டுக்குத் துரோகம் செய்பவர்கள். நான் வைத்தியராகி எனது சொந்த நாட்டிலேயே சேவை செய்வேன்.

**செவ்வி : ஹரிஷ்**

# நாம் வெற்றியடைய சாதிக்க வேண்டும் என்ற மனோநிலை அவசியம்

**உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் மாவட்ட நிலையில் மூன்றாம் இடம்பெற்ற சிவாஜினி**



எங்களால் முடியாதது என்று எதுவும் இல்லை. எதுவும் முடியுமென்று தன்னம்பிக்கையுடன் முயன்றால் பரீட்சையில் சாதிக்க முடியும் .

உயர்தரப் பரீட்சையில் வணிகப் பிரிவில் மாவட்ட நிலையில் மூன்றாமிடத்தைப் பெற்ற கனகரத்தினம் மகா வித்தியாலய மாணவி செல்வி ஆரா அமுதன் சிவாஜினி உதயனுக்கு இப்படித் தெரிவித்தார்.

தனது வெற்றிகுறித்து உதயனுக்கு வழங்கிய செவ்வியின்போதே சிவாஜினி மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் தெரிவித்ததாவது:

நான் ஆரம்பக் கல்வியை நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் கற்றேன். பின் இடைநிலைக் கல்வியைக் கற்க கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் இணைந்து கொண்டேன். எனது அப்பா ஹோமியோபதி வைத்தியராகப் பணியாற்றுகிறார். அம்மா வீட்டுப் பணிப்பெண். எனக்கு இரண்டு சகோதரிகள் உள்ளனர்.

எனது புலமைப்பரிசில் பரீட்சையின் போது 98 புள்ளிகளே எனக்குக் கிடைத்தன. இந்தப் பரீட்சையில் தோல்வியடைந்த நான், சாதிக்க வேண்டும் அடுத்த பரீட்சையில் உயர்ந்த பெறுபேறு எடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் படித்தேன்.

இன்றைய புலமைப்பரிசில் பரீட்சைகள் பெரும்பாலும் பெற்றோரின் திறமைகளை மதிப்பிடுவதே அன்றி அது மாணவர்களின் திறமைகளை மதிப்பிடுவது அல்ல.

புலமைப்பரிசில் பரீட்சையில் நானடைந்த தோல்வியே ஒழுங்காகப் படித்து சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தை எனக்கு ஊட்டியது.

பாடசாலையின் பெருமையைக் காப்பாற்ற வேண்டும். நல்ல பெறுபேறு எடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கடின முயற்சி எடுத்தேன். பாடசாலை நூலகங்களை நன்றாகப் பயன்படுத்தினேன். இது எனக்கு வெற்றியைத் தந்தது.

இனிவரும் காலங்களில் பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் மாணவர்கள் நல்ல முயற்சி எடுத்துப் படிக்க வேண்டும். எங்களால் முடியாதது என்று எதையும் எண்ணக் கூடாது. முயற்சி செய்தால் எந்தப் பெறுபேற்றையும் எடுக்கலாம். மாணவர்களுக்கிடையே ஆரோக்கியமான போட்டி இருக்க வேண்டும். போட்டி மூலமே திறமை வெளிப்படும்.

நான் உயர்தரத்தில் கல்வியை ஆரம்பித்தபோதே எனக்கு '3ஏ' எடுத்துச் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் உருவானது. அதற்கு எனது ஆசிரியர்களின் ஊக்கம் வலுச்சேர்த்தது. கணக்கியல் பாடம் எனக்குக் கடினமாக இருந்ததால் அந்தப் பாடத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தேன். எனக்கு கற்றலுக்கான சூழலை ஏற்படுத்தித் தந்த எனது பெற்றோருக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

பெற்றோர்களின் அரவணைப்பும் ஆசிரியர்களின் ஊக்குவிப்பும் எனது வெற்றிக்கு வழியமைத்தன.

எனது வெற்றிக்குக் காரணமாக இருந்த அதிபர், ஆசிரியர்கள் , பெற்றோர்கள், நண்பர்கள் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களுக்கும் எனது நன்றிகள்.

# யாழ். பாடசாலைகளின் ஜி.சீ.ஈ. உயர்தரப் பெறுபேறுகள்

கடந்த ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் நீண்ட இழுபறிக்குப் பின்னர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இணையத் தளத்தில் வெளியாகின. இதனடிப் படையில் கிடைக்கப்பெற்ற பெறுபேறுகளின் விவரம் வருமாறு:

**கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்**

**உயிரியல் பிரிவு -**

த.நவநீரஜா - 2சி எஸ்,

**வர்த்தகம்**

அ. சிவாஜினி- 3ஏ- மாவட்ட நிலை3, தெ.கிரிதரன் - ஏபிசி, உ.உஷாந்தினி - 3பி, இ.கார்த்திகா - 2பிஎஸ், வீ.சுஜிதா - பிசிஎஸ், சி.மதனரூபி - பிசிஎஸ், கு.தனுசன் - பி2எஸ், மு.தனஞ்செயன் -பி2எஸ்.

**கலைப்பிரிவு**

தி.லக்சிகா - 2ஏஎஸ், உ.வைஸ்ணவி - ஏ2பி, வீ.வினுசியா - ஏபிசி, ச.சுபா ஜினி - எபிசி, சி.யமிலா - 3பி, மா.சதர்சினி - 2பிசி, சி.ரேவதி - 2பிசி, இ.ஆனந்தசீலன் - பி2சி, சி.சுரேகா - பி2சி, கு.விஜயகுமார் - 2பிஎஸ், த.சன்ஜா - பி2சி, கு.மயூரா - பி2சி க.சுகிர்தனா - 2பிசி

**சுன்னாகம் ஸ்கந்தவரோதயா**

**விஞ்ஞானப்பிரிவு**

சி.மாதுமை - 2சிஎஸ், ம.நர்மதா - 2சி எஸ், ச.சக்திதாஜினி - 2சிஎஸ், நா.சந்தியா - 2சிஎஸ்

**வர்த்தகம்**

த.கோகுலரமணன் - 3சி

**கலை**

செ.நிஷாந்தினி - 3ஏ, பு.கஸ்தூரி - ஏ2பி, சி.சாருகி - ஏபிசி, செ.காருண்யா - ஏசிஎஸ், க.தேவசேனானி - பி2சி, த.நிரோஜிதா - பி2சி.

**பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை**

**உயிரியல் பிரிவு**

சி.யோகினி - 3ஏ, செ.யோதினி - 2ஏபி, கி.பபிகா - 2ஏசி, அ.மேனகா - ஏ2பி,ந.ரூபினி - ஏபிசி, நி.சோபினி - ஏபிசி, கி.மாதங்கி - ஏ2சி.

**கணிதப் பிரிவு**

ந.பகீரதி - ஏபிசி, ம.திவ்யா - ஏ2சி.

**வர்த்தகப் பிரிவு**

ப.வினோதா - 2ஏசி.

**கலைப்பிரிவு**

கி.நவரஙணி - 3ஏ, ஈ.அகல்யா - 3 ஏ, அ.செபஅருள் நிலோயினி - 2ஏபி, ப.தர்சிகா - 2ஏபி, ப.சயந்தினி - 2ஏபி,மா.சோபனா - 2ஏபி, ஜெ.லக்ஷனா - 2ஏசி, சூ.மாதினி - ஏ2பி, க.சாமிளா - ஏ2பி, ஜெ. குலவேனி - ஏ2பி,

ஜெ.தனலட்சுமி - ஏபிசி, சு.செந்தூரி - ஏபிசி, ம.தர்சிகா - ஏபிசி, வி.மேரி பௌசிகா - ஏபிசி, ம.அகல்யா- ஏபிசி, ப.கஸ்தூரி - ஏ2சி, அ.டென்சியா - ஏ2சி, ஜெ.தனுஷா - ஏ2சி, க.அனட்ஜென்சிகா - ஏ2சி

**வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி**

**கலைப்பிரிவு**

சத்தியா ஸ்ரீ சோதிநாதன் - 3ஏ - மாவட்ட நிலை 1, புஸ்பமீரா சிவபாதம் - 2ஏபி மாவட்ட நிலை 7, நிதர்சனா கணேசபாதம் - 3ஏ மாவட்ட நிலை 9, துவாரகா நாகநாதன் - 2ஏபி மாவட்ட நிலை 11, நிரோஜா சிவராசா - 2ஏபி மாவட்ட நிலை 14, அல்வினா ரசீகரன் - ஏ2பி மாவட்ட நிலை 47, தனுசியா விக்கினேஸ்வரராசா - ஏ2பி மாவட்ட நிலை 71, சிவரூபி ஜெயராஜா - 2ஏபி மாவட்ட நிலை 79, ரதினி விநாயகம் - ஏ2பி மாவட்ட நிலை 107, விஜிதா சோமசுந்தரம் - ஏ2பி - மாவட்ட நிலை - 108, அனுசியா நடராஜமூர்த்தி - ஏபிசி மாவட்ட நிலை -216, சாயினி தர்மரத்தினம் - ஏபிசி மாவட்ட நிலை 232, இனியவள் கோணேசபிள்ளை - ஏ2பி மாவட்ட நிலை 292, காயத்திரி தவராசா -ஏபிசி மாவட்ட நிலை 325.

**வர்த்தகப் பிரிவு**

கோகிலா செல்வவிநாயகம் 3ஏ மாவட்ட நிலை 2, கிரிஜா சண்முகநாதன் - 2ஏபி மாவட்ட நிலை 13, வைதேகி வைரமுத்து - 2ஏசி மாவட்ட நிலை 20.

**விஞ்ஞானப் பிரிவு**

தேவகி கணேந்திரன் - 2ஏபி, யாழினி கணேசலிங்கம் - 2பிசி, தர்மிலா சதாசிவம் - பி2எஸ்.

**சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி**

**கணிதம்**

குலரட்ணராஜா லிங்கநேசன் - 2ஏபி, துரைசிங்கம் பவன் - ஏபிசி, விநாயகராஜா திருமாலவன் - 2பிசி.

**உயிரியல்**

கல்பனா கிருஷ்ணசாமி - 2பிசி, பவிதா பத்மநாதசிங்கம் - பி2சி.

**வர்த்தகம்**

ஜீவமோகன் மாதுரி - 2ஏபி,சௌந்தரராஜன் பானுகா - 2ஏசி, கணநாதன் கயல்விழி - 3பி, வரதராஜா கஜானி - 2பிசி, ஜமுனா சிவஞானசுந்தரம் - 2பிஎஸ், ஜெனிதா விஜயரத்தினம் - ஏபிசி, சிவசுப்பிரமணியம் சிவபாலன் - 2பிஎஸ், காயத்திரி ஜீவராஜா - பி2சி,ஜீவானந்தம் ஜீவிதா - பிசிஎஸ், பரந்தாமன் லங்கேஸ் - 3சி, விஜயரத்தினம் பிரகலாதன் - 3சி.

**கலை**

கோசலா பத்மநாதன் - ஏ2பி, தனபாலசிங்கம் திலக்ஷன் - ஏபிசி, சதீஸ்வரி செல்வராசா - ஏ2சி.

**பெரியபுலம் மகா வித்தியாலயம்**

**கலைப்பிரிவு**

மதிவதனி சுந்தரலிங்கம் - 3ஏ, ஹேமராஜி தவராசா - 2ஏபி.

## காரைநகர் பிரதேச சபையால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.29
காரைநகர் பிரதேச சபையின் ஏற்பாட்டில் பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் கடந்த வருடங்களை விட இந்த வருடம் பருவப் பெயர்ச்சி மழையால் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் அதிகம் பரவியுள்ளன.

இதன் காரணமாக நோயால் பாதிப்படைவோரின் எண்ணிக்கையும் பிரதேசங்கள் தோறும் அதிகரித்து வருகின்றது.

இவற்றைக் கட்டுப்படுத்தும் முகமாக காரைநகர் பிரதேசத்தில் டெங்கு நோய் ஒழிப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காரைநகர் பிரதேச சபையின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கைகளில் வெற்றுக் காணிகளில் நுளம்பு பரவக் கூடிய பொருள்கள் மற்றும் கழிவுப் பொருள்கள் காணப்பட்டால் அந்தக் காணிகளின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று காரைநகர் பிரதேச சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

எனவே பொதுமக்கள் தமது சூழலைச் சுற்றிக் காணப்படும் கழிவுப் பொருள்களை அதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் சேகரித்து வைத்தால் பிரதேச சபை அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம- 313)

## வளலாய் அ.மி. பாடசாலையை இயங்க வைக்கக் கோரிக்கை

அச்சுவேலி, டிசெ.29
வளலாயில் மீளக்குடியமர்வுப் பணிகள் இடம்பெற்றுள்ள நிலையில் வளலாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலையை மீண்டும் இடம்பெயர்ந்த செயற்பட வைப்பதற்கு ஏற்பாடு செய்யுமாறு வளலாய் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வளலாயில் நீண்டகால மாகச் செயற்பட்டு வந்த ''வளலாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலை'' 1985 ஆம் ஆண்டு தொடக்கம் இடம்பெயர்ந்த நிலையில் அச்சுவேலி பகுதியில் செயற்பட்டு வந்தது.

அச்சுவேலி வடக்கு றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும் அச்சுவேலி மத்திய கல்லூரியிலும் செயற்பட்டு வந்த பாடசாலை 1996 ஆம் ஆண்டு வலிகாமம் மீளக்குடியமர்வுக்குப் பின்னர் அதன் நிர்வாகச் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுப் பாடசாலையின் அசையக் கூடிய சொத்துக்கள் அனைத்தும் அச்சுவேலி மத்திய கல்லூரி நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டன.

வளலாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் கட்டடத் தொகுதி முற்றாக அழிவடைந்த நிலையில் அடித்தளம் மட்டும் காணப்படுகின்றது.

பாடசாலையை வளலாய் மீளக்குடியேற்றத்துடன் இணைந்த நிலையில் மீண்டும் செயற்பட வைப்பதற்குப் பாதுகாப்புத் தரப்பும் கல்வி அமைச்சும் இணக்கம் தெரிவித்துள்ள போதிலும் பாடசாலையை சமகால வளவசதிகளுடன் கூடியதாக கட்டுமானங்களை மேற்கொள்வதற்கு இடவசதி போதாமல் இருப்பதாகக் கூறப்படுகின்றது. (ம-11)



நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய பரிசில் தின-நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலயக் கல்விப் பணிப்பாளர் ஜீ.வி. இராதாகிருஸ்ணன் வித்தியாலய அதிபர் ச.சத்தியவரதனால் அழைத்து வரப்படுகிறார்.

## வீட்டுத் தோட்டப் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்குப் பரிசில்





யாழ்ப்பாணம்,டிசெ.29
யாழ்.மாவட்ட விவசாய திணைக்களம் நடத்திய தனியார் வீட்டுத்தோட்டம், பாடசாலை மாணவர்களுக்கான தோட்டம், பாடசாலைத் தோட்டம் அலுவலகத்துக்கான தோட்டம் ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ். திருநெல்வேலி விவசாயத் திணைக்களத்தில் யாழ்ப்பாணம் விவசாயப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீ. பாலசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்ததுடன் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கானபரிசில்களையும் வழங்கினார்.

போட்டிகளில் முதலிடம் பெற்ற விவசாயிகள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள், விவசாய உற்பத்தியில் தங்களது அனுபவங்களை விழாவில் கலந்துகொண்டோருக்கு எடுத்துக் கூறினார்கள்.

நிகழ்வில் மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார், கால்நடை அபிவிருத்தித் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் திருமதி அமிர்தலிங்கம் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

சுனாமி அனர்த்தத்தின் போது உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் இதில் இடம்பெற்றது. (த-7)

## நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு கரோல்

யாழ்ப்பாணம், டிசெ.29
நத்தார் புதுவருடத்தை முன் னிட்டு கிறிஸ்தவ மன்றங்கள் மற்றும் கிறிஸ்தவ ஆலய நிர்வாகத்தினர் ஒன்றிணைந்து பிரதேசங்கள் தோறும் கரோல் நிகழ்வுகளை நடத்தி வருகின்றனர்.

கடந்த 25 ஆம் திகதி பாலன் பிறப்பை அடுத்து தின மும் இரவு, பகல் என இந்த நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

குறிப்பாகப் பிரதேச இளைஞர்களும் கிறிஸ்தவ மதத் தலைவர்களும் ஒன்றிணைந்து வீடு வீடாகச் சென்று மத போதனைகளை வழங்குவதுடன் நத்தார் புதுவருடத்தின் மகிமையையும் எடுத்துக் கூறி வருகின்றார். (ம-313-100)

## புனரமைப்புக்கு ஒத்துழையுங்கள் இல்லையேல் நிதி திரும்பி விடும்

### காரைநகர் பிரதேச சபைத் தலைவர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.29
காரைநகர் பழைய கண்டி சிவன் வீதியை புனரமைப்பதற்கு மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இல்லையேல் புனரமைப்புக்கான நிதி திரும்பிவிடும் நிலை ஏற்படும் என்று காரைநகர் பிரதேச சபையின் தலைவர் வே.ஆனைமுகன் தெரிவித்துள்ளார்.

இந்த வீதியை அகலித்துப் புனரமைப்பதற்கு சபை துரித நடவடிக்கையை மேற்கொண்டது.

இதற்காக இந்த வீதியைப் புனரமைப்பதற்குச் சுமார் 150 லட்சம் ரூபா நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

தற்போது இந்த வீதியை அகலித்துப் புனரமைப்பதற்கு மக்கள் போதிய ஒத்துழைப்பு வழங்கவில்லை.

இதன் காரணமாக வீதி புனரமைப்புப் பணிகளை ஆரம்பிக்க முடியாத இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் இதற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதியும் திரும்பிவிடும் நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-26)

## 'யாழ்ப்பாணத் திருவிழா'வையொட்டி இம்முறை தமிழர் கலாசார போட்டிகள்

யாழ்ப்பாணம், டிசெ.29
தமிழர்களின் கலை கலாசார பாரம்பரியங்களைப் பறைசாற்றும் விதமாக 'பொங்கல் 2012 யாழ்ப்பாணத் திருவிழா' நிகழ்வு எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வை முன்னிட்டு 13 ஆம் திகதி காலை மரதன் ஓட்டப் போட்டியும் 14 ஆம் திகதி காலை சைக்கிள் ஓட்டப் போட்டியும் நடைபெறும். போட்டிகள் யாழ். முனியப்பர் கோவிலடியில் இருந்து ஆரம்பமாகும்.

படகோட்டப் போட்டி, வள்ளம் தாங்கல் நீச்சல் போட்டி ஆகியவை குருநகர் துறை முகத்தில் இருந்து ஆரம்பமாகும். பெண்களுக்கான நீச்சல் போட்டியும் 13 ஆம் திகதி நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெற்ற இந்தச் செயதியாளர் மாநாட்டில், மாற்றுத் திறனாளிகளுக்கான மூன்று சக்கர சைக்கிள் போட்டிகளும் 14 ஆம் திகதி கபடி போட்டி, கிளித்தட்டு, கிறிஸ்மரம் மரம் ஏறுதல், தயிர் முட்டியுடைதல், தலையணை மோதல் இறுதிச் சுற்று என்பன பழைய மாநகர சபை வளாகத்திலும் கலை தொடர்பான போட்டிகள் தனியார் பாடல், தனி நடனம் ஆகியவை 13 ஆம் திகதி நண்பகல் யாழ். வீரசிங்கம் மண்டபத்திலும் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது. (ஒ-7)

## திருவாதிரைத் திருவிழாவை முன்னிட்டு ஈழத்து சிதம்பரத்தில் விசேட ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், டிசெ.29
காரைநகர் சிவன் கோயிலில் நடைபெறவுள்ள திருவாதிரைத் திருவிழாவில் கலந்து கொள்ளும் பக்தர்களின் வசதி கருதி சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று காரைநகர் பிரதேச சபையின் தலைவர் வே.ஆனைமுகன் தெரிவித்துள்ளார்.

இந்தத் திருவெம்பா பூசை தொடர்பான முன்னேற்பாடு சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று காரைநகர் பிரதேச சபையின் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் ஆலயத்தில் வருடா வருடம் சிறப்பாக நடைபெறும் திருவெம்பாவையை இம் முறையும் அதேபோல் நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்களுக்கான குடிதண்ணீர் வசதி, சுகாதாரம், மலசலகூட வசதி போன்றவற்றைப் பிரதேசசபை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளது.

இதேவேளை, ஆலயத்தின் புனிதத் தன்மையைப் பேணுவதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்கள் தங்க ஆபரணங்களை அணிந்து வருவதை தவிர்க்க வேண்டும்.

எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறவுள்ள திருவாதிரையின் போது இடம்பெறும் தேர்த்திருவிழாவை முன்னிட்டுப் விசேட போக்குவரத்துச் சேவைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நிலையில் பெரும் எண்ணிக்கையில் பக்தர்கள் ஆலயத்துக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பக்தர்களின் நெரிசல்கள், திருடர்களின் நடமாட்டம் போன்றவற்றைக் கண்காணிக்க தொண்டர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படுவர் எனவும் அவர் மேலும் கூறினார். (ம- 26)

# MBBS/MD

Lugansk State Medical University
UKRAINE -EAST EUROPE
Recognized by SRI LANKA MEDICAL COUNCIL

**With A/Ls** 6 years

Minimum : 2C + 1S in Biology, Chemistry and Physics

எமது நிறுவனத்தின் மூலம் அனுப்பப்பட்ட கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, முல்லைத்தீவு, நுவரெலியா, மாத்தளை மாணவர்கள் தற்பொழுது Ukraineல் கல்வி கற்கின்றனர்.

**www.lugmedi.org**

Tel : (தமிழில்) 0777 767 818 / 4512591
Scholars Information Centre
No.01, Vaverset Place, Colombo 06.

---

15 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 . 04 . 1939



மறைவு 29 . 12 . 1996

**திருமதி குயின்ஸி கோபாலரத்தினம்**

மறைந்து பதினைந்து ஆண்டுகள்
இன்றுடன் நிறைந்தாலும் என்றும்
எம் நெஞ்சங்களில்
நிறைந்திருப்பாய் நீ

கோபு குடும்பம்.

(சி/7230)(3,6,25)

---

## Personal Class

தரம் 3 - A/L வரையான மாணவர்களுக்கு English personal Class உம் Spoken with Grammar கற்கவிரும்புபவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு: சங்கிலியன் வீதி, நல்லூர்.
**0771372280**

---

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப 1978 ஆயிலியம் 83 கிரக பாவம் கணிக அளவியலாளருக்கு (QS) மணமகள் தேவை.

தொடர்பு: **0777906263**

---

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

# 25 ஆம் பிறந்தநாள் நினைவும் 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்



மலராக
29.12.1986

சருகாக
28.12.2009

**செல்வி யசோபாரதி தில்லையம்பலம்**

(உள்ளகப்பயிற்சி ஆசிரியர் (3ஆம் வருடம்)
தேசிய கல்வியியற் கல்லூரி, மட்டக்களப்பு)
திதி:துவாதசி

(12228)(3,6,25)

வருடங்கள் இரண்டானபோதும்
நினைவில் நின்று நீங்குமா? - உன்
பூ முகம்
அழகிய சிரிப்பையும், கலகல உன் பேச்சையும்
மீண்டும் கேட்போமா? என்று
ஏங்கித்தவிக்கின்றோம்.

நாவற்குழி கிழக்கு,
கைதடி.
தற்போதைய முகவரி:
பருத்தித்துறை வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
தொலைபேசி:-0212270393

உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்,
**அப்பா, அம்மா, அக்கா குடும்பம், சகோதரி.**

---

**A/L 2011 பரீட்சைக்குத் தோற்றி, பல்கலைக்கழக அனுமதியை பெறத்தவறியதாக கருதும் கலை, வர்த்தக துறை மாணவர்களே!**

நீங்கள் சருகாய் விழவில்லை. விதையாகத்தான் விழுந்தீர்கள்.

**2012** தைத் திங்கள் 2 ல் எங்களிடம் வாருங்கள்.
ஆவணித் திங்களில் நீங்கள் மலை போல் எழுவீர்கள்.

வாருங்கள், ஒன்றிணைவோம் புதியதோர் உலகம் செய்வோம்

யாழ் நகரில் இரு இடங்களில்

(வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்) யாழ்நகர்
BECON கல்வி நிறுவனத்தில் (வெலிங்டன் தியேட்டர் சந்தி)

# D.C.M

# A/L DAY CLASS

# கலை, வர்த்தகம்

**ஆரம்பம் 2 - 1 - 2012**
திங்கள் 8.00

நிர்வாக இயக்குநர்
**S.வரதராஜன் B.A (Hons)**
(முன்னைநாள் பொருளியற்துறை விரிவுரையாளர் , பேராதனைப் பல்கலைக்கழகம்)

---

## விற்பனைக்கு

NPG XXXX இலக்க அசோக் லேலண்ட் 42 ஆசன பஸ் விற்பனைக்குண்டு.
விரும்பினால் வழியனுமதிப்பத்திரமும்(Root) வழங்கப்படும்.
தொடர்புக்கு : 0775792028

---

# உறவுகளின் சங்கமம்

சாதனைகள் படைத்த யாழ்.மத்திய கல்லூரியின் வரலாற்றை நூல் வடிவில் உருவாக்கிய மத்தியின் மைந்தன் ஆர். கே. குகநேசராஜா அவர்களையும் நிகழ்வில் பங்குபற்ற வருகை தரும் ரி.பரராஜசிங்கம், ஆர். சாந்தகுணநாதன் அவர்களையும் வருக வருக வென வரவேற்பதில் எங்கள் விளையாட்டுக் கழகம் உவகை கொள்கிறது.

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம்.

---

## சேவைகள் இடமாற்றம்

இவ்வளவு காலமும் நாதன் கொமியுனிகேசன்-பிரதான வீதி, பருத்தித்துறையில் இயங்கிவந்த சமாதான நீதிவான் சேவைகளும் அரச அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பு வேலைகளும் தற்போது அதற்கு வடக்கு பக்கத்தில் உள்ள றோயல் கட்டடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பிரதான வீதி
பருத்தித்துறை.

தகவல்:
இ.கணேசராசா

---

## படவரைஞர்களைப் பதிவு செய்தல் -2012

வலிகாமம் வடக்குப் பிரதேச சபையில் 2012 ஆம் ஆண்டுக்கான படவரைஞர்களாகத் தம்மைப் பதிவு செய்ய விரும்பும் தகுதியுடைய படவரைஞர்களும் பதிவினைப் புதுப்பிக்க விரும்பும் படவரைஞர்களும் 02.01.2012-13.01.2012 வரையான காலப்பகுதிக்குள் தங்களைப் பதிவு செய்யலாம் என்பதனை அறியத்தருவதுடன் மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் (வலிகாமம் வடக்குப் பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்) அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை. (மல்லாகம்)

சோ. சுகிர்தன்,
தவிசாளர்.
29.12.2011.

---

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA No-01 புறொயிலர் குஞ்சுகள் 30.12.2011 விநியோகிக்கப்படும் விலை 100/= வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும்.

றாஜீவ், நவாலி வீதி,
ஆனைக் கோட்டை
0776090926

---

## ஆசிரியர்கள் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கல்வி நிலையத்துக்கு தரம் 6-O/L வரை அனைத்துப் பாடங்களும் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் தேவை.

தொடர்புகளுக்கு : 0774039384

---

## பெயர் மாற்றம்

வள்ளிபுனம், புதுக்குடியிருப்பைச் சேர்ந்த மயூரன்-டிலக்ஸினி தம்பதியரின் புதல்வியான கலைநிலா என்பவரின் பெயர் 28.12.2011 இல் இருந்து மயூரன் சஞ்சிகா என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

மயூரன்-டிலக்ஸினி

---

புதியதோர் உலகம் செய்வோம்

# A/L 2014

# கலை, வர்த்தகம்

**ஆரம்பம் : 7 - 1 - 12**
சனி 8.00

# D C M


தறுக்குத் தெரு,யாழ்நகர்
(வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)

வெலிங்டன் சந்திக்கு அருகாமையில் யாழ்நகர்

நிர்வாக இயக்குநர் S. வரதராஜன்

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில் எங்களுடன் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும்
**குமாரசாமி ஜெயம்**
அவர்கள் ஓய்வுக் காலத்தில் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

வங்கி நலன்புரி விளையாட்டுக் கழகம்.

இலங்கை வங்கி,
இரண்டாம் மேற்தரக் கிளை
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/7261)(3,6,25)

## வியளம் கேட்டீர்களா?

### சித்தார்த்தன் புத்தர் பெருமான் ஆனது எவ்வாறு...?

வாழ்க்கையின் நிலையாமையை உணர்ந்தே புத்த பகவான் துறவு பூண்டார் என்பது பௌத்த மக்களது நம்பிக்கையும், நாமறிந்த வரலாறுமாகும். சுகபோகங்களில் திளைத்த சித்தார்த்த இளவரசு மாட மாளிகையிலிருந்து தெருவுக்கு வருகிறார். தெருவிலே சென்று கொண்டிருக்கும்போது ஒரு நோயாளி நோயினால் அவஸ்தைப்படுவதைக் காணுகிறார்.எனக்கும் பிணி ஏற்படுமா என வினாவுகிறார்.பிறந்த எல்லோரும் நோயினால் வருந்த நேரிடும் என்பது அவருக்கு உணர்த்தப்படுகிறது. சற்றுத் தள்ளி ஒரு வயோதிபரைக் கண்ணுறுகிறார். தனக்கும், அழகியான தனது மனைவி யசோதரைக்கும் மூப்பு வருமா என வினவுகிறார். நிச்சயமாக மூப்புவரும் என்பது அவருக்கு எடுத்துரைக்கப்படுகிறது. இறுதியில் ஒரு பிரேதே ஊர்வலத்தைச் சந்திக்கிறார். மரணம் எமக்கும் வருமா என வினவுகிறார். ஆம் எனப் பதிலிறுக்கப்படுகிறது. ஆக, பிணி, மூப்பு, சாக்காடு ஆகிய மூன்றும் உள்ள நிலையற்ற வாழ்வின் மாயைகளில் இருந்து துறவு பூண்டார் என வரலாறு கூறுகிறது.

கலாநிதி அம்பேத்கார் இந்தியாவில் ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவெள்ளியாகப் பார்க்கப்படுகிறார். அவர் கல்வியில் மேலெழுந்து உயர்ந்தவர். ஒருபுறம் அந்நிய ஆதிக்கத்திற்கு எதிராகவும், மறுபுறம் ஒடுக்கப்பட்ட மக்கள் சமூக ரீதியில் மேலெழ வேண்டியும் பாடுபட்டவர். இந்திய விடுதலைப் போராட்டத்தில் பிரிட்டன் ஆட்சிக்கு எதிராக காந்தியுடன் இணைந்து போராடியவர். மறுபுறம் காந்தியுடன் புனா ஒப்பந்தம் செய்து ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமையை உறுதிப்படுத்தியவர். சுதந்திர இந்தியாவின் சட்ட அமைச்சரான இவர் இந்திய அரசியல் சட்டத்தை வரைந்த தலைமைச் சிற்பியுமாவார். வர்ணாச்சிரம கோட்பாட்டின் கீழ் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகப் போராடிய இவர் சாதிய அமைப்பையும் மறுதலித்தார். இந்து மதத்தை நீங்கி தனக்கு ஆதரவான மக்களுடன் பௌத்த மதத்தைத் தழுவிக் கொண்டவர்.

அண்ணல் அம்பேத்கார் புத்தமும் அதன் தர்மமும் என்றொரு ஆய்வு நூலை எழுதியுள்ளார். அந்நூலில் அவர் புத்தர் துறவு பூண்டமைக்கான வரலாற்றை முன்வைக்கிறார். அந்த வரலாறு முன்வைக்கும் செய்தி புதியதாகும்.

ரோகிணி ஆற்று நீரைப் பகிர்ந்து கொள்வதில் கோலியர் மற்றும் சாக்கியர் ஆகிய இனக் குழுக்களுக்கு இடையே நீண்ட நாள் பகை இருந்தது. இடைக்கிடை பகை முற்றிச் சண்டை வெடிக்கும்.பின் தணியும். எப்போதும் அது ஒரு தீராப் பிரச்சினையாகவே இருந்தது.சித்தார்த்த மன்னருடைய ஆட்சிக் காலத்திலும் இப்பிரச்சினை பெரிதானது. இரு தரப்பும் உணர்ச்சிப் பெருக்கில் முட்டி மோதிக் கொண்டன.



இது தொடர்பாக ஆராய்வதற்கு சாக்கிய இனக் குழுப் பேரவை கூடியது.அங்கு பேசிய பலரும் கோலிய இனத்தின் மீது படையெடுக்க வேண்டுமென வலியுறுத்தினர். போர் வேண்டாம்.போரினால் தேவையற்ற அழிவுகளே மிஞ்சும். இரு இனங்களும் பேசித் தீர்வு காண்பதே சிறந்த வழி என்று சித்தார்த்தன் வலியுறுத்தினார். மன்றாடிக் கேட்டுப் பார்த்தார். அவரது பேச்சு சபையேறவில்லை. கோலியர் மீது போர் தொடுப்பது எனச் சாக்கியர் முடிவெடுத்தனர்.

இனக்குழுப் பேரவை முடிவை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்படுவதே மரபாகும். அந்த மரண தண்டனையிலிருந்து தப் புவதற்கு ஒரு வழியுள்ளது. அனைத்து இனக்குழு உரிமைகளையும், சுற்றத்தையும் துறந்து வெளியேறுவதே அந்த வழியாகும். அவ்வாறே சித்தார்த்தர் துறவு பூண்டு புத்தரானார்.

''ஆயுதம் தாங்குவது பயங்கரமாகத் தோன்றியது. இந்த மக்கள் எப்படிச் சண்டையிடுகிறார்கள் பாருங்கள். குறைந்தளவு நீரில் மீன்கள் துடிப்பது போல ஒருவரையொருவர் பகைக்கத் துடிக்கும் மக்களைக் கண்டு என் உள்ளத்தில் அச்சம் ஏற்பட்டது.நான்கு பக்கங்களிலும் உலகம் சாரமற்றதாகத் தோன்றியது. திக்குகள் நடுங்கின.சென்று தங்குவதற்கு எந்தப் புகலிடமுமே தென்பட வில்லை.மக்கள் கடைசிவரை பகை கொண்டு திரிவதைக் கண்டேன்.எனக்கு வைராக்கியம் உண்டாயிற்று'' எனப் புத்தர் துறவு பூண்ட பின்னர் உரைத்தாராம்.

இந்த விடயத்தை தமிழ்நாட்டுப் பேராசிரியர் அ.மார்க்ஸ் தனது முகப்புத்தகத்தில் (Face Book இல்) எழுதியிருந்தார்.

இதைப் பார்த்த போது இன்றைக்கும் அன்றைக்கும் இடையில் எந்த வேறுபாட்டையும் காண முடியாதிருக்கிறதல்லவா? அவர் இன்றிருந்தாலும் அவருக்குக் கிடைத்திருக்கும் பரிசு இதுவாகத்தானேயிருக்கும்!

விழிச்சான் குஞ்சு.

# மீண்டும் வருகிறது பிளாஸ்டிக் சட்டம்

# கடன் அடிப்படையில் கூடை வழங்கல்

கொழும்பு,டிசெ.29

மரக்கறி மற்றும் பழங்களை ஏற்றிச் செல்ல பிளாஸ்டிக் கூடைகளை இலகுவாகப் பெற்றுக் கொடுக்கும் முறை தொடர்பில் ஆலோசனை நடத்தி வருவதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெனாண்டோ தெரிவித்துள்ளார்.

இது குறித்து விவசாயத்துறை அமைச்சுடன் பேச்சு நடத்தி வருகிறார் என அமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.சிறிசேன தெரிவித்தார்.

கடன் அடிப்படையில் விவசாயிகளுக்கு பிளாஸ்டிக் கூடைகளைப் பெற்றுக்கொடுக்கும் திட்டத்தை விஸ்தரித்தல் தொடர்பாக பேச்சில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் பிளாஸ்டிக் கூடைகளை உபயோகிப்பது கட்டயமாக்கப்படவுள்ள நிலையில், அதற்கு முன்னர் நிவாரணம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

பிளாஸ்டிக் கூடைகளைப் பயன்படுத்த தற்போது தமது வர்த்தகர்கள் படிப்படியாகப் பழக்கப்பட்டு வருகின்றனர் என்று மெனிங் சந்தை பொது சேவை சங்க செயலாளர் காமினி ஹந்துன்கே தெரிவித்துள்ளார். (ச)

# பிராந்தியப் பாதுகாப்பிலும் இலங்கைக்கும் பொறுப்புண்டு

## மாலைதீவு ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு,டிசெ.29

பிராந்தியத்தின் பாதுகாப்பை நிலைநாட்டுவதில் இலங்கைப் படையினருக்கு முக்கிய பொறுப்பு உள்ளது என்று மாலை தீவு ஜனாதிபதி மொஹமட் நசீர் தெரிவித்துள்ளார்.

தியத்தலாவை இராணுவ முகாமில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்ட போதிலும், பிராந்தியத்தில் பல்வேறு மோதல்கள் மற்றும் சவால்கள் நிலவி வருகின்றது. அவற்றை வெற்றிகரமாக எதிர்நோக்க இலங்கைப் படையினரின் ஒத்துழைப்பு அவசியம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரின் வழிகாட்டலின் அடிப்படையில் போரின் பின்னர் படையினர் மேற்கொண்டு வரும் அபிவிருத்திப் பணிகள் பாராட்டுக்குரியவை.

இந்தநிலையில் சட்டவிரோத ஆள்கடத்தல், சட்டவிரோத மீன்பிடி, போதைப் பொருள் வர்த்தகம் உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த இலங்கையும்மாலைதீவும்இணைந்து செயற்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# இந்தஆண்டு 97 யானைகள் உயிரிழப்பு

கொழும்பு,டிசெ.29

இந்த வருடத்தில் 97 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக வன ஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உணவு, பட்டாசு மற்றும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இந்தக் காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் டபிள்யு.ஜீ.கே. பத்திரண தெரிவித்தார்.

75 யானைகள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளன. பட்டாசுகளை உண்டதன் காரணமாக 22 யானைகள் உயிரிழந்துள்ளன. இதேவேளை, கடந்த சில மாதங்களில் காட்டு யானை தாக்குதல்கள் காரணமாக 46 பேர் பலியாகியுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# விவசாயிகளுக்கு சத்தவெடி 'பிஸ்டல்'

கொழும்பு, டிசெ.29

விவசாயிகளுக்கு அவர்களின் பயிர்களை யும், கோழிப் பண்ணைகளையும் பாதுகாப்பதற்காக இதுவரை வழங்கப்பட்டு வந்த துப் பாக்கிகளுக்குப் பதிலாக சத்தத்தை மட்டும் ஏற்படுத்தும் பிஸ்டல்களை வழங்கப் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

பொதுமக்களுக்கு துப்பாக்கிகள் வழங்குவதில் கூடுதலான கட்டுப்பாடுகள் கொண்டு வரப்படுமென்றும் சத்தவெடி பிஸ்டல்களின் விலையைக் குறைக்கும் வகையில் இறக்குமதியாளர்களிடையே போட்டிச்சூழல் ஏற்படுத்தப்படுமெனவும் பாதுகாப்பு அமைச்சு அதன் முன்னேற்ற அறிக்கையில் கூறியுள்ளது.

துப்பாக்கிகளுக்கான கட்டளைச் சட்டத்தில் சத்தவெடி பிஸ்டல் ஒரு துப்பாக்கியாக கருதப்படுவதில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

# அரசியல் தலையீடுகளால் கல்வித்துறைக்குப் பாதிப்பு

கொழும்பு,டிசெ.29

அரசியல் தலையீடுகளினால் கல்வித்துறைக்கு பாதகமான சூழல் உருவாகியுள்ளது என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்கிரமநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

இங்கிரிய பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

துரதிஷ்டவசமாக அரசியல் மயமாக்கப்பட்ட காரணத்தினால் சிறப்பான கல்விமுறைமையை நாடு இழந்துள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

**விதுரவிக்கிரமநாயக்க எம்.பி.குற்றச்சாட்டு**

ஒருசிலரின் தேவைக்காக ஆரம்பப் பாடசாலைகள் இரண்டாம் நிலைப் பாடசாலைகளாக மாற்றப்பட்டுள்ளன. இத்தகைய நடவடிக்கையால் கல்வித்துறையில் குழப்பம் ஏற்பட்டுள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் வழங்கப்படுகின்றமையாலும் கல்வித்துறையில் சிக்கல்கள் வலுப்பெறுகின்றன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தங்காலை சம்பவம் தொடர்பில்

# கொலையாளியை நீதியின்முன் நிறுத்துக; இலங்கை அரசிடம் பிரிட்டன் வலியுறுத்து

கொழும்பு,டிசெ.29

பிரிட்டன் நபர் ஒருவர் தங்காலையில் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையோரை இலங்கை அரசு நீதியின் முன் நிறுத்த வேண்டும்.

இவ்வாறு கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தக் கொலைக்கு பொறுப்பானவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள் என்று தாம் நம்புகின்றனர் என்றும் இந்தச் சம்பவம் குறித்து தாம் அதிக கரிசனை கொண்டுள்ளனர் என்றும் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சுடன் நெருங்கிய தொடர்பில் உள்ளோம். சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்படும் என்று அவர்கள் எமக்கு உறுதியளித்துள்ளனர் என்று பிரிட்டன் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தக் கொலைச் சம்பவத்திற்குப் பொறுப்பானவர்களை இலங்கை அரசு நீதியின்முன் நிறுத்துவது முக்கியமானதாகும் என்று தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ச-சி)

# இலங்கையர்களுக்கு விசா வழங்குவதை இலகுவாக்குகிறது இந்தோனேஷியா

இலங்கையர்களுக்கு விசா வழங்கும் முறையை இந்தோனேஷியா அடுத்த வருடம் தொடக்கம் இலகுவாக்கவுள்ளதாக 'ஜகார்த்தா போஸ்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் பிரஜைகளுக்கு விசா வழங்குவதை இலகுவாக்க உள்ளதாக இந்தோனேஷிய வெளி விவகார அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

13 நாடுகள் கொண்ட சிவப்புப் பட்டியலில் இலங்கையையும் இந்தோனேஷியா அடக்கியிருந்தது. இந்த 13 நாட்டவர்களாலும் இந்தோனேஷியாவில் சட்டம் மற்றும் பாதுகாப்புப் பிரச்சினைகள் ஏற்படலாம் என்று இந்தோனேஷியா முன்னர் கருதியது.

எனினும், இலங்கை தற்போது பாதுகாப்பு மற்றும் பொருளாதார சூழல்களில் முன்னேற்றம் கண்டுள்ளதால் இலங்கையை சிவப்புப் பட்டியலிலிருந்து நீக்க இந்தோனேஷியா முடிவு செய்துள்ளது.

இருப்பினும் வெளிநாட்டு அமைச்சின் இந்தத் தீர்மானத்தையிட்டு குடிவரவுத் திணைக்களம் மகிழ்ச்சியடையவில்லை. ஆஸ்திரேலியாவுக்குள் ஆள்களை கடத்துவோரும் புகலிடம் கோருவோரும் இந்தோனேஷியாவை தங்கிச் செல்லும் இடமாகப் பயன்படுத்தலாம் என்று இந்தோனேஷிய குடிவரவு அதிகாரிகள் கவலையடைந்துள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தோனேஷியாவுக்கு சட்டரீதியாக வந்த இலங்கையர்களில் 10 சதவீதமானோர் மாத்திரமே வெளியேறியுள்ளனர். ஏனைய 90 சதவீதமானவர்கள் எங்கேயுள்ளனர் என்பது தெரியாமல் உள்ளது.

இதேவேளை, இந்தோனேஷியாவில் அடைக்கலம் கோரும் 2,800 வெளிநாட்டவர்கள் உள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் ஆப்கானிஸ்தான், ஈரான், ஈராக், இலங்கை மற்றும் மியன்மார் ஆகிய நாடுகளை சேர்ந்தவர்கள் என ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான தூதரகம் அறிவித்துள்ளது.

(வ)

# இலங்கையரின் காதை கடித்தார்; பிரிட்டிஷ் நபர் மீது முறைப்பாடு

கொழும்பிலுள்ள நட்சத்திர ஹோட்டலொன்றில் வைத்து இலங்கையர் ஒருவரின் காதை பிரிட்டிஷ் நபர் கடித்துத் துண்டாக்கினார் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பிரிட்டிஷ் நபர் கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு, கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

களுபோவிலவைச் சேர்ந்த ஒருவரே இந்த நடவடிக்கை குறித்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஹோட்டலில் நடைபெற்ற விருந்தொன்றின்போது மேற்படி நபர் தனது காதைக் கடித்து துண்டாக்கினார் என்று அவர் கூறியுள்ளார்.

இந்தத் தாக்குதல் நடைபெற்றபோது வெளிநாட்டுப் பெண்ணொருவர் தம்முடன் நடனமாடிக் கொண்டிருந்தார் என்றும் அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

(வ)

# பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வைகுண்ட ஏகாதசிப் பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், டிசெ.29

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் வருடாந்த வைகுண்ட ஏகாதசி பெருந்திருவிழா நேற்று முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழாக்கள் இடம்பெற்று வருகின்றன.

தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும் இந்தத் திருவிழாவில் தினமும் காலை 9 மணிக்கும், மாலை 6மணிக்கும் பூசைகள் இடம்பெறும்.

இடம்பெறும் திருவிழாக்களில் எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 4மணிக்கு சங்காபிஷேகமும், அதிகாலை 5மணிக்கு சுவர்க்க வாயில் தரிசனமும், முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும், முற்பகல் 11 மணிக்கு தேர்த்திரு விழாவும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து மறுநாள் காலை 9மணிக்கு திருவடி நிலை புறப்படலும், நண்பகல் 12 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

ஆலயத்தின் பிரதம குரு ஸ்ரீவிஷ்ணு ஸ்ரீ க.ச.சோமஸ்கந்தாச்சார்யார் தலைமையில் திருவிழாக்கள் இடம்பெறும்.

(ம-313)

# கட்டாக்காலிகளைப் பிடிப்பது சாவகச்சேரியில் ஆரம்பம்

சாவகச்சேரி, டிசெ.29

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அறுகு வெளிப் பகுதிகளில் நெற்பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் கால்நடைகளை 2ஆம் கட்டமாகப் பிடிக்கும் நடவடிக்கை சாவகச்சேரி பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதேச சபைத் தலைவர் சி.துரைராசா தெரிவித்தார்.

மேற்படி பிரதேச சபையால் பிடிக்கப்பட்ட கால்நடைகளில் ஒருதொகுதி இன்று முற்பகல் 10 மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

ஏலத்தில் விற்பனை செய்யப்படும் கால்நடைகளை பெற்றுக் கொள்பவர்கள் அன்றைய தினமே அவற்றை அந்தப் பகுதியிருந்து அகற்ற வேண்டும் என்று பிரதேச சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

(வ-131)

## சமய சந்நிதிகளில்

நவாலி சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயத்தில் கடந்த 11 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முதல் விநாயகர்விரத பெருங்கதை படிப்பு இடம்பெற்று வருகின்றது.

இறுதி நாளான இன்று வியாழக் கிழமை பிற்பகல் 3 மணி முதல் சூர முகசூரசங்காரம் இடம்பெறவுள்ளது.

(வ-100)

* * *

வட்டு- வடக்கு பிரமனாச்சி தோட்டகற்பகப் பிள்ளையார் ஆலயத்தில் விநயகர் சஷ்டிவிரத பெருங்கதைப் படிப்பு கடந்த 11 ஆம் திகதி ஆரம்பமாகி இடம்பெற்று வருகிறது.

இன்று வியாழக்கிழமை மாலை 5மணிக்கு கஜமுக சூரசங்காரம் இடம்பெற்று நாளை வெள்ளிக் கிழமை விநாயகர் சஷ்டி விரதம் பூர்த்தியடையவுள்ளது.

* * *

சாவகச்சேரி சப்பச்சி மாவடி ஸ்ரீ சக்கர ஆழ்வார் திருக் கோயிலில் சுதர்சன மகா யாகம் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணிமுதல் பிற்பகல் ஒரு மணி வரை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 7.45 மணிக்கு விநாயகர்வழிபாட்டுடன் பூசைகள் ஆரம்பமாகித் தொடர்ந்து விசேட பூசைகள் இடம்பெறும்.

ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ வி.பாலகுமாரக் குருக்கள் தலைமையில் நடைபெறும். நிகழ்வுகளில் நல்லைஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், உரும்பிராய் இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலைய இணைப்பாளர் சிவஸ்ரீ சி.சிவமோகன் ஆகியோர் ஆசியுரைகளை வழங்குவர்.

(வ-313)

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னையா அன்னலக்ஷ்மி



பெரிய பளையைப் பிறப்பிடமாகவும், கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா அன்னலக்ஷ்மி நேற்று (28.12.2011) புதன் கிழமை காலமானார்.

அன்னார் பொன்னையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான வேலுப்பிள்ளை- ஆச்சிக்குட்டி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான தங்கமுத்து, சேனாதிராசா, கனகரத்தினம், குமாரசாமி, நல்லதுரை மற்றும் முத்துத்தம்பி, நடராஜா ஆகியோரின் சகோதரியும், நாகநாதன், லோகநாதன் (கனடா), யோகேஸ்வரி, ஈஸ்வரி, ஜெகதீஸ்வரி (ஜேர்மனி), பரமேஸ்வரி, குபேந்திரநாதன் (குகன்), காலஞ்சென்ற சண்முகநாதன் ஆகியோரின் பாசமிகு தாயும், மங்கையதிலகம் (கனடா), ஸ்ரீநிவாசன், ஸ்ரீராமசந்திரன், ராஜ் குமார் (ஜேர்மனி), பாரீதரன், அகிலாண் டேஸ்வரி (யா/வயாவிளான் ம.ம.வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமியும், மேகலா (கனடா), கிருத்திகா (கனடா), ஜெய சீலன், கீர்த்திகன், பாலரதன், ஆதித்தியன், பவிசாந்தன், பவிசன், அபி நயா ஆகியோரின் பேர்த்தியும், மயூரியின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 28.12.2011 புதன்கிழமை பி.ப 4. மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி வீதி,
கொடிகாமம்.

(C/2871)(6/7/8)

தகவல்
குடும்பத்தினர்.

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்

### மாணிக்கம் தம்பையா
(சீனி அம்மான்)

மலர்வு
05.01.1933

திதி: சஷ்டி

உதிர்வு
14.01.2008



அன்பாலும், பண்பாலும்
எங்கள் எல்லோரையும் அரவணைத்து
எம்மை வழிகாட்டி வாழவைத்தீர்கள்
எம்மை கண்டிப்புடன் கல்வி கற்க தூண்டினீர்
எமது குல தெய்வங்கள் உறைவிடங்களில்
ஒளியேற்ற வேண்டும் என்ற பேரவாவுடன்
எமக்கு பொறுப்புக்களைத் தந்து
எமது வாழ்வுக்கு ஒளியூட்டினீர்கள்
அணையாத தீபமே! எம்மை வாழ வைத்த
எம் அருமைத் தெய்வமே! அப்பா நீங்கள்
எம்மை விட்டுச் சென்றீரோ மூன்று ஆண்டு
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு அகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மீசாலை மேற்கு.
மீசாலை.

(7890)(3.6.25)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## கண்ணீர் அஞ்சலி



கடந்த 15.12.2011 அன்றைய தினம்
பிரித்தானியாவில் இயற்கை எய்திய

### நல்லதம்பி பாலசுப்பிரமணியம்

அவர்களின் பூதவுடல் 29.12.2011
அன்றைய தினம் பிரித்தானியாவில்
அஸ்தமனமாவதையிட்டு எமது
கண்ணீர் அஞ்சலியைக்
காணிக்கையாக்குகின்றோம்.
பூநகரி பலநோக்கு கூட்டுறவுச்
சங்கத்தின் வளர்ச்சிக்காகக்
கடந்த 1976 - 2004 ஆம் ஆண்டு வரை இந்தச் சங்கத்தின்
கிராமிய வங்கி முகாமையாளராகவும்,
பொதுமுகாமையாளராகவும் உன்னதமாக உழைத்த உள்ளம்
**நல்லதம்பி பாலசுப்பிரமணியம்** அவர்கள் கடந்த 15.12.2011
அன்றைய தினம் இயற்கை எய்திய செய்தி அறிந்து ஊரும்,
உறவுகளுடன், தங்களுடன் இணைந்து இச் சங்கத்திற் காக
உழைத்த சொந்தங்களும் நொந்துபோய் விட்டதே..... உங்கள்
வீட்டின் உறவுகளுடன் சேர்ந்து வெந்துபோய்விட்டோமே...
*"காலம் உள்ள காலம்வரை உங்கள் ஞாபகங்கள் சங்கத்தின் பதிவுகளில் சங்கமமாகி நிற்கட்டும்"*

(12201)(2-6-25)

பூநகரி பலநோக்குக்
கூட்டுறவுச் சங்கம், பூநகரி.

உங்கள் நினைவுகளுடன்,
தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்,

## இடர் உதவி வழங்க ஐ.நா.வுக்கு நிதிப் பற்றாக்குறை

உலகின் செல்வந்த நாடுகள் சர்வதேச அவசர உத விக்கான போதுமான நிதியை வழங்கவில்லையென ஐ.நா. குற்றம் சாட்டியுள்ளது. இதனால் அடுத்த ஆண்டில் இடர்களுக்கான உதவிகளை வழங்குவதில் சிக்கல் ஏற்படும் எனவும் அது குறிப்பிட்டுள்ளது.

ஐ.நா. சபையின் இடர் முகாமைத்துவ நிதியத்தின் செயலர் அன்ட்ரூ தெரிவித்ததாவது; இந்த ஆண்டில் ஜப்பானில் ஆழிப்பேரலை, ஆபிரிக்காவில் பஞ்சம், நியூசிலாந்தில் பூமிய திர்ச்சி, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸில் வெள்ளம் என அதிகளவான இயற்கை இடர்கள் ஏற்பட்டன. இந்த நிலைமை அடுத்த ஆண்டிலும் தொடரும் என்பதால் எதிர்கால இயற்கை இடர்களுக்கு முகம்கொடுக்க எம்மிடம் நிதி இல்லை. செல்வந்த நாடுகள் இடர் ஏற்பட்ட பின்னரே நிதி உதவி களை வழங்குகின்றன. அதை முன் கூட்டியே வழங்கினால் அவசர உதவிகளை செய்ய முடியும்- என்றார்.

# தோண்டும் இடத்திலெல்லாம் பிணம் நரகமாக மாறியது பிலிப்பைன்ஸ்



இலிகான்,டிசெ.29

பிலிப்பைன்ஸில், வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை, ஆயிரத்து 500 ஆக அதிகரித்துள்ள நிலையில் தொடர்ந்து, காணாமல்போனோரைத் தேடும் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. புயலால் நரகமாகிவிட்ட மிண்டானாவில்தோண்டப்படும் இடத்தில் எல்லாம் பிணங்கள்கிடைத்து வருகின்றன.

பிலிப்பைன்ஸின் தென் பகுதியில் உள்ள மிண்டானா தீவு, வாஷி சூறாவளியால் பெரும் பாதிப்படைந்தது. சூறாவளியால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி, பலர் காணாமல் போயினர்.

ககயான் டி ஓரா மற்றும் இலிகான் நகர்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில், சடலங்களைத் தேடும் பணிகள் நடந்து வருகின்றன. தோண்டும் இடத்தில் எல்லாம் பிணங்கள் கிடைத்து வருகின்றன. இதுவரை பலியானோரின் எண்ணிக்கை, ஆயிரத்து 500 ஆக அறிவிக்கப்பட்டுள்ளது. பல கிராமங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட் டுள்ளதால், பலியானோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. எத்தனை பேர் காணாமல் போயுள்ளனர் என்பது தெரியாததால் அவர்களைத் தேடும் பணிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. இன்னும் பல இடங்களில் சோதனை நடத்த வேண்டியிருப்பதாக அந்த நாட்டின் பேரிடர் சபை தெரிவித்துள்ளது. தற்போது, 69 ஆயிரம் பேர் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மூன்று லட்சத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். (ந)

## போராட்டக்காரர்களுடன் பேச்சு: புடின் விருப்பம்

மொஸ்கோ,டிசெ.29

ரஷ்யாவில் பிரதமர் விளாடிமிர்புடினுக்கு எதிராகப் போராட்டம் நடத்தி வருபவர்களுடன் பேச்சு நடத்த புடின் தயாராக உள்ளார் என ரஷ்ய முன்னாள் நிதியமைச்சர் அலெக்சி குட்ரின் கூறியுள்ளார்.

''அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 4ஆம் திகதி நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தலை சந்திக்க புடின் தைரியமாக உள்ளார்.

இந்தத் தேர்தல் அமைதியாக நடைபெறத் தேவையான நடவடிக்கை எடுக்கவும் தயாராக உள்ளார்.

அதற்காகப் போராட்டக்காரர்களுடன் பேச்சு நடத்த வேண்டும் எனப் புடினிடம் நான் கூறினேன். அவருடன் பேசிய பின்னரே இந்தப் பேச்சு சாத்தியமானது என்பதை நான் உணர்ந்துள்ளேன்'' எனக் கூறினார். (ந)

## கிறிஸ்மஸ் தாத்தா வேடத்தில் 6 பேரை சுட்டுக்கொன்ற மனிதன்


டெக்சாஸ், டிசெ. 29

அமெரிக்காவில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் நடந்து கொண்டிருந்த அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றுக்கள் கிறிஸ்மஸ் தாத்தா உடையில் நுழைந்த ஒருவன் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவில் உள்ள டெக்ஸாஸ் மாநிலத் தலைநகர் கிராப்வைனில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் ஏராளமானோர் கலந்து கொண்டு கிறிஸ்மஸை கொண்டாடினர். அப்போது கிறிஸ்மஸ் தாத்தா உடையில் அங்கு வந்த ஒருவன் பரிசுப் பொருள் கொண்டு வந்திருப்பதாக தெரிவித்து ஒரு பொதியை எடுத்து பிரித்தான்.

அனைவரும் ஆவலுடன் அதை பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில் அந்தப் பொதியில் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து அங்கிருந்தவர்களை நோக்கிச் சரமாரியாகச் சுட்டான். இதில் குண்டு பாய்ந்து 6 பேர் உயிரிழந்துள்ளனர். தகவல் தெரிந்து பொலிஸார் அங்கு வருவதற்குள் அவன் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டான்.

விசாரணையில் கிறிஸ்துமஸ் தாத்தா வேடத்தில் வந்தவன் தீவிரவாதி என்று தெரிய வந்துள்ளது. எனினும் அவனது பெயர், அவன் சார்ந்த இயக்கம் பற்றிய விவரம் உடனடியாகத் தெரியவில்லை. இதுபற்றி விசாரணை நடந்து வருகிறது. (ந)



வடகொரியா வந்திருந்த சீன வெளியுறவு இணை அமைச்சர் ஜஹாங்க் ஜூஹிங் (இடது), அந்த நாட்டு வெளியுறவு அமைச்சர் கிம்-சங்- ஹூவானை தலைநகர் சியோலில் உள்ள அமைச்சக அலுவலகத்தில் சந்தித்துப் பேசினார்.


## வட ஆபிரிக்காவில் அல்குவைதா ஊடுருவல்

ஆப்கானிஸ்தான் வட கிழக்குப் பகுதிகளில் அதிக அளவில் முகாம்கள் அமைத்து பல ஆண்டுகளாகத் தங்கி இருந்த அல்குவைதா தீவிரவாதிகளை அமெரிக்க இராணுவம் அழித்தது.

இதையடுத்து அல் குவைதா தீவிரவாதிகள் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் நாடுகளில் இருந்து வெளியேறி வட ஆபிரிக்காவில் உள்ள நாடுகளில் ஊடுருவி இருப்பது தெரியவந்துள்ளது. இதைப் பிரிட்டன் உளவுத் துறை உறுதிப்படுத்தியுள்ளது.

இதே நிலைமை நீடித்தால் தீவிரவாதத்தின் முக்கிய தலமாக வட ஆபிரிக்க நாடுகள் மாறிவிடும் என்று பிரிட்டன் எச்சரித்துள்ளது. (ந)

## எதியோப்பியாவுக்குள் பிரவேசித்த சுவீடன் ஊடகவியலாளர்களுக்கு 11 ஆண்டு சிறை





எதியோப்பியாவில் இரண்டு சுவீடன் ஊடகவியலாளர்களுக்கு 11 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

எதியோப்பியாவிற்குள் பிரவேசித்து, சட்ட விரோதமாகத் தீவிரவாதத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய குற்றச்சாட்டில் ஜொன்சன் பெர்சன் மற்றும் மார்டின் சிப்பியா ஆகிய இரண்டு சுவீடன் ஊடகவியலாளர்கள் கடந்த ஜூலை மாதம் கைது செய்யப்பட்டனர். கடந்த வாரம் இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து இவர்களுக்கு 11 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அவர்கள், ஊடகவியலாளர்கள் என்ற ரீதியில் தமது கடமையையே மேற்கொண்டனர் என்று தெரிவித்துள்ளனர். இதனையடுத்து இந்தத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்ய உள்ளனர் என ஊடகவியலாளர்களின் சட்டத் தரணிகள் குறிப்பிட்டுள்ளனர். (ந)

## சிறை வைக்கப்பட்ட கனடா பத்திரிகையாளர் நாடு திரும்பினார்

சிரியாவில் மூன்று நாளும் ஈரானில் பதினாறு நாளும் சிறையில் இருந்த கனடாவைச் சேர்ந்த டாரதி பர்வீஸ் என்ற பெண் பத்திரிகையாளர் நாடு திரும்பியுள்ளார்.

சிரியாவில் இராணுவத்தினர் நடத்தும் வன்முறைகள் குறித்து செய்தி சேகரிக்க அந்த நாட்டுக்குச் சென்ற டாரதி பர்வீஸை அங்கு கை விலங்கு போட்டு மூன்று நாள்கள் காவலில் வைத்தனர். பின்பு ஈரானில் 16 நாள்கள் சிறை வைக்கப்பட்ட பர்வீஸ் கடும் அழுத்தங்களை அடுத்து விடுதலை செய்யப்பட்டார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் பர்வீஸ் மனிதர்கள் படும் கொடுமையையும் மனித இனத்தின் மாண்பையும் புரிந்துகொள்ள இந்த அனுபவம் உதவியாக இருந்தது. அருகிலிருந்த அறைகளில் ஆண் கைதிகளை மூர்க்கத் தனமாக அடித்து உதைத்தனர். அவர்களின் கதறலும் கண்ணீரும் எனது காதுகளில் இன்னும் ஒலித்துக் கொண்டிருக்கிறது எனத் தெரிவித்தார். (ந)

## அமைதி ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படுகிறதா? சிரியாவில் அரபு லீக் பிரதிநிதிகள் குழு ஆய்வு

டமாஸ்கஸ்,டிசெ.29

சிரியாவில் அரபு லீக்கின் அமைதி ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படுகிறதா? என்பதைப் பரிசோதிக்க நேற்று முன்தினம் அரபு லீக்கின் பிரதிநிதிகள் வந்தனர். அதேநேரம் அவர்களின் வருகைக்கு முன்பாக ஹோம்ஸ் நகரில் இருந்த சில பீரங்கிகள் அகற்றப்பட்டுள்ளன.

சிரியாவில் கடந்த 10 மாத காலமாக அதிபர் பஷர் அல் அசாத்துக்கு எதிராக மக்கள் போராடி வருகின்றனர். கடந்த இரு நாள்களாக ஹோம்ஸ் நகரின் பல்வேறு பகுதிகளில், மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். அவர்களை அடக்குவதற்காக அந்த நகரில் பீரங்கிப் படைகள் குவிக்கப்பட்டன. பீரங்கித் தாக்குதலில் பலர் பலியாகினர் என்று மனித உரிமை அமைப்புகள் கூறியுள்ளன.

இந்தநிலையில் அரபு லீக்கின் அமைதி ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படுகிறதா? என்பதை நேரில் பரிசோதிக்க, அதன் பிரதிநிதிகள் குழு, சிரியா வந்தது. அவர்கள் வருவதற்கு முன்பாக, சிரியா ராணுவத்தின் பீரங்கிகள் சில அந்த இடங்களை விட்டு அகற்றப்பட்டுள்ளன.

ஆனால், அந்தநகரில் உள்ள அரச அலுவலகங்களில் மேலும் பல பீரங்கிகள் மறைவாக வைக்கப்பட்டுள்ளதாக லண்டனில் இருந்து இயங்கும் மனித உரிமைகளுக்கான சிரியா கண்காணிப்பு அமைப்பு தெரிவித் துள்ளது. இதேவேளை அரபு லீக் பிரதிநிதிகள், நேற்று ஹோம்ஸ் நகர் ஆளுநரைச் சந்தித்துப் பேசினர். அதே நேரம், அந் நகரில் 30 ஆயிரம் பேர் திரண்ட பேரணியும் நடத்தப்பட்டது. ஹோம்ஸ் நகரில் இருந்து பீரங்கிகள் அகற்றப்படுவதைப் போன்ற காட்சிகள், தேசிய தொலைக் காட்சியில் ஒளி பரப்பப்பட்டன.

அத்துடன் அந்நகரின் புறநகர்ப் பகுதியான பாபா அமர் பகுதியில் பீரங்கிப் படைகள் நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பின்னரான மோசமான நிலையைப் பிரதிபலிக்கும் வீடியோக்கள் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. (ந)



# இன்றைய இலங்கையின் கல்விமுறை

## ஆரோக்கியமானது

எதிர்காலத்தில் மாணவர்களை நல்ல குடிமக்களாக வளர்ப்பதற்கு இன்றைய இலங்கையின் கல்வி முறையானது காத்திரமான பங்களிப்பை வழங்குவதனால் இன்றைய இலங்கையின் கல்வி முறை ஆரோக்கியமானதாகும்.

பாடங்களுக்கூடாக அறிவுத் திறன், நல்ல மனப்பாங்குகள் உருவாக்கப்படும் அதேவேளை பாடங்களல்லாத புறச் செயற்பாடுகளுக்கூடாகச் சிறந்த தலைமைத்துவம், விட்டுக்கொடுப்பு, பொறுப்புக்களை ஏற்றல், சகிப்புத் தன்மை, வெற்றி, தோல்விகளை ஏற்கும் மனப்பாங்கு, சிறந்த தொடர்பாடல் போன்ற பல பண்புகள் உருவாக்கப்படுகின்றன.

இவற்றுடன் குழுச் செயற்பாடு, செயற்றிட்டக் கற்றல் போன்றவை மூலமும் மாணவர்கள் தமது வாழ்நாளில் நீடித்து நிலைக்கக் கூடிய திறன்களையும், அனுபவங்களையும் பெற இன்றைய இலங்கையின் கல்வி முறை வாய்ப் பளிக்கின்றது.

மேலும், ஆங்கில மொழி மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருப்பதோடு கால மாற்றத்துக்கு ஏற்ப சில புதிய பாடநெறிகள் அறிமுகப் படுத்தப்பட்டிருப்பதும், மாறிவரும் புதிய மாற்றங்களை எதிர்கொள்ளக்கூடிய மாணவ சமுதாயத்தை இன்றைய கல்வி முறை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

ப.சிவானந்தன்
ஐயனார் வீதி, பருத்தித்துறை.




## ஆரோக்கியமற்றது


'ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது' என்பதைப் போல தற்போது இலங்கையின் கல்விமுறையானது காணப்படுகின்றது. அதாவது எந்தவித நோக்கமும் குறிக்கோள்களும் இல்லாது மாணவர்கள் கல்வியைக் கற்றுவிட்டு எந்த வித பயனும் இல்லாது திண்டாடுகின்றார்கள். ஆரம்பத்திலேயே மாணவர்களது திறமைகளை அறிந்து அதற்கேற்ப கல்வியைக் கற்பிக்காது எல்லோரும் எல்லாமும் கற்கலாம் என்று உள்ளமையால் மாணவர்கள் சரியாக வழிப்படுத்தப்படாது அவர்களது திறமைகள் மழுங்கடிக்கப்படுகின்றன. இதனால் எத்தனையோ இளைஞர்கள் தமது திறமைகளே தமக்குத் தெரியாத நிலையில் தெருவிலே திரிகின்றார்கள்.

கான மயிலாட கண்டிருந்த வான் கோழி தானும் அதுவாகப் பாவித்து தன் பொல்லாச் சிறகை விரித்து ஆடியதைப்போல் இன்றைய இலங்கையின் கல்வி முறையானது காணப்படுகின்றது. அதாவது மேல் நாட்டு கற்பித்தல் முறைகளை இங்கு புகுத்துவதனால் எமது நாட்டுக்கு அது பொருத்தமற்றதாகக் காணப்படுகின்றது. ஆசிரியர்களுக்கு தேவையற்ற வேலைப்பளுவைக் கூட்டி அவர்களுக்கு மன உளைச்சல்களை ஏற்படுத்துகிறதே தவிர மாணவர்களுக்குச் சரியான கல்வியை கற்பிப்பதற்கு வழிப் படுத்தப்படுவதில்லை. இதனால் பாடசாலைகளில் நம்பிக்கையை இழந்த பெற்றோர்களும் மாணவர்களும் தனியார் கல்வி நிறுவனங்களை நாடி ஓடுகின்றனர்.

கலைப் பாடங்களைக் கற்று பல்கலைக்கழகப் பட்டமும் பெற்று வெளியேறும் மாணவர்கள் எவ்வாறான வேலை செய்வது என்று தெரியாது தடுமாறுகின்றனர். அதே போல அரசும் அவர்களுக்குப் பொருத்தமான வேலை கொடுக்க முடியாதுள்ளது. எனவே வெறும் ஏட்டுக் கல்வியைக் கற்பிக்காது தொழிற்கல்வியைக் கற்பித்தால் நாடு முன்னேற்றம் அடையும். எனவே இன்றைய இலங்கையின் கல்வி முறையானது ஆக்கபூர்வமற்றதாகவே காணப்படுகின்றது.

செல்வி. ஆர்த்திகா சுலேந்திரன்
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசலை.

# தமிழன் அழிவதால் ஆவது என்ன?



இங்கு நிகழ்வது என்ன?
நம் தமிழன்தான்
அழிவதால் ஆவதென்ன?
நீதியிழந்து நியாயமிழந்து
நேர்மையும் புதைந்து போனது!
ஒற்றுமையென்பது சற்றுமின்றியே
தானே தனக்குப்
பகைவனாய் தவறிழைத்து,
உற்றார் உறவோரையிழந்து,
கற்றோர் கனிவோரையிழந்து,
பெற்றோரையிழந்து, உற்ற
நண்பரையுமிழந்து - உருக்குலைந்து
ஊனுறக்கமின்றி தேம்பியழுது
தினம் முரண்பட்ட நிலையில்
மனித நேயத்தையும் புதைத்து
தமிழனைத் தமிழன் அழிப்பதால்
ஆவதென்ன? - எம்
நாடுதான் உயருமா?

க. கலையரசி,
நுணாவில்.

# இளவல் வட்டத்தின் 'கேள்விக்கு என்ன பதில்' பகுதியில் பரிசில் பெற்றோர் விவரம்

**போட்டி இல: 36**
உதயகுமார் பிரதீப் (சங்குவேலி வடக்கு, மானிப்பாய்), ந.சாளினி (புலோலி மத்தி, பருத்தித்துறை), சி.துளசிகரன் (லோட்டன் றோட், தம்பர் லேன், மானிப்பாய்).

**போட்டி இல: 37**
யோ.டண்ஸ்ரன் (சில்லாலை றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை), பு.சுமிதா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), தி. கிருஷாந்தி ( மீசாலை கிழக்கு, மீசாலை),

**போட்டி இல: 38**
தக்சாயினி 'கணேசபவனம்' கட்டுடை, மானிப்பாய், கே. அரசேஸ் வரன் (கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்), வ.நிரோஜன் - (மட்டு, இந்துக் கல்லூரி, சித்தன்கேணி),

**போட்டி இல: 40**
க.ஞானமுத்து (கைதடி மேற்கு, கைதடி), இ.சஞ்சிதா (ஏழாலை மேற்கு, ஏழாலை), உ.தக்சாயினி (தரம்-10 உடுவில் மகளிர் கல்லூரி),

**போட்டி இல: 41**
வி.தியாகரன் (ஆர்.டி.எஸ். ஒழுங்கை, மல்லாகம்), மு.அனுசன் (கண்டுவில் ஒழுங்கை, கண்டி றோட், சாவகச்சேரி), வா.ஜெயபிரசன்னா (கல்லூரி வீதி, பருத்தித்துறை)

**போட்டி இல: 42**
க.நர்மிகா (மடத்தடி மேற்கு, சாவகச்சேரி), ம.ஜனார்த்தனன் (மே/பா க. நல்லதம்பி துணவி பாடசாலை வீதி வட்டுக்கோட்டை)

**போட்டி இல: 43**
க.தெட்சணாமூர்த்தி (மாலில் வீதி, புலோலி தெற்கு, புலோலி).

**போட்டி இல: 44**
சி.திருபா- (வரணி இயற்றாலை, வரணி), சா.ஜிந்துஜா (குமரக்கோட்டம், கோண்டாவில்.), ஜே.யூட் றொயின் சன் (ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறை)

**போட்டி இல: 45**
சா.பபிசன் (வன்னியசிங்கம் வீதி, கோண்டாவில் கிழக்கு), ச.கோபிதன் (பழம் றோட், கந்தர்மடம்), ப.கதிர் தர்சினி ( புன்னாலைக் கட்டுவன் தெற்கு, சுன்னாகம்)

**போட்டி இல: 46**
அ.சயந்தன்- (49 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்), உ.தக்சாயினி - (கணேச பவனம், பொன்னாலை வீதி, கட்டுடை), லூக்டி மேல்சன் (குருநகர், யாழ்ப்பாணம்).

**போட்டி இல: 47**
ந.செல்வகுமார்- (அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.), இ.நிர்மலா (சத்திரந்தை களபூமி, காரைநகர்), ம.சங்கவி (நவாலி வீதி, ஆனைக்கோட்டை)

**போட்டி இல: 48**
செ.செந்தூரன் (41/1, பிரம்படி வீதி, கொக்குவில்), கோ.வேணுயா (2011 கலைப்பிரிவு, வட்டுக் கோட்டை இந் துக் கல்லூரி).

**போட்டி இல: 49**
சு.தனுஷியா (சந்நிதி வீதி, உடுப்பிட்டி) டிலக்ஷனா (நவாலி வடக்கு, மானிப்பாய்), வா.ஜெயபிரசன்னா (கல்லூரி வீதி, பருத்தித்துறை).

**போட்டி இல: 51**
இ.நிஜன் (மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி), ஜெ.ஆரூரன் (பிரம்படி லேன், கொக்குவில்.

**போட்டி இல: 53**
சுகந்தினி (கருணாலயம், திருநெல்வேலி), கோ.டினா (பெரிய மாவடி வீதி, சாவகச்சேரி), இ.கீர்த்தனா (கரவெட்டி மேற்கு, கரவெட்டி)

**போட்டி இல: 54**
செ.செந்தூரன் (41/1, பிரம்படி லேன், கொக்குவில்), ந.மிதுனா (தரம்-6, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, அ.பிரியங்கா- (கம்பர் மலை, வல்வெட்டித்துறை)

மேற்குறிப்பிட்ட பெயர் விவரங்களில் மாற்றங்கள் இருப்பின்
**'இளவல்கள் வட்டம்',**
*'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்*
என்னும் முகவரிக்கு உடன் அனுப்பி வைக்கவும்.

**பரிசில் வழங்கல் விரைவில்**

## இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

**தமிழர் திருநாளான தைப்பொங்கல் இன்று**

| பாரம்பரியங்களின்படி கொண்டாடப்படுகின்றது | பாரம்பரியங்களை மீறி கொண்டாடப்படுகின்றது |
| --- | --- |
| ☐ | ☐ |

பெயர்: ..............................................
முகவரி: ..............................................
அடையாள அட்டை இல..
..............................................

உங்கள் தீர்ப்புக்களை 29.12.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

**'இளவல்கள் வட்டம்',**
*'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

பெயர் :-..............................................
முகவரி :- ..............................................
..............................................
.................... திகதி
.................... கையொப்பம்


கிழக்கில் சுழல்காற்று அபாயம்:

# கடற்பகுதிக்குச் செல்ல வேண்டாம் என்று மீனவர், கடற்படையினருக்கு எச்சரிக்கை

திருகோணமலை,டிசெ.29

திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்ட கடற்பகுதிகளில் மீன்பிடி மற்றும் கடற்படை நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாமென வளி மண்டலவியல் திணைக்களம் மீனவர்கள் மற்றும் கடற்படையினருக்கு நேற்று அறிவுறுத்தியிருந்தது.

அதிக காற்றழுத்தம் மற்றும் சுழல் காற்று ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதால் இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.



கிழக்கு மாகாணத்தில் மூன்று நாள்களாகக் கடுமையான கடல் கொந்தளிப்பு காணப்படுகின்றது. இதனால் மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. மட்டக்களப்பு மாவட்டத்தில் கரையோரப் பிரதேசங்களில் பேரிரைச்சலுடன் கடல் கொந்தளிப்பதை அவதானிக்க முடிகின்றது. கடல் அலைகள் மிகவேகமாக முன்னோக்கி வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

காத்தான்குடியில் கடந்த திங்கட்கிழமை கடல் நீர் முன்னோக்கி வந்ததால் மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. இதனால் கரையோரப் பிரதேச மக்கள் பெரும் அச்சமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# கஞ்சாசேனை சுற்றிவளைப்பு; சந்தேகத்தில் ஒருவர் கைது

பதுளை, தல்தென பகுதியில் கஞ்சாசேனை ஒன்றை சுற்றிவளைத்த பதுளை குற்றவியல் தடுப்பு பொலிஸ் பிரிவினர் அங்கிருந்து காயவைத்த 150 கஞ்சா செடிகளைக் கைப்பற்றியதுடன் சந்தேகத்தின்பேரில் ஒருவரைக் கைதுசெய்துள்ளனர்.

நீண்டகாலமாக கஞ்சாச் செடிகளை வளர்த்து காயவைத்து விற்பனை செய்துவருவது தொடர்பாக பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து தல்தென, கிதுல்லந்த பிரதேசத்தை முற்றுகையிட்ட பதுளை குற்றவியல் தடுப்பு பிரிவு பொலிஸார் இந்த நபரைக் கைதுசெய்தனர். இந்த சந்தேக நபர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (ச)

# பிங்கா ஓயாவைக் கடக்க நிரந்தப் பாலம்

கண்டி, டிசெ.29

கண்டி, கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில் பிங்கா ஓயாவை கடப்பதற்கான நிரந்தர பாலம் அமைக்கும் நடவடிக்கை அடுத்த வருடம் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் தலைவர் ஆனந்த ஜயவிலால் தெரிவித்துள்ளார்.

பிங்கா ஓயாவை கடப்பதற்கு நிரந்தர பாலம் இல்லாத தினால் 5 கிராமங்களைச் சேர்ந்த சுமார் 2,000 குடும்பங்கள் பெரும் சிரமத்துக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இந்த இடத்தில் நிரந்தர பாலத்தை அமைப்பதற்காக 1995 ஆம் ஆண்டு நெடுஞ்சாலைகள் அமைச்சராக இருந்த ஏ.எச்.எம்.பௌஸி அடிக்கல் நட்டிருந்தார். நடப்பட்ட அடிக்கல் காணாமல்போனதாகவும் பாலம் இன்னும் கட்டப்படவில்லையெனவும் அப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (ச)

# சதாம் ஹுசைன் கிராமத்தின் பெயர்மாற்றம் இடைநிறுத்தம்

ஏறாவூர்,டிசெ.29

ஏறாவூர், சதாம் ஹுசைன் கிராமத்தின் பெயரை மாற்றும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பற்று பிரதேசசபைத் தவிசாளர் எஸ். வினோத் அறிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண அமைச்சரவையின் தீர்மானம் மற்றும் இந்தக் கிராம மக்களின் வேண்டுகோள் ஆகியவற்றின் காரணமாகவே பெயரை மாற்றும் செயற்பாட்டைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தக் கிராம மக்கள் என்னிடம் மனு ஒன்றையும் கையளித்துள்ளனர். இதனால் மீண்டும் ஒரு தடவை மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி தீர்மானமொன்றை எடுக்கவுள்ளோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதுவரை இந்தக் கிராமத்தின் பெயரை மாற்றும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

# அக்கரைப்பற்று மாநகர சபையின் பட்ஜெட்டை பகிஷ்கரித்தார் தவம்

## அரசியல் நோக்கம் கொண்டது என்றும் சாடினார்

ஆலிம்நகர். டிசெ.29

அக்கரைப்பற்று மாநகர சபையின் 2012 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நேற்றுமுன்தினம் சமர்ப்பிக்கப்பட்டபோது சபையின் உறுப்பினரும், சபையின் முன்னாள் தவிசாளருமான ஏ.எல்.தவம் அதனை எதிர்த்து பகிஷ்கரிப்புச் செய்தார்.

இது தொடர்பாக அவரைத் தொடர்புகொண்டு கேட்டபோது, மக்களுடைய அபிலாஷைகளுக்கு முன்னுரிமை வழங்காமல் வெறும் அரசியல் நோக்கங்களுக்காக மட்டும் தயாரிக்கப்பட்டுள்ள இந்த வரவு - செலவுத் திட்டத்தை பகிஷ்கரிக்கும் நோக்கில் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

"தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்த ஊழியர்களை அரசியல் பழிவாங்கும் நோக்கத்தோடு வேலை நீக்கம் செய்துவிட்டு அதே இடங்களுக்கு புதியவர்களை நியமனம் செய்து அவர்களுக்கு சம்பளம் வழங்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இந்த வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவு வழங்க முடியாது.

சோலை,ஆதன வரி மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது. அந்த வரிவிதிப்பை உள்ளடக்கியே இந்த வரவு - செலவுத் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது- என்றார். (ச)

# குச்சவெளிப் பிரதேச சபையின் 'பட்ஜெட்' நிறைவேற்றப்பட்டது

திருகோணமலை,டிசெ.29

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்டுப்பாட்டில் உள்ள குச்சவெளிப் பிரதேச சபையின் முதலாவது வரவு - செலவுத்திட்டம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற சபையின் விசேட கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக சபையின் தலைவர் ஏ.முபாராக் தெரிவித்தார்.

இந்த வரவு -செலவுத் திட்டம் மக்களுக்கு நன்மை பயக்கும் விதத்தில் தயாரிக்கப்பட்டது.

எதிர்க்கட்சிகளான ஐக்கிய தேசியக்கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றை சேர்ந்த உறுப்பினர்களின் ஆதரவுடன் இந்த வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப் பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச)



கிழக்கு மாகாண ஆளுநராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ள அட்மிரல் மொகான் விஜயவிக்ரம நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை திருகோணமலை அலுவலகத்தில் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண அமைச்சர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் மாவட்ட அரச அதிபர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# ரயர் தொழிற்சாலை தீயில் நாசம்


ஹொரணை, அரமனகொல்ல கைத் தொழில் பேட்டையில் இயங்கிவந்த ரயர் தொழிற்சாலை தீயினால் எரிந்து நாசமாகியுள்ளது.

தொழிற்சாலையில் இருந்த ரயர்கள், ரியூப்புகள், உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் என்பன முற்றாக எரிந்துள்ளன.

ஹொரணை நகரசபை தீயணைக்கும் பிரிவுக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து, தீயணைக்கும் பிரிவினரும் பொலிஸாரும் இணைந்து செயற்பட்ட போதிலும் ஆலை முற்றாக எரிந்து அழிந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தொடங்கொட பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# மாணவர் சங்கம் தடை செய்யப்படுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது



## லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.29

பல்கலைக்கழக மாணவர் சங்கங்களை தடை செய்ய அரசு முன்னெடுக்கும் திட்டங்களை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக சங்கங்களுக்குத் தடை விதிப்பதன் மூலம், அங்கு காணப்படும் திறமைமிக்க செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டை இடப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழகத்தில் பகிடிவதை சம்பவங்கள் பதிவாகினால் அதனோடு தொடர்புடைய மாணவர்களுக்கு தண்டனை வழங்குவதை விடுத்து மாணவர் சங்கங்களுக்குத் தடை விதிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கண்டியின் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஜனாதிபதி மஹிந்த தேரர்களுக்கு விளக்கம்

கொழும்பு,டிசெ.29

கண்டி நகரின் அபிவிருத்தி குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீட தேரர்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

நேற்று புதன்கிழமை கண்டிக்குச் சென்ற ஜனாதிபதி, தலதாமாளிகையில் வழிபாடுகளில் ஈடுபட்டு தேரர்களிடமும் ஆசி பெற்றனர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கண்டி வாவியை சுத்தம் செய்து புனரமைத்தல் உள்ளிட்ட பல அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஜனாதிபதி தேரர்களிடம் விளக்கமளித்துள்ளார்.

கண்டி நகரில் காணப்படும் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி, அதற்கென முன்னெடுக்கப்படவுள்ள வேலைத் திட்டம் குறித்தும் தெரிவித்துள்ளார்.

அரசாக இருக்கட்டும் எதிர்க்கட்சியாக இருக்கட்டும் சிறந்த திட்டங்களை யார் முன்வைத்தாலும் அதற்கு தமது ஆசீர்வாதம் எப்போதும் உண்டு என்று அஸ்கிரிய பீட உடுகம ஸ்ரீ புத்தரக்பித்த தேரர் ஜனாதிபதியிடம் கூறியுள்ளார். (ச)

## தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
உறவினர் அல்லது சக ஊழியர் ஒருவருக்கு உதவி செய்யலாம். பிள்ளைகளின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். தொழில் விடயங்களில் மனக்குழப்பங்கள் இல்லாமல் தெளிவான முடிவு எடுப்பீர்கள். உங்களின் பழைய அனுபவங்கள் பற்றி மற்றவர்களிடம் பெருமையாகப் பேசுவீர்கள். வெற்றிகரமான நாள்.

**இடபம்:**
பயணங்களால் அனுகூலம் பெறலாம். சொத்துக்கள் வாங்கப்போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. எதிர்கால நலன் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். வீட்டு உபயோகப் பொருள்களால் செலவுகள் ஏற்படலாம். சிலருக்குக் கடன் கொடுக்க நேரிடலாம். குடும்ப உறுப்பினர்களுக்குத் தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம்.

**மிதுனம்:**
ஆரோக்கியக் குறைவுகளால் அவதிகளுக்கு ஆளாகலாம். பண விவகாரங்களில் சிலர் சொல்லிய வாக்கைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். வீட்டுக்குத் தேவையான பொருள் ஒன்றை வாங்க ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களுக்கு அலையலாம். நினைத்த காரியத்தில் தடை ஏற்படுவதால் மன உளைச்சலுக்கு ஆள்படலாம்.

**கடகம்:**
நண்பர்கள் வட்டம் விரிவடையும். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். அலைச்சல் இருந்தாலும், சில வேலைகளை வெற்றிகரமாக முடிக்கும் வாய்ப்பு உருவாகும். சந்தோஷமான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். சில விடயங்களில் மற்றவர்களுக்காக விட்டுக் கொடுப்பீர்கள். அம்மன் வழிபாடு ஆனந்தம் தரும்.

**சிங்கம்:**
மனதில் புதிய எண்ணங்கள், சிந்தனைகள் தோன்றும். அரை குறையாக விட்ட சில பணிகளை முடுக்கிவிட முற்படுவீர்கள். உறவினர்கள், நண்பர்கள் உங்களுக்கு உதவிக் கரம் நீட்டக் காத்திருப்பர். விவசாயிகள் கடும் அலைச்சல், வேலை நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவருக்கு பதில் உதவி செய்வீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றியுண்டு.

**கன்னி:**
நேரம் பார்த்து காரியம் சாதிப்பதில் அக்கறை காட்டுவீர்கள். பெரிய மனிதர்கள் சிலர் உங்களிடம் கோபமாக நடந்து கொள்வர். பிள்ளைகள் வழியில் சிறு சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். கடன் பிரச்சினைகளால் சங்கடங்களுக்கு ஆள்படலாம். நீண்ட நாள்களாகச் சந்திக்காத சிலரைச் சந்திக்கலாம். இறை வழிபாடுகளில் நாட்டம் செல்லும்.

**துலாம்:**
தடுமாற்றம் இல்லாமல் எதிலும் அசட்டுத் துணிச்சலுடன் செயற்படுவீர்கள். வாகனப் பயணங்கள் சந்தோஷம் தருவதாக அமையும். கூட்டுத் தொழில் புரிவோர் கோபதாபங்களைக் காட்டாமல் பொறுமையாகச் செயற்பட வேண்டும். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். உறவினர்கள் சிலரைப் பார்த்து பொறாமை, ஆதங்கம் அடைவீர்கள்.

**விருச்சிகம்:**
எதிலும் புத்திசாலித்தனமாக செயற்பட்டு பாராட்டுப் பெறுவீர்கள். உங்களின் வேகத்துக்கு மற்றவர்கள் செயற்படாமல் மந்தமாக இருப்பதால் எரிச்சல் அடையலாம். பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். நண்பர்கள் ஆதாயம்பெற நீங்கள் உதவிகரமாக இருப்பீர்கள்

**தனுசு:**
விருந்து, உபசரிப்புகளால் சந்தோஷம் அடையலாம். உறவினர் அல்லது நண்பர் ஒருவருக்கு பண உதவி செய்யலாம் அல்லது பொருள்கள் வாங்கிக் கொடுக்கலாம். உங்களிடம் ஆதாயத்தை எதிர்பார்த்து செயற்படும் சிலரை அடையாளம் கண்டு கொள்வீர்கள். பலமணி நேரமாகும் என்று நினைத்த காரியம் ஒன்று சுலபமாக முடிந்து விடலாம்.

**மகரம்:**
தொல்லை கொடுத்தவர்கள் எல்லை விட்டுச் செல்வர். உங்களின் திறமையை வெளிப்படுத்த சந்தர்ப்பம் சாதகமாக அமையும். வெளிநாட்டுத் தொடர்புடையவர்களுக்கு எதிர்பார்த்த நல்ல தகவல்கள் வரும். நிதியுதவி, கடனுதவிபெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. கேளிக்கை, கொண்டாட்டம் உண்டு.

**கும்பம்:**
சோர்வு, சோம்பல் அதிகரிக்கும். சிலரிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் சாக்குப் போக்குச் சொல்லிச் சமாளிப்பீர்கள். திட்டமிட்ட வேலை ஒன்றை திடீரென மாற்றி அமைப்பீர்கள். கொடுக்கல் வாங்கல்களில் எச்சரிக்கையோடு செயற்பட வேண்டும். தொழில் ரீதியாக சிலருக்கு உதவி செய்யும் சூழ்நிலை உருவாகலாம்.


**மீனம்:**
உடல் உபாதைகள் நீங்கி உற்சாகம், தெம்பு பெறுவீர்கள். நீண்ட நாள்களாக நடக்குமோ, நடக்காதோ என்று நினைத்த காரியம் ஒன்று எளிதில் நடக்கலாம். வியாபாரிகள் புதிய வாடிக்கையாளர்களைப் பெறலாம். அரசியல்வாதிகள் வீண் பேச்சு பேசுவதைத் தவிர்ப்பது நல்லது. நன்றியுடன் நடந்து கொண்ட ஒருவரை நினைத்துப் பார்ப்பீர்கள்.

# தமிழர்கள
# தீர்வு தாம

''என்னைத் தங்களின் அடிமையாக வைத்திருக்கப் பார்க்கிறது மேற்குலகம். ஆனால் அதற்கு நான் இடமளிக்கமாட்டேன்'' என்று சீறியிருக்கிறார் ஜனாதிபதி. அதேசமயம் தமிழர் தலைமைகளால்தான் தீர்வு தாமதமாகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இருந்து வெளியாகும் 'டெக்கான் குரோனிக்கல்' ஆங்கில நாளேட்டின் செய்தியாளர் பகவான் சிங்குக்கு அலரி மாளிகையில் வைத்து அளித்துள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

டெக்கன் குரோனிக்கல் நாளேட்டில் வெளியாகியுள்ள இந்தச் செவ்வியின் முழு வடிவம் இது.



### பிரித்தானியர் செய்யாததையா செய்துவிட்டோம்?

**டெக்கான்:** இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்தக் கோரும் மேற்கு நாடுகளை எப்படி அணுகப் போகிறீர்கள்?

**மஹிந்த:** மேற்கு நாடுகளில் எஞ்சியுள்ள புலிகள்தான், இலங்கைக்கு எதிராக அடிப்படையற்ற விவகாரங்கள் குறித்து, அங்குள்ள அரசியல் தலைவர்களுக்கு அழுத்தம் கொடுக்கிறார்கள். மேற்கு நாடுகள் கஷ்மீர் தொடர்பாகவும், இலங்கை தொடர்பாகவும் தமது நாடாளுமன்றங்களில் பேசுகின்றன. ஆனால் ஆப்கானிஸ்தானிலும், பாகிஸ்தானிலும், ஈராக்கிலும் தாம் என்ன செய்தன என்பது தொடர்பில் மௌனம் காக்கின்றன.

இலங்கையில் 1880 ஊவா கிளர்ச்சியின் பின்னர், 14 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் அனைவரையும் பிரித்தானியர்கள் கொன்றனர். மக்களைப் பட்டினி போடுவதற்காக அங்குள்ள நீர்த்தேக்கங்கள் அனைத்தையும் அழித்தனர். நிலத்தைக் கைப்பற்றினர்.

இந்தியாவிலும் அதையே செய்தனர். அவர்கள்தான் இப்போது மனித உரிமைகள் பற்றிப் பேசுகின்றனர். மேற்குலகம் என்னைத் தங்களின் அடிமையாக வைத்திருக்கப் பார்க்கிறது. அதற்கு நான் தயாராக இல்லை.

### இந்தியாதான் முக்கியம்

**டெக்கான்:** நீங்கள் சீனாவை நோக்கிச் சாய்வதாக ஓர் உணர்வு இந்தியாவில் உள்ளது. இந்தியப் பெருங்கடலில் இந்தியாவின் பூகோள அரசியல் நிலையை அது காயப்படுத்தக்கூடும் அல்லவா?

**மஹிந்த:** என்னைப் பொறுத்தவரையில் இந்தியாதான் முதலாவது. மற்றெல்லோரும் இந்தியாவுக்குப் பின்னர்தான் வரமுடியும்.

நான் பதவிக்கு வந்தவுடன் இந்தியாவுக்குச் சென்று அதன் ஆதரவைப் பெற்றேன். அதற்குப் பிறகு, ஐ.நா., அமெரிக்கா, பிரிட்டன் பற்றி நான் கவலைப்படவில்லை.

உண்மையில், விடுதலைப் புலிகளின் கப்பல்கள் தொடர்பாக முக்கியமான தகவல்களை வழங்கி உதவியது அமெரிக்காதான். அதன் மூலம் அவற்றைக் கடலில் வைத்து அழிப்பது சாத்தியமானது.

அதுபோல் சீனாவும் உட்கட்டமைப்பு திட்டங்களை நிறைவேற்ற வந்துள்ளது. நான் உங்களுக்குச் சொல்ல வேண்டும், அம்பாந்தோட்டைத் துறைமுகம் உள்ளிட்ட சீனாவுக்கு நாம் வழங்கிய ஒவ்வொரு திட்டத்தையும் முதலில் இந்தியாவிடம்தான் வழங்கினோம். ஆனால், அங்கிருந்து பதில் வரவில்லை. கொழும்புத் துறைமுக விரிவாக்கத் திட்டம் குறித்தும் விளம்பரப்படுத்தினோம். சீனா மட்டுமே வந்தது.

### 54வீத தமிழர்கள் வடக்கு - கிழக்குக்கு வெளியே

**டெக்கான்:** போர் முடிவுக்கு வந்து இரண்டரை ஆண்டுகள் முடிந்து விட்டன. விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டு விட்டனர். ஆனாலும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற வெற்றி, தமிழர்கள் சுயநிர்ணய உரிமையைக் கோருவதை வெளிப்படுத்தியுள்ளது. இந்த நிலையில் தமிழர்களின் கவலைகளுக்கு எவ்வாறு பதிலளிக்கப் போகிறீர்கள்?

**மஹிந்த:** அந்தத் தேர்தல்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின் அடிப்படையில் நடைபெற்றன. கணிசமானளவு வாக்குகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகவும் விழுந்துள்ளன. வடக்கு, கிழக்குக்கு வெளியேதான் 54 வீதமான தமிழர்கள் வாழ்கின்றனர் என்பதை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

நாம் ஒரு நிலையான அரசியல் தீர்வில் கவனம் செலுத்துகிறோம். ஆனால் அது பரந்துபட்டளவில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். சிறப்பாக போருக்குப் பிந்திய சூழலில் அது ஏற்புடையதாக இருக்க வேண்டும்.

> "இரா.சம்பந்தன் சிலருக்குப் பயப்படுகிறார் போலத் தோன்றுகின்றது. இப்போது அவர்கள் அமெரிக்காவுக்குப் போய் முறையிடுகிறார்கள். இதற்கு எம்மால் ஒன்றும் செய்ய முடியாது. பிரபாகரன் காலத்தில் செயற்பட்டது போன்றே செயற்படுகின்றனர்."

### மாகாண சபையைப் பலப்படுத்துவோம்

**டெக்கான்:** அதிகாரப் பகிர்வை எப்படி முன்வைக்கப் போகிறீர்கள்?

**மஹிந்த:** அதிகாரப் பகிர்வுக்காக நாங்கள் ஏற்கனவே வடக்கு தவிர ஏனைய மாகாணங்களில் மாகாண சபைகளை நிறுவியுள்ளோம். வடக்கிலும் கூட அதனை அமைக்கவுள்ளோம்.

மாகாண நிர்வாகத்தை எப்படி வலுப்படுத்துவது, மேம்படுத்துவது என்றும் பெரும் பொருளாதார

# ால்தான்
# திக்கிறது



மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளைப் பகிர்ந்து கொள்வது குறித்தும் அவர்கள் கலந்துரையாட வேண்டும்.

### சம்பந்தன் பயப்படுகிறார்

**டெக்கான்:** நீங்கள் முன்வைத்துள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு யோசனை பயனற்றது என்றும், அதுபோன்ற பல குழுக் கள் ஏற்கனவே நியமிக்கப்பட்ட போதும், அரசியல் பிரச்சினைகள் இன்னமும் உள்ளன என்றும் பலரும் கூறுகின்றனரே?

**மஹிந்த:** சிக்கலான எந்தப் பிரச்சினைக்கும் ஜனநாயக முறைப்படி நாடாளுமன்றத்தின் மூலம் தீர்வு காண நாடாளுமன்றத் தெரிவுக்குழு நல்ல தொரு அணுக்குமுறை. துரதிர்ஸ்ட வசமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது பிரதிநிதி களின் பெயர்களை முன்வைக்கவில்லை. அவர்கள் விடுதலைப் புலிகளின் அதே மனோ பாவத்துடனேயே உள்ளனர். அவர்களின் கோரிக்கைகளான வடக்கு,கிழக்கு இணைப்பு, பொலிஸ் மற்றும் காணி அதிகாரப் பகிர்வு என்பன நடைமுறைச் சாத்தியமற்றவை.

உங்களின் நாட்டில் என்ன நடக்கிறது என்று பாருங்கள். ராகுல் காந்தி உத்தரப் பிரதேசத்துக் குப் பயணம் செய்தபோது மாயாவதி அவரைக் கைது செய்ய முனைந்தார்.

இவர்கள் என்னைக் கைது செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்களா? (தமிழர்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதன் மூலம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலம் பெயர் தமிழர் களாலேயே இயக்கப்படுகிறது. அவர்களுக்கு அமைதியோ அரசியல் தீர்வோ தேவையில்லை.

நியாயமான அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கேற்பது முக்கியமானது. ஆனால் அவர்கள் தமது பிரதி நிதிகளின் பெயர்களைப் பரிந்துரைக்கவில்லை.

இரா.சம்பந்தன் சிலருக்குப் பயப்படுகிறார் போலத் தோன்றுகிறது. இப்போது அவர்கள் அமெரிக்காவுக்குப் போய் முறையிடுகிறார்கள். இதற்கு எம்மால் ஒன்றும் செய்ய முடியாது. பிரபாகரன் காலத்தில் செயற்பட்டது போன்றே செயற்படுகின்றனர்.

இலங்கையில் அரசியல்தீர்வு ஒன்று காணப் பட வேண்டும் என்று எந்தவொரு நாடாவது கவலைப்படுமானால், தமது நாடுகளில் தங்கியுள்ள புலம்பெயர் தமிழர்களை இலங் கைக்குத் திருப்பி அனுப்ப வேண்டும். எம்மைக் குறை சொல்வது அர்த்தமற்றது. தமிழ்க் கட்சிகள்தான் அரசியல் தீர்வைத் தாமதப்படுத்துகின்றன.

### வடக்கு மாகாண சபைக்கு விரைவில் தேர்தல்

**டெக்கான்:** மோதல்கள் இடம்பெற்ற சூழலில்கூட வடக்கில் உள்ளூராட்சி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. ஆனாலும் இப்போது அங்கு ஏன் மாகாண சபைத் தேர்தலை அரசு நடத்தவில்லை?

**மஹிந்த:** கூடிய விரைவில் அங்கு நிச்சயமாக தேர்தல் நடத்தப்படும். ஆனால் மாகாணசபைத் தேர்தலில் மக்கள் பங்கேற்க உண்மையான வாய்ப்பு வழங்கப்படவேண் டும். மோதல் சூழலில் நடத்தப்பட்ட நாடாளு மன்றத் தேர்தலில் மக்கள் சுதந்திரமான முறையில் வாக்களிக்க அனுமதிக்கப்பட வில்லை. ஜனநாயக ரீதியில் மக்கள் தமது கருத்தை வெளிப்படுத்துவதற்கு எதிராக விடுதலைப் புலிகள் செயற்பட்டனர்.

### சனத்தொகைக்கேற்ப இராணுவம் இல்லை

**டெக்கான்:** வடக்கு இன்னமும்கூட அதிகள வில் இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ளதாக தமிழர்கள் முறையிடுகிறார்கள். 3 இலட்சம் மக்கள் வாழும் பகுதிகளில் ஒரு இலட்சம் படையினர் நிலைகொண்டுள்ளனர். சனசமூக நிலையக் கூட்டத்துக்கோ அல்லது பாடசாலை நிகழ்வுக்கோகூட இராணுவத்தின் அனுமதி தேவைப்படுகிறது. குடியியல் நிர்வாகத்தில் இருந்து இராணுவத்தை எப்போது நீக்கத் திட்டமிட்டுள்ளீர்கள்?

**மஹிந்த:** வடக்கில் 3 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் உள்ளனர். சனத்தொகைக் கேற்ப அங்கு படையினர் நிலைநிறுத்தப்பட வில்லை. ஆனால் அந்தப் பிராந்தியத்தின் பாது காப்புக்கு அவர்கள் தேவைப்படுகின்றனர்.

இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள அந் தப் பகுதி முப்பது ஆண்டுகளுக்கு மேலாக மோசமான ஆயுதமோதல்கள் இடம்பெற்ற பிரதேசம். அங்கு உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் முக்கியமான பணியில் இராணு வம் ஈடுபட்டுள்ளது.

### சிங்களவருக்கும் நிலங்கள் கொடுக்கப்படவேண்டும்

**டெக்கான்:** இராணுவ முகாம்களை அமைப் பதற்காகவோ அல்லது சிங்கள வர்த்தகர்களுக் காகவோ தமது நிலங்கள் எடுத்துக் கொள்ளப் படுவதாக தமிழர்கள் சந்தேகிக்கின்றனரே?

**மஹிந்த:** இது விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களால் கிளப்பி விடப்பட்ட புரளி. நாடெங்கும் ஆயுதப்படையினர் உள்ளனர். அவர்களின் முகாம்கள் உள்ளன. இலங்கை யின் பிராந்திய எல்லைகளையும், இறைமையை யும் பாதுகாக்க இது அவசியமானது.

விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்படு வதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் சிங்கள வர்களும் முஸ்லிம்களும் வசித்தனர். சிங்க ளவரோ, தமிழரோ, முஸ்லிமோ அவர் யாராக இருந்தாலும் பாரம்பரியமாக வாழ்ந்த இடங் களில் இருந்து வெளியேற்றப்பட்டவர்களுக்கு, அவர்களின் நிலத்தைக் கொடுக்க வேண்டும்.

வடக்கில் தமிழர்கள் வகித்து வரும் பெரும்பான்மையை இலங்கை அரசின் எந்த வொரு செயற்பாடும் மாற்றியமைக்காது.

*(நன்றி: புதினப்பலகை)*

## ஆதவனைப் பார்த்தால் ஆபத்து



சிலர் தினமும் தவறாமல் சூரியநமஸ்காரம் செய்வார்கள். சூரியன் உதயமாகும்போது அதைப் பார்த்துக் கும்பிடுவர். அதற்குப் பின்னர்தான் ஏனைய வேலைகளை ஆரம்பிப்பர்.

சூரியன் உதயமாவதற்கு முன்னர் எழுந்து குளிர்ந்த நீரில் குளிப்பது மருத்துவ ரீதியாகவே உடம்புக்கும் மனதுக்கும் நல்லது. இருந்தாலும் சூரிய நமஸ்காரம்செய்யக் கூடாத ஒரு நேரமும் உண்டு. அது எந்த நேரம் தெரியுமா? சூரிய கிரகண்ம் உண்டாகின்ற நேரம்.

சூரிய கிரகணம் தோன்றும் சமயத்தில் சூரியனை உற்றுப் பார்ப்பது மிகவும் ஆபத்தான விடயம். பார்வையைப் பாதித்துவிடும்.

சாதாரணமாகவே சூரியன் எமது கண்ணால் உற்றுப் பார்க்க முடியாத அளவுக்கு அதிகமான பிரகாசம் கொண் டது. அதனால் அதைப் பார்ப்பது கஷ்டம்.

கிரகண சமயத்தில் நிலவு குறுக்கே வந்து சூரியனை மறைக்கும். இதனால் பிரகாசம் குறையும். அந்தச் சமயத் தில் சூரியனைப் பார்ப்பது சுலபமாக இருக்கும். இருந்தாலும் அப்படிப் பார்க்க ஆசைப்படக்கூடாது. அது கண் பார்வை யைக் கெடுத்துவிடும்.

ஆபத்து என்று தெரிந்தால்கூட அதைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுபவர்கள் உள்ளனர். முக்கியமாகக் குழந்தை கள் அந்தச் சமயத்தில் சூரியனைப் பார்க்க ஆசைப்படுவார் கள். அது ஆபத்தானது என்று எடுத்துச்சொல்ல வேண்டும்.

கிரகண சமயத்தில் சூரியனை நிலவு மறைத்தால்கூட வெளிச்சம் தடுக்கப்பட்டால்கூட புற ஊதாக் கதிர்கள் வந்துகொண்டே இருக்கும். எமக்குத் தெரியாமலே எமது கண்ணுக்குள் அந்தக் கதிர்கள் புகுந்துவிடும். புற ஊதாக் கதி ரின் வேதியல் பதார்த்தங்களால் விழித்திரை பாதிக்கப்படும்.

சிலபேர் கிரகண சமயத்தில் சூரியனைப் பார்த்துவிட்டு எனக்கு ஒன்றும் ஆகவில்லை என்று கூறுவார்கள். ஆனால் என்ன மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது என்று அவர்களுக்குத் தெரியாது. ஏதாவது வேலை கிடைத்து மருத்துவப் பரி சோதனைக்குப் போவார்கள். அப்போது மருத்துவர் கூறு வார். ''உங்கள் பார்வையில் கோளாறு இருக்கிறது'' என்று. கிடைக்க இருந்தவேலையும் கிடைக்காமல் போய் விடும். சில நுணுக்கமான வேலைகளில் ஈடுபடும்போது துல்லிய மாக பார்க்க முடியாது இத்தகையவர்கள் தடுமாறுவார்கள்.

சிலபேர் சொல்வார்கள்; கிரகணத்தை நேரில்தானே பார்க் கக் கூடாது. பூதக் கண்ணாடி மூலமாகப் பார்க்கலாம்; பாத்திரத் தில் தண்ணீர் விட்டு சூரிய கிரகணத்தின் பிரதிபலிப்பைப் பார்க்கலாம் என்று. ஆனால் நிபுணர்கள் அப்படிப் பார்ப் பதும் ஆபத்தானது என்று கூறுகிறார்கள்.

'கூலிங்கிளாஸ்' போட்டுக்கொண்டு பார்த்தாலும் அது சூரியனின் பிரகாசத்தைத்தான் குறைக்குமே தவிர புற ஊதாக் கதிர் நுழைவதைத் தடுக்காது என்கிறார்கள்.

மிகவும் சுலபமாகப் பாதிப்புக்கு உள்ளாகுபவர்கள் யார் தெரியுமா? குழந்தைகள் மற்றும் மிக உயரமான இடத்தில் அதாவது மலைப் பகுதிகளில் வாழ்பவர்கள். இவர்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும்.

ஓர் அம்மா தனது கணவனை அழைத் துக்கொண்டு அவசர அவசரமாக மனோத்துவ வைத்தியரிடம் காட்ட அழைத்துக் கொண்டுவந்தார். ''வைத்தியரே! என் கணவர் திடீரென்று எழுந்து சிறிதுநேரம் வானத்தில் இருக்கும் முழுநிலவைப் பார்த்துவிட்டுவருகிறேன். என்னைத் தொந்தரவு செய் யாதே'' என்று சொல்லிவிட்டு வெளியே போய் வானத்தை பத்து நிமிடங்கள் உற்றுப் பார்த்தார். பின் நிலா மிகவும் அழ காக இருக்கிறது என்று சொல்கிறார். ஆனால் நேற்றோ அமாவாசையே! என்று கூறினார் அந்த அம்மா.

**கோ.சுவாமிநாதன்**

உதயன்
29 டிசெம்பர் 2011 வியாழக்கிழமை



யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் சாவகச்சேரி பிராந்திய சபையால் சமாசத்தின் முன்னாள் மற்றும் தற்போதைய செயலாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெற்றது. கௌரவிக்கப்பட்ட சமாசத்தின் முன்னாள் செயலாளர் சு.நகுலேந்திரன், தற்போதைய செயலாளர் திருமதி க.பரமானந்தன் ஆகியோருடன் சமாச பிராந்திய உறுப்பினர்கள். (எ–207)

# கொக்குவில் இந்து மாணவன் ஆங்கில சொல்வதெழுதுதல் போட்டியில் 3ஆம் இடம்

யாழ்ப்பாணம், டிசெ.29



கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த தரம் 11 மாணவன் செல்வன் சுதாகரன் சிவானுஜன் தேசிய மட்ட ஆங்கில தினப் போட்டியில் சொல்வதெழுதுதலில் மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளார். (எ)

# சுதந்திரமில்லாத சமாதானம் குறித்து நாம் சிந்தித்துப் பார்க்க முடியாது

## அருட்திரு வென்சஸ்லோ அடிகளார்

யாழ்ப்பாணம், டிசெ.29

சுதந்திரமில்லாத சமாதானம் குறித்து நாம் சிந்தித்துப் பார்க்க முடியாது என திருநெல்வேலி பங்குத்தந்தை அருட்திரு வென்சஸ்லோ அடிகளார் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச சபை நலன்புரி சங்கத்தின் கிறிஸ்மஸ் தினத்தையொட்டிய ஒளிவிழா கடந்த திங்கட்கிழமை சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் நல்லூர் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பங்குத்தந்தை அருட்திரு.வென்சஸ்லோ அடிகளார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:-

அமைதி, சமாதானம் குறித்து இன்று பேசப்படுகின்றது. அவை இங்கு நிலவுவதாகச் சொல்லப்படுகின்றது. போர் முடிந்த பின்னரும் மக்கள் மத்தியில் அமைதி நிலவுகின்றதா? இன்னமும் நிலையான சமாதானத்தை அடையவில்லை. அதற்காக ஒன்றுபட்டு உழைக்கும் பெரும் பொறுப்பு நமக்கு உண்டு.

நீதி, சமத்துவம், சுதந்திரம், ஒற்றுமை இந்த நான்கு தூண்களில் ஒன்றுகூட இல்லாவிடினும் நிலையான சமாதானத்தை நாம் எட்ட முடியாது. இவற்றை நாம் முழுமையாக அடையும் போதுதான் சமாதானம் கிடைக்கும்.

மானிடத்துக்கு உண்மையான சமாதானத்தை ஏற்படுத்தவே யேசுகிறிஸ்து அவதரித்தார். அவரது போதனைகளின் படி வாழ்ந்து காட்ட வேண்டும்.

இறைவன் எமது வாழ்வின் பலமான கேடயமாக அமைகின்றார். அவனில் பிரசன்னமான எமக்கு விடுதலை கிடைக்கும்.

எனவே இறைவன் காட்டும் அந்தப் பாதையில் நாம் தொடர்ந்து உண்மையான சமாதான வாழ்வுக்காகவும், விடுதலைக்காகவும் பாடுபடுவோம். இன்றைய ஒளி விழா இதற்கு அடிகோல வேண்டும்- என்றார்.

தொடர்ந்து சபையின் செயலாளர் மேரி சாந்தசீலன் உரையாற்றும்போது, இன்று அடிமைத்தனத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு அதை நீக்கும் ஒரு விழாவாக ஒளிவிழா அமைகிறது.- எனத் தெரிவித்தார். (எ-7)

# புதிய நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், டிசெ.29

நீர்வேலி தெற்கு ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர் சனசமூக நிலையத்தில் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. தலைவராக கந்தையா தர்மலிங்கமும், செயலாளராக சின்னத்தம்பி தர்மரத்தினமும், பொருளாலராக சண்முகம் கயிலைநாதனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் புதிய நிர்வாகத்தில் உபதலைவராகக் கனகரத்தினம் இராசதுரையும் உப செயலாளராக ச.கிருஷ்ணலிங்கமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுடன் ஐந்துபேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்ற சனசமூக நிலையத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் மற்றும் நிர்வாகத் தெரிவின் போதே இந்தப் புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.(எ-14)

# யாழ்ப்பாணத்தின் பாரம்பரியத்தைப் பறைசாற்றுவதற்கு நாட்டுக்கூத்துக் கலையைப் பாதுகாக்க வேண்டும்

## தமிழ்த்துறைப் பேராசிரியர் எஸ்.சண்முகலிங்கம்

யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய விழுமியங்களைப் பறைசாற்றுவதற்கு நாட்டுக் கூத்துப் போன்ற கலைகள் பாதுகாக்கப் படவேண்டும்.

இதற்கு இனமத பேதமின்றி கலைத்துறை சார்ந்த அனைவரும் பங்களிப்பு வழங்க வேண்டும் என யாழ்.பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியர் எஸ்.சண்முகலிங்கம் தெரிவித்தார்.

குருநகர் நாட்டுக்கூத்து மன்றத்தின் ''ஆளுமை'' எனும் வீடியோ திரைப்பட வெளியீட்டு விழா அண்மையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பேராசிரியர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்:

நாட்டுக் கூத்துப் போன்ற கலாசார கலைகளைப் பாதுகாப்பதற்கும் அவற்றை நலிவடையச் செய்ய விடாமல் வளர்ச்சி பெறச் செய்வதற்கும் பலர் சேவையாற்றியுள்ளனர்.

முக்கியமாக கிறிஸ்தவ மதம் சார்ந்தவர்கள் நாட்டுக்கூத்துடன் ஒன்றிணைத்து கலையை மிளிரச் செய்வதற்கு பல வழிகளில் சேவையாற்றினார்கள்.

யாழ்ப்பாணத்து மக்களின் வாழ்வியல் சார்ந்த விடயங்களை இந்தக் கலைகள் மூலம் எடுத்துக் கூறுவதற்கு ஏதுவாக அமைந்தது.

இதன் மூலம் பிற மாவட்டங்களுக்கும் நாட்டுக் கூத்தின் தார்ப்பரியத்தையும் அதன் சிறப்பையும் எடுத்துக் காட்ட கலை சார்ந்த அமைப்புகளும் சேவையாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே கூத்து என்பது ஓர் தனிச் சிறப்பான கலை. தற்போது சினிமா மீது கொண்ட மோகத்தால் இத்தகைய கூத்துக்களை நடத்தவோ, பார்க்கவோ மக்கள் விரும்புவது கிடையாது.

இதன் காரணமாக கூத்துக் கலைஞர்கள் தமது திறன்களை முடக்கி விட்டு வேறு துறைகளைத் தேர்ந்தெடுக்க நினைக்கிறார்கள். தொடர்ந்து இத்தகைய கலைகளை நாம் பாதுகாக்க வேண்டுமானால் அனைவரும் ஒன்றிணைந்து சேவையாற்ற முன்வர வேண்டும் - என்றார். (எ-311)

# தேசிய இளைஞர் மன்றத்தின் புதிய உறுப்பினர் தெரிவு

வலி.வடக்கு, டிசெ.29

வலி. தெற்கு உடுவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சுன்னாகம் மயிலணி வடக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் புனருத்தான நடவடிக்கைகள் இளைஞர் சேவைகள்மன்ற அலுவலர் கே.யுவராஜ் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன.

இந்தக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்பாண்டுக்கான உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

அமைப்பாளர் -த.தயாலவன், தலைவர் - இ.தனுராஜ், உப தலைவர் - ஜெ.பாரதி, செயலாளர் - ஸ்ரீ.றுசாணி, உபசெயலாளர் - ம.தர்மிதா, பொருளாலர் - அ.அன்ராஜ், விளையாட்டுச் செயலாளர் - தே.நிமல்ராஜ், கலாசார செயலாளர் - ப.டயூரா, ஊடகமும் தகவலும் செயலாளர் - சி.தமிழினி, தேசிய சேவை செயலாளர் - சி.யகீர்த்தனா, கல்வி பயிற்சி தொழில் வழிகாட்டலும் ஆலோசனையும் செயலாளர் - இ.தியாந்தினி, கணக்குப் பரிசோதகர் -சி.தர்மலிங்கம், மேலும் ஒழுக்கக் குழு - த.பிரியா, பா.தினிசா, உ.விதுரன், ஆலோசனைக்குழு - சி.தர்மலிங்கம், மு.அரிகரன், சி.சிவஞானம், த.ஜெயக்குமார், த.ஸ்ரீவாசன். (எ-86)

# போரால் பாதிப்படைந்த மக்களுக்கு உதவிகளை வழங்க அரச அதிகாரிகள் பாரபட்சமின்றி முன்வர வேண்டும்

## யாழ்.மாவட்ட அரச அதிபர்

யாழ்ப்பாணம், டிசெ.29

போரால் பாதிப்படைந்த மக்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கும் அரச அதிகாரிகள் பாரபட்சமின்றி அவற்றை பகிர்ந்து வழங்க முன்வர வேண்டும்.

முக்கியமாக கிராம சேவையாளர்கள் தமது பதவியைப் பலமாக வைத்து, பாதிப்படைந்த மக்களை மேலும் துன்பமடையச் செய்யாமல் அவர்களின் புனர்வாழ்வுக்குத் தேவையான உதவிகளை உரிய முறையில் பெற்றுக் கொடுக்க வேண்டும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலக நலன்புரிக் கழகத்தின் ஒளிவிழா நிகழ்வு கடந்த 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செயலக மண்டபத்தில் டபிள்யூ பரந்தாமன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கும்போதே யாழ்.மாவட்ட அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் ஒளிவிழாவானது யேசுநாதரின் பிறப்பின் புனிதத்தையும், அவரின் கொள்கைகளையும் எடுத்துக் காட்டுகிறது. இந்த புனித நந்நாளில் ஒவ்வொருவரும் தமது தீயகுணங்களை இல்லாதொழித்து நல்ல எண்ணங்களுடன் சமூகத்துக்குத் தொண்டு செய்ய வேண்டும்.

ஆனால் யாழ்ப்பாண சமூகத்தில் இவற்றைக் காணமுடியாதுள்ளது. அடுத்தவர் மனதை புண்படுத்தவே தம்மைப் பழக்கப் படுத்திக் கொண்டு விட்டார்கள்.

கடந்த கால போரால் பாதிப்படைந்து மீண்டும் தமது புது வாழ்வைத் தொடரும் மக்கள் சமூகத்தாலும் உறவுகளாலும் அரச அதிகாரிகளாலும் புறம் தள்ளப்படுகின்றார்கள்.

அரசு புனர்வாழ்வு வழங்க நினைத்தாலும் சில கிராம சேவையாளர்கள் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்களுக்கு வழங்கும் வாழ்வாதார அடிப்படை உதவிகளைப் பெற்றுக் கொடுக்கத் தயங்குகின்றார்கள்.

எனவே இந்த நிலமை மாற வேண்டும். உடலாலும் உளத்தாலும் பாதிப்படைந்துள்ள மக்களை மீளவும் ஓர் புதிய வாழ்க்கைக்குக் கொண்டுவர வேண்டும் - என்றார். (எ-313-45)

# முயற்சி செய்வதற்கு நீங்கள் தயாரா...?

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தின் சட்டமாணி (LL.B) கற்கை நெறிக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான அனுமதிப் பரீட்சை 2012 ஆம் ஆண்டு ஜனவரி 14 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதன்போது யாழ்ப்பாணத்தில் உள்ள பிராந்திய நிலையத்துக்கும் 75 மாணவர்களை அனுமதிப்பதற்கான பரீட் சையும் நடைபெறவுள்ளது.

சென்ற வருடம் நடைபெற்ற அனு மதிப் பரீட்சையின் மூலம் 100 மாண வர்கள் யாழ்.பிராந்திய நிலையத்துக்கு தெரிவு செய்யப்பட்டனர். இந்தமுறை இந்த எண்ணிக்கை 75 ஆகக் குறைக்கப்பட்டு விட்டது.

யாழ்.பிராந்திய நிலையத்துக்கான இந்த அனுமதி எண்ணிக்கை முன்பு போல எதிர்காலத்தில் கைவிடப்பட்டு தேசிய ரீதியிலான தெரிவு மட்டும் இடம்பெறும் சாத்தியங்களும் உள்ளன.

யாழ்.பிராந்திய நிலையத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர் களின் வெட்டுப் புள்ளிகள்தான் இலங் கையிலேயே சென்றமுறை குறைவான புள்ளிகளாக இருந்தன.

சட்டமாணிக் கற்கைநெறியின் அனு மதிப் பரீட்சையில் வெற்றி பெற்றவர் களின் அனுபவத்தை இங்கே பகிர்கின் றேன். நீங்களும் பயன்படுத்தி வெற்றி பெறுங்கள். பரீட்சை என்பது கற்றலின் அளவுகோல் அல்ல, வெளிப்படுத்தும் ஆற்றலின் அளவுகோல் அல்லவா?

**வினாத்தாள் அமைப்பு**

பரீட்சையின் போது நுண்அறிவு, பொது அறிவு, ஆங்கில மொழி, தமிழ் மொழி ஆகிய 4 வினாத் தாள்களும் ஒரு புத்தகம் போல் பரீட்சார்த்தியிடம் வழங் கப்படும். இந்த ஒழுங்கில்தான் வினாத் தாள்கள் அமைக்கப்பட்டிருக்கும்.

ஆனால் இதே ஒழுங்கில்தான் விடையளிக்க வேண்டுமென்ற அறிவு றுத்தல் எதுவுமே வழங்கப்படுவதில்லை.

இந்த 4 வினாத் தாள்களுக்கும் 2 மணி நேரத்தில் விடையளிக்க வேண்டும் என்பதுதான் நிபந்தனை.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் நுண்ணறிவுக்கு முதலில் விடைய ளிக்க முற்பட்டு இறுதியாக வரும் இல குவாக புள்ளிகளை எடுக்கக் கூடிய தமிழ் மொழி வினாத்தாளுக்கு விடைய ளிக்காமலே நேரத்தைக் கோட்டை விட்டு விடுவார்கள்.

ஏதாவதொரு வினாத்தாளுக்கு சரா சரி 40 புள்ளிக்கு குறைந்தால் அந்த விண்ணப்பதாரியின் தெரிவு நிராகரிக் கப்படும்.நுண்ணறிவு, பொது அறிவு வினாத் தாள்கள் தலா 40 வினாக்களைக் கொண்டதாக இருக்கும்.

**விடையளிப்பு முறை**

ஆங்கில மொழி, தமிழ் மொழி என் பனவும் 2 பக்க விடயத்துக்குப் பின்னால் 8 வினாக்கள் கொண்டதாக இருக்கும்.

இரண்டு மணி நேரத்தினுள் இவை யாவற்றுக்கும் விடையளித்தல் வேண டும். அந்த வினாத் தாள்களில் கூறப்பட் டிருக்கும் அறிவுறுத்தலுக்கு அமைய அந்த வினாத்தாளிலேயே விடைய ளித்து ஒப்படைத்தல் வேண்டும்.

இந்தப் பரீட்சையை வெற்றி கொள் வதாயின் பொது அறிவு, ஆங்கிலமொழி, தமிழ் மொழி, நுண்ணறிவு என்ற ஒழுங் கில் விடையளிக்க வேண்டும். அதா வது வினாத்தாளில் முதலாவதாக இடம் பெற்றிருக்கும் நுண்ணறிவுக்கு இறுதியா கவே விடையளிக்க வேண்டும்.

பொது அறிவு வினாத்தாளில் 40 வினாக்களுக்கும் ஒரு சொல்லில் விடை யளிக்கக் கூடியதாக வினாக்கள், பெரும் பாலும் ஒருவரி அல்லது இரண்டு வரி யில் அமைந்திருக்கும். வேகமான வாசிப்பும், வேகமான விடையளிப்புமாக 15 நிமிட நேரத்தினுள் விடையளிக்க வேண்டும்.

பொதுஅறிவு வினாக்கள் சகல துறை களையும் தழுவி நுட்பமானதாக அமைந் திருக்கும். மிக நீண்ட கடினமான தேடல் இருந்தால்தான் சித்திபெறத் தேவை யான குறைந்த புள்ளியான 40 ஐப் பெற முடியும்.

அடுத்ததாக ஆங்கில மொழி வினாத் தாளில், இரண்டு பக்கங்களைக் கொண்ட விடயத்தை ஒருமுறை கருத் தூன்றி வாசித்தல் வேண்டும். வினாக் களை ஒவ்வொன்றாக வாசித்துத் தரப் பட்ட பந்தியில் அந்த விடயம் எங்கே உள்ளதெனத் தேடிக்கண்டுபிடித்து விரைவாக விடையளிக்க வேண்டும்.

8 வினாக்களுக்கும் அரை மணி நேரத்தினுள் விடையளித்து முடித்தே யாக வேண்டும். அடுத்ததாக தமிழ் மொழி வினாத்தாள். இதில் தரப்பட்ட 2 பக்க விடயத்தை கருத்தூன்றி வாசித்து 20 முதல் 30 நிமிடத்துக்குள் விடைய ளிக்க முடியும்.

இறுதியாகவே நுண்ணறிவு வினாத் தாளுக்கு விடையளித்தல் வேண்டும். இந்த ஒழுங்கில், நேர வரையறையின் பிரகாரம் விடையளித்து வந்திருந்தால் இந்த வினாத்தாளுக்கு விடையளிக்க 40 முதல் 50 நிமிடங்கள் வரையில் நேரம் மீதமிருக்கும்.

நுண்ணறிவு வினாக்களில் பெரும் பாலும் முதல் 10 வினாக்களும் மிகக் கடுமையானவையாகவும், 25 முதல் 40 வரையான வினாக்கள் சற்று இலகுத் தன்மையானவையாகவும் இருப்பது வழமை.

பரீட்சார்த்தி ஒருவர் முதற் பகுதி வினாக்கள் கடினத் தன்மையானதாக இருந்தால் இறுதியாக உள்ள 40 ஆவது வினாவுக்கு விடையளித்து 39,38,37 எனப் பின்னிருந்து முன்னோக்கி வந்தால் அதிக புள்ளிகளைப் பெற முடியும். நுண்ணறிவு வினாத்தாளுக்கு இலகுவாகவும், வேகமாகவும் விடைய ளிக்க ஜி.சீ.ஈ சாதாரண தரத்தில் கணி தம் கற்பிக்கும் ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

**பயிற்சி அவசியம்**

இந்த வினாத்தாள்களைத் தொடர் பயிற்சியின் மூலமாகவே சிறப்பாகச் செய்யமுடியும்.

இந்த நடைமுறைகளைப் பின்பற்றிப் பாருங்கள். வெற்றி நிச்சயம். சட்டமாணி கற்கை நெறிக்கு தேசிய ரீதியாக மட்டும் வெட்டுப்புள்ளிகளை நிர்ணயிக்கும் நடைமுறை மீண்டும் வரக்கூடும் என்ற கருத்துப் பரவலாக உள்ளது.

இலங்கைச் சட்டக் கல்லூரிக்கு மாண வரை அனுமதிக்கும் வயதெல்லை 35 ஆக மட்டுப்படுத்தப்பட்டு விட்டது.

■ மருதன்

அண்மையில் சிறுபான்மை இனத்த வருக்கென விசேட அனுமதி வழங்கப் பட்டு 73 பேர் தெரிவு செய்யப்பட்டனர். இதில் 50 பேர் முஸ்லிம் இனத்தவராக வும், மிகுதி 23 பேர் தமிழர்களாகவும் உள்ளனர். வடக்கிலுள்ள எம்மவர் இதில் தெரிவு செய்யப்பட்டதாகத் தகவல் இல்லை.

ஒரு காலத்தில் இலங்கையின் சட்டத் துறையில் கோலேச்சிய எமது இனம் மீண்டும் எழுச்சி பெறவேண்டுமென்ற நோக்கில் அனுபவசாலிகளிடம் பெற்ற தகவல்களை இங்கு பதிவு செய்துள் ளேன்.

முயற்சி செய்தால் வெற்றி நிச்சயம். முயற்சிக்க நீங்கள் தயாரா?


# மரண அறிவித்தல்



இல.4, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.

திருமதி

## மகேஸ்வரி சுப்பிரமணியம்

(பேபி அன்ரி)

இல.04 ,செட்டித்தெரு, நல்லூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சுப்பிரமணியம் (26.12.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை (ஆசிரியர்)-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னப்பா- இராசம்மா தம்பதியரின் அருமை மருமகளும், பொன்னப்பா சுப்பிரமணியத்தின் பாசமிகுந்த அருமை மனைவியும், யோகேஸ்வரி (ஊரெழு), காலஞ்சென்ற பூபாலசிங்கம் மற்றும் புவனேஸ்வரி (கிளியக்கா), தனபாலசிங்கம் (கொழும்பு), தர்மகுலசிங்கம் (திருநெல்வேலி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற காசிப்பிள்ளை மற்றும் யோகேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிவபாலன் (கனடா), சித்திரகலா (கனடா), சிவகுமார் (ஜேர்மனி), சிவகாந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகுந்த அருமைத் தாயும், தனமாலா (கனடா), சண்முகநாதன் (கனடா), சிவதர்சினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், சுமோசிஜன், சுஜன், சஜோன், சிந்துஜா, நிருஜா, உஷா, சாஜீசன், மனோஜ், கிருசானர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 4.00 மணியளவில் தகனக் கிரியைக்காகச் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ. சுப்பிரமணியம் (கணவர்),
பிள்ளைகள், சகோதரர்கள்.

(12218)(2-6)

# மரண அறிவித்தல்

(சி/7260)3.6.25

## திருமதி கணபதிப்பிள்ளை அன்னமுத்து

(புஸ்பராணி - பேபி ரீச்சர்)

(ஓய்வு பெற்ற ஆசிரியை, அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை)



அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை அன்னமுத்து (ஓய்வு பெற்ற ஆசிரியை, அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை) திங்கட்கிழமை (26.12.2011) இறைபதம் எய்தினார்.

அன்னார் வில்லிசைப் புலவர் கலாவிநோதன் கே.என். கணபதிப்பிள்ளை (சின்னமணி) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ் சென்றவர்களான விஸ்வலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் மகளும், மாதனையைச் சேர்ந்த நாகலிங்கம் - இராசம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற மகேஸ்வரி, தனலட்சுமி மற்றும் ஜெயராணி, காலஞ்சென்ற கணேசமூர்த்தி மற்றும் பாலசுப்பிரமணியம், மங்களபதி, விஜயலட்சுமி, கோணேஸ்வரி(கனடா), கேதீஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், முத்துலிங்கம் மற்றும் சறோஜினிதேவி, பரமேஸ்வரி, கயிலைநாதன், தியாகராஜா, பவானி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும், கலைச்செல்வன் (கனடா), கலைமதி( கனடா), கலைரூபன் (கனடா),கண்ணகி (ஆசிரியை, கஜமுகன் பாலர் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயும் விமலலோஜினி (கனடா), பரமேஸ்வரன் (கனடா), ஜெயந்தினி (கனடா), புவனேந்திரன் (புருசோத்மன் மரத்தொழிலகம், அச்சுவேலி) ஆகியோரின் அன்பு மாமியும், கார்த்திகா (கனடா), லோஜன் (கனடா), மைதிலி(கனடா), விசாகன்(கனடா), அபிநயா( கனடா), கலைமேனன், கலைமாறன், புருஷோத்மன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.12.2011) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**"கலையகம்",**
**உலவிக்குளம் பிள்ளையார்**
**கோயிலடி, அச்சுவேலி வடக்கு.**

**தகவல்:**
**க.நா.கணபதிப்பிள்ளை**
**(சின்னமணி - கணவர்)**

# வருடத்தில் இரு தடவைகள் உற்சவம் நடைபெறும் சிறப்பு உரும்பிராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கே

(சென்றவாரத் தொடர்ச்சி)

உரும்பிராய் மூன்று கோயில்களில் நடுவிடத்தில் அமர்ந்திருந்து அருள் பாலிக்கும் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் ஆண்டுதோறும் தைப்பூசத் தீர்த்தத் திருவிழாவாக 12 தினங்கள் மகோற்சவமும், கதிர்காம உற்சவ காலத்தில் திருவோண நட்சத்திரத்தில் தீர்த்தோற்சவம் வரக்கூடியதாக 16 தினங்கள் அலங்கார உற்சவமும் நடைபெறுகின்றது. இது இந்த ஆலயத்துக்கே உரிய தனிச்சிறப்பாகும். இந்த வகையில் இரண்டு உற்சவங்கள் நடைபெறும் முருகன் ஆலயம் என்ற பெருமையை இந்த ஆலயம் பெறுகின்றது.



அனாதியில் மரத்தின் கீழ் சிறிய கொட்டிலில் வைத்து வழிபட்டுவந்த சிதம்பர சுப்பிரமணிய சுவாமிக்கு காலத்துக்குக்காலம் அடியவர்கள் உதவி ஆலயத்தை அமைத்தனர். இருந்த போதிலும் தற் போது இருக்கும் ஆலயத்துக்கான அடிக்கல் 1954 ஆம் ஆண்டு அருளாளர் செல்லப்பா தியாகலிங்கம் கியு-ஸியால் நடப்பட்டது. அதன் பின்னர் மூன்று வருடங்களாக நடைபெற்ற திருப்பணி வேலையை அடுத்து விளம்பி வருடம் பங்குனித் திங்கள் 13ஆம் நாள் (26-03-1958) புதன்கிழமை ரோகிணி நட்சத்திரத்தில் செ.தியாகலிங்கம் கியு.ஸி. தலைமையில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

இரண்டாவது மகாகும்பாபிஷேகம் 1980ஆம் ஆண்டு நடைபெற்றது. சித்தூர்த்தி வருடம் சித்திரைத் திங்கள் 20ஆம் நாள் (03.05.1979) பாலஸ்தானம் செய்யப்பட்டு மூலஸ்தான திருப்பணிகள் ஆரம்பமாகின. ரௌத்திரி வருடம் சித்திரைத் திங்கள் 18ஆம் நாள் (30.04.1980) புதன்கிழமை சுவாதி நட்சத்திரத்தில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. செ.தியாகலிங்கம் கியூ.ஸி. தலைமை தாங்கி இதனை நடத்தினார்.

1987ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இந்திய அமைதிப்படையினரின் தாக்குதலால் ஆலயம் சேதமடைந்த போதிலும் 1991ஆம் ஆண்டு புதிய நிர்வாகம் ஆலயத்தைப் பெறுப்பேற்று திருப்பணிகளை மேற்கொண்டு 1992ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டதை அடுத்து மகோற்சவங்கள் நடைபெற்றன.

1992ஆம் ஆண்டு புதிய சித்திரத் தேர் திருப்பணி ஆரம்பிக்கப்பட்டு புதிய சித்திரத் தேர் உருவாக்கப்பட்டதோடு, தேர்க்கொட்டகை மற்றும் அதனோடு இணைந்த திருப்பணி வேலைகள் நடை பெற்றன.

ஆலய உற்சவ காலங்களில் விசேட சமயச் சொற்பொழிவுகள் தினந்தோறும் நடைபெறுவதோடு அங்கு நடைபெறும் சொற்பொழிவுகளை உள்ளடக்கி பாடசாலை மாணவர் மட்டத்தில் சமய அறிவுப் பரீட்சையை நடத்தி மாணவர்களுக்குப் பெறுமதிமிக்க பரிசில்களை வழங்கிக் கௌரவிப்பது விசேட செயற்பாடாகும். இதன் மூலம் மாணவர்கள் சமயச் சொற்பொழிவுகளை உரிய முறையில் செவிமடுப்பதோடு அதனைத் தங்களது கற்றல் செயற்பாட்டுக்கும் உரியதாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

வருடாந்த மகோற்சவங்களோடு சிறப்பு உற்சவங்களும்; தமிழ் மாதப் பிறப்புத் தோறும் மாதச் சங்கிராந்தி தீர்த்தமும்; மாதந்தோறும் கார்த்திகை உற்சவம்; சஷ்டி உற்சவம், ஆண்டு தோறும் கந்த சஷ்டி உற்சவம், சித்திரைப் பௌர்ணமி, வைகாசி விசாகம்; ஆவணிச் சதுர்த்தி, புரட்டாதி சனிக்கிழமைகள், ஐப்பசி வெள்ளி, கார்த்திகை விளக்கீடு, மார்கழித் திருவாதிரை காலங்களில் சிறப்பு உற்சவங்களும் பூசை வழிபாடும் நடைபெறுவதோடு பஜனை, கூட்டுப்பிரார்த்தனை என்பனவும் நடைபெற்று வருகின்றன.

ஆலயத்துக்குக் கணிசமான அளவு நிலபுலங்கள் உள்ளன. அதில் இருந்து பெறப்படும் வருமானம் ஆலயத்தின் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

ஆலயத்தின் தற்போதைய பரிபாலன சபையின் போஷகராக உரும்பிராய், இந்துக் கல்லூரி அதிபர் அ.ஈஸ்வரநாதனும் தலைவராக அ.நவரத்தினமும்

ஞானஆதவன்

இணைச் செயலாளர்களாக பொ.காசிலிங்கம், எஸ்.கனகநாயகம் ஆகியோரும் பொருளாளராக நா.நடேசனும் சிறப்புறச் செயற்பட்டு வருகின்றனர்.

ஆலயத்தின் பிரதம பூசகராக பிரம்மஸ்ரீ எஸ். கலாதரக் குருக்கள் ஆலய உற் சவங்கள், கிரியைகளை வேத ஆகம முறைப்படி மேற்கொண்டு வருகின்றார். கோயில் சிறக்க குடி சிறக்கும். முருகன் அருள் பெற்று உய்வோமாக!

(முற்றும்)

நத்தார் புதுவருட பரிசில்களுக்கு......
★ சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகள்
★ நவீன டிசைன், ரெடிமேட் ஆடைகள்
★ நவநாகரிக நங்கையர்களுக்கேற்ற சல்வார், சுடிதார், ஸ்கேட் அன் பிளவுஸ் மற்றும் ஆடைகளுக்கும்
★ ஆடவர்களுக்கான சிறுவர்களுக்கான அனைத்து ஆடைத் தெரிவுகளுக்கும்
15 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 30 ஆயிரம் ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு ஒருவருட உத்தரவாதத்துடன் அழகிய கைத் தொலைபேசி ஒன்று வழங்கப்படும். (இச்சலுகை 21.12.2011 முதல் 31.12.2011 வரை மட்டுமே)
மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்
MILLENNIUM FASHION & BOMBAY BAZAAR
No.10,11,POWER HOUSE RD.
GRAND BAZAAR, JAFFNA
T.P: 021 222 9399 (மலாயன் கபே முன்பாக)
(சி/6648)(2.6.7)

1st in Com, G.A.Q
யாழ்ப்பாணம், பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)
* A/L இல் கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.
* புதிய ஆண்டுக்கான பதிவுகள் நடைபெறுகின்றன.
* விரிவுரைகள் ஆரம்பம் 31.12.2011 காலை 8 மணி
விவரங்களுக்கு: S. அருள் நங்கை
நிர்வாகி,
புதிய உயர்கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(C/7232)(6,8,25)

மணல் விற்பனைக்குண்டு
நாற்பது வருடங்களாக பூச்சு வேலைகளுக்கு சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற மண்கும்பான் மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில் .
4 - ட்ராக்டர் ரூபா 24,000
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு
(ஒரு கல் -38 ரூபா)
தொடர்பு: கண்ணா
0776766499, 0771106371
(சி/7203)(3.6.7)



# போர்க் குற்றச்சாட்டுச் சுமத்தப்படுவோரை இலங்கை பொறுப்புக் கூற வைக்குமாம்

## அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதர் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.29

போர்க்குற்றச்சாட்டுச் சுமத்தப்படும் ஒவ்வொருவரையும் இலங்கை பொறுப்புக்கூற வைக்கும் என்று அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதர் ஜாலிய விக்கிரமசூரிய தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வொசிங்டன் ரைம்ஸ் நாளிதழுக்கு அளித்துள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசினால் வெளியிடப்பட்டுள்ள நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் எந்தவொரு போர்க்குற்ற சந்தேகநபரும் அடையாளம் காட்டப்படாத நிலையில், இலங்கை அரசின் பொறுப்புக் கூறும் கடமை தொடர்பாக மனித உரிமை அமைப்புகள் கேள்வி எழுப்பியுள்ளன.

எனினும் அரசினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின்முன் சாட்சிய மளித்தவர்கள் வெளிப்படுத்திய சந்தேகநபர்களின் பெயர்கள் அடங்கிய அறிக்கை அரச இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. ஆனால் அறிக்கையில் போர்க்குற்றவாளிகள் என்று எவரது பெயரும் கூறப்படவில்லை. இருப்பினும் பொறுப்புக்கூறும் நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படுகின்றன.

''போர்க்குற்றச்சாட்டுகள் குறித்த அனைத்துலக விசாரணைக்கு இணங்குவதில்லை என்ற நிலைப்பாட்டில் இருந்து அரசு மாறவில்லை. நாங்கள் இந்த விவகாரத்துக்கு உள்ளக ரீதி யில் தீர்வு காண்பதே மிகச் சிறந் தது என்று நம்புகிறோம்'' என்று ஜாலிய தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை மனிதஉரிமை மீறல்கள் பற்றிய குற்றசாட்டுகளுக்கு முழுமையாகப் பதிலளிக்கும் வகையில் அமையவில்லை.பொறுப்புக் கூறுதல் பற்றிய கேள்விகளை அது விட்டுச் சென்றுள்ளதாக அமெரிக்காவின் இராஜாங்க திணைக்களப் பேச்சாளர் விக்ரோரியா நுலன்ட் அம்மையார் கூறிய கருத்து சரியானதல்ல; இந்தக் கருத்தையிட்டு நாங்கள் மிகவும் அதிர்ச்சியடைந்துள்ளோம் என்றும் தூதுவர் கூறினார்.

அமெரிக்கா எமது மிகச் சிறந்த நண்பர்களில் ஒன்று. நாங்கள் அந்தப் பிராந்தியத்தில் உள்ள ஒரு ஜனநாயக நாடு. இந்த நேரத்தில் இலங்கையை நம்ப வேண்டும். மோதலின் இறுதி நாள்கள் குறித்து அறிக்கையில் போதியளவு பதிலளிக்கப்பட்டுள்ளது. இலங்கைப் படையினர் பொதுமக்களைப் பாதுகாக்கும் மனிதாபிமான நடவடிக்கையையே மேற்கொண்டனர்.

''பொதுமக்களைப் பற்றிக் கவலைப்படாது போயிருந்தால், வடக்கு, கிழக்கில் பலம் வாய்ந்த அவர்களின் கோட்டைகளில் இருந்து போராளிகளை அகற்றுவதற்கு இரண்டு ஆண்டுகள் தேவைப்பட்டிருக்காது''- என்றார். (ச)

# ஆனந்தசங்கரியின் கோரிக்கை அரசால் நிராகரிப்பு - திவயின

கொழும்பு,டிசெ.29

வடக்கில் இராணுவ முகாம்களை அகற்றுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரியின் கோரிக்கையை அரசு முற்று முழுதாக நிராகரித்துள்ளதாக 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை ஆனந்தசங்கரி, ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த மனுவில் இராணுவ முகாம்களை அகற்றுவது குறித்துக் கோரியிருந்தார்.

இந்த நிலையில், நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் வேறு எந்தவொரு தரப்பினருடனும் இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட மாட்டாது என்று பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளதாக 'திவயின' தெரிவித்துள்ளது.

உலகின் பல நாடுகள் தமது பகுதிகளில் இராணுவ முகாம்களைப் பேணி வருகின்றன. இராணுவ முகாம்கள் பற்றி அரசியல்வாதிகள் அன்றி பாதுகாப்பு திணைக்களமே அங்கு தீர்மானம் எடுக் கின்றது என்று அந்த அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார் என 'திவயின' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது. (ச)

# ஏ.ரி.எம். இயந்திரத்தில் பணம் மோசடி; வங்கி முகாமையாளர் பதவி நீக்கம்

கொழும்பு, டிசெ.29

கந்தளாய் அரச வங்கியின் ஏ.ரி.எம். இயந்திரத்தில் பணம் திருடப்பட்டமை சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொண்ட அந்த வங்கியின் தலைமையகம் ஏ.ரி.எம். இயந்திரம் சம்பந்தப்பட்ட கடமைப் பொறுப்பை முறைப்படி நிறைவேற்றத் தவறியுள்ளமையைக் காரணம் காட்டி அதன் முகாமையாளரைப் பதவி நீக்கம் செய்துள்ளது.

கடந்த 24 ஆம் திகதி முதல் இந்த உத்தரவு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி இந்த வங்கிக்கு முன்புறமாகவுள்ள ஏ.ரி.எம். இயந்திரத்துக்கு எந்தவொரு பாதிப்பையும் ஏற்படுத்தாது அந்த இயந்திரத்தினுள் இருந்த பணம் திருடப்பட்டது.

# ஹெரோயினுடன் மாலைதீவு நபர் கைது

கொழும்பு,டிசெ.29

கொழும்பு - கல்கிசை - ஜனதா மாவத்தையில் வைத்து தலா 40 கிராம் ஹெரோயின் அடங்கிய இரு பைக்கற்றுக்களுடன் மாலைதீவு நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சந்தேகநபர் கல்கிசை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். கல்கிசை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# அரச வைத்தியசாலைகளில் 25,000 தாதியர் வெற்றிடங்கள்

அரச வைத்தியசாலைகளில் சுமார் 25 ஆயிரம் தாதியர்களுக்கு வெற்றிடம் நிலவுவதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டுகின்றது.

மக்களுக்கு சிறந்த முறையில் சுகாதார சேவைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு 50 ஆயிரம் தாதியர்கள் தேவைப் படுகின்றனர். எனினும், தற்போது 25 ஆயி ரம் தாதியர்கள் மாத்திரமே சுகாதார சேவையில் இணைக்கப்பட்டுள்ளனர்.

தாதியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விசேட திட்டமொன்று தற்போது செயற்படுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

**Jaffna College Institute of Technology-Vaddukoddai**

A training Institute registered with the Tertiary and Vocational Educational Commission (TVEC) Under P25/0014

**Diploma Courses**
**One Year Full time (two semester)**

**I. Computer Programming & Data Processing**
System Analyzing & Design
Data base Management System
Fundamentals of Computer Technology
Data Processing
Application Packages
Visual Basic VB .net,
Java,C++,English, Oracle

**II. Civil Draughtsmanship**
Building Construction
Construction Materials
Sanitary Engineering
Engineering Science
Engineering Drawing
Draughtsmanship
Quantity Surveying
AutoCAD, English, Maths

Courses commence in 2nd week of Jan 2012

**Diploma in Auto CAD Modeling (2D, 3D)**
6 months Part time

**Certificate in Web designing**
-6 months Part time

**Technician Certificate in Telecommunication & electronics**
-Covers City & Guilds Syllabus -One year full time

Why we are Special
Registered under Tertiary and Vocational Education Commission.
Unlimited computer practical hours are offered.
Payments could be made in 2 installments.
Individual attention by qualified instructors.
The computer laboratory is opened for flexible practical hours.
Facilities: Hostel , library & Sports etc.

More Information
Jaffna College Institute of Technology
Vaddukoddai, Jaffna, Sri Lanka.
T.P No.021 321 3139 021 222 8275
E-Mail jcit@sltnet.lk Web: www.jcit.lk

**Craft Certificate Courses**
**Six Months full time**
தேசிய தொழில்சார் தகைமையுடன் கூடிய பயிற்சிநெறி
NVQ (காலம் : மோதங்கள்)

- Motor Cycle and light Engine Mechanism (மோட்டார் வாகனம் திருத்துதல்)
- Refrigeration & Air Conditioning Mechanic (குளிரூட்டுதல் பயிற்சி நெறி)
- Welder(லேத் வெல்டிங் உலோக வேலைகள்)
- Electrical and Electronic-(மின் இலத்திரனியல்)
- Machine shop Practice-(இயந்திர சாலைப் பயிற்சி)
- Radio ,TV & Electronic Servicing Technology (இலத்திரனியல் சாதனங்கள் திருத்துதல்)
- Aluminum Fitting & Fabrication (அலுமினியம் பொருத்துதலும் இணைத்தலும்)
- Domestic Electrician (மின் இணைப்பும் நிர்மாணமும்)
- Mobile phone Repairing (கைத் தொலைபேசி திருத்துதல்)

**Computer Certificate Courses**
**2/3/4 months Part time**

⇨ Microsoft Office
Ms Word ,Ms Access
Ms Excel , Ms Access
⇨ Computer Graphic Designer
Page Maker, Corel Draw,Photoshop
⇨ Computerize Business Accounting
Accpac, Tally,QuickBook
⇨ Internet & E-Mail
⇨ Computer Hardware Technician
⇨ HTML
⇨ Visual Basic 6/vb.Net
⇨ Macro Media Flash
⇨ Data Communication & Network

Computer Application Assistant
1.Maintenance files Folder
2.Perform word processing
3.Prepare spread sheets
4.Prepare Presentation
5.Maintenance Data bases
6.Create electronic files
7.Apply IT for Communication
8.Perform General Maintenance
NVQ Level

# 63 இலங்கைக் குழந்தைகள் வெளிநாட்டு நபர்களுக்கு கையளிப்பு

## மகளிர் விவகார அமைச்சு தகவல்

இந்த ஆண்டில் இலங்கையைச் சேர்ந்த 63 குழந்தைகளை வெளிநாட்டு நபர்களுக்குத் தத்துக் கொடுக்கப்பட்டுள்ளன என்று சிறுவர் மேம்பாடு மற்றும் மகளிர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

நெதர்லாந்து, ஆஸ்திரேலியா, நோர்வே, பிரிட்டன், பெல்ஜியம், அமெரிக்கா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளின் விண்ணப்பதாரிகளுக்கு இவ்விதம் குழந்தைகள் கையளிக்கப்பட்டுள்ளன.

1944ஆம் ஆண்டின் குழந்தைகளைத் தத்துக் கொடுக்கும் கட்டளைச் சட்டத்தின் கீழ் பொறுப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளை சட்ட பூர்வமாகப் பொறுப்பாளிகளிடம் கையளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் இந்த அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-22)

# சுதேச மருத்தவத் துறைக்கு தனியான பல்கலைக்கழகம்

இலங்கையிலுள்ள பாரம்பரிய வைத்தியர்களுக்குப் பட்டங்களை வழங்குவதற்கு அனுராதபுர மாவட்டத்தில் பல்கலைக் கழகமொன்று நிறுவப் படவுள்ளதாகத் தேசிய மருத்துவத்துறை அமைச்சர் சாலிந்த திஸாநாயக்க தெரிவித்தார். உலக சுகாதார அமைப்பின் உதவியுடன் மிஹிந்தலைப் பிரதேசத்தில் இந்தப் பல்கலைக்கழகம் நிறுவப்படவுள்ளது. அது தேசிய வைத்தியப் பல்கலைக்கழகம் என அழைக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்தப் பல்கலைக் கழகம் சார்ந்த கட்டடங்கள் வீட மைப்பு நிர்மாணத் துறை அமைச்சின் மூலம் நிர்மாணிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-22)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சங்கரப்பிள்ளை மகேஸ்வரி



மலர்வு: 14.08.1934

உதிர்வு: 09.01.2011

குடும்பத்தின் ஒளி விளக்காய் அன்பின் இருப்பிடமாய் நற்பண்புகளுடன் நல் வாழ்வுக்கு வழிகாட்டி எமக்காகவே வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே உங்கள் நினைவுடன் என்றும் வாழ்கின்றோம்.

கருங்காலி,
காரைநகர்.

(12128)(6,8,7)

குடும்பத்தினர்.

# தமிழர்கள் மீது அக்கறை இல்லாத ஒருவர் சிதம்பரம்

## பொன். ராதாகிருஷ்ணன் சாட்டை

மதுரை, டிசெ. 29

தமிழர்கள் மீது அக்கறையில்லாதவர் மத்திய அமைச்சர் சிதம்பரம். இவர் தமிழக நலனுக்காக சிறு துரும்பைக்கூட கிள்ளிப் போடாதவர் - என்று மதுரையில் பா.ஜ.க. மாநிலத் தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் கடுமையாகச் சாடினார்.

இதுதொடர்பில் மேலும் அவர் கூறியதாவது: -

பா.ஜ.க. ஐந்தாவது மாநில மாநாடு 12 ஆண்டுகளுக்கு பின், ஏப்ரல் 28, 29 ஆம் திகதிகளில் மதுரையில் நடைபெறவுள்ளது. தமிழகத்துக்கு வருகை தந்த பிரதமர் மன்மோகன் சிங், முல்லைப்பெரியாறு அணைப் பிரச்சினையில் நடவடிக்கை எடுப்பார் என்று எதிர்பார்த்தது தவறு. போராட்டங்கள் நடத்தி கோமாவிலுள்ள மத்திய அரசை எழுப்ப முடியாது.

2014 வரை காங்கிரஸ் ஆட்சி இருக்குமா, அதற்கு முன்கூட்டியே கவிழுமா என்ற நிலை தற்போதுள்ளது. மக்கள் நலனுக்காக பிரதமர் தமிழகம் வரவில்லை. மத்தியமைச்சர் சிதம்பரத்தின் நலனுக்காக வந்தார். தமிழக நலனுக்காக சிறு துரும்பைக் கூட கிள்ளிப் போடாதவர் சிதம்பரம்.



முஸ்லிம்களுக்கு மக்கா, கிறிஸ்தவர்களுக்கு ஜெருசலேம் செல்ல சலுகை வழங்கியதுபோல, இந்துக்கள் கைலாயம், பத்ரிநாத், கேத்ரிநாத், காசி, இராமேஸ்வரம் செல்ல சலுகை வழங்க வேண்டும்.

திருமங்கலம் அருகே, அத்வானி செல்லவிருந்த பாதையில், குண்டு கைப்பற்றப்பட்ட வழக்கில், விசாரணை திருப்தியாக இல்லை. உண்மையான குற்றவாளிகளைக் கைது செய்ய வேண்டும். மதுரைக்கு பெருமை மீனாட்சியம்மன் கோயில்; நகர முதல்வர் அல்லர். கோயிலைச் சுற்றியுள்ள விதிமீறிய கட்டடங்களை இடிக்க வேண்டும்.

இத்தகைய கட்டடங்களை இடிக்கத் தடை ஏற்படுத்தும் வகையில் மாநகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றியிருந்தால், அது கண்டிக்கத்தக்கது - என்றார். (வ)

# சென்னைக்கு 600 கி.மீ. தூரத்தில் 'தானே' புயல் தமிழகக் கடலோரப் பகுதிகள் உஷார்

சென்னை, டிசெ.29

சென்னையிலிருந்து 600 கிலோ மீற்றர் தொலைவில் "தானே" புயல் நிலை கொண்டுள்ளது. இதனால் தமிழக கடலோரப் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் கன மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்றும் வானிலை மையம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் வானிலை ஆய்வு மண்டல இயக்குநர் தெரிவித்ததாவது:

சென்னையில் இருந்து கிழக்கு, தென்கிழக்கே 600 கிலோமீற்றர் தொலைவிலும், இலங்கையில் திருகோணமலையில் இருந்து வடகிழக்கே 650 கிலோ மீற்றர் தெலைவிலும், அந்தமானில் இருந்து வட மேற்கே 700 கிலோ மீற்றர் தொலைவிலும் "தானே" புயல் மையம் கொண்டுள்ளது.

இந்தப் புயல் அடுத்த 24 மணி நேரத்தில் மேற்கு, வடமேற்கு திசை நோக்கி நகரக் கூடும். இதனால் வட தமிழகம், தென் ஆந்திரா கடற்கரை மாவட்டங்களில் மழை பெய்யக் கூடும். "தானே" புயல் கடலூர் - நெல்லூருக்கு இடையே நாளை வெள்ளிக்கிழமை காலை கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புயல் கரையைக் கடக்கும்போது மணிக்கு 100 கிலோ மீற்றர் முதல் 120 கிலோ மீற்றர் வேகத்தில் கடல் காற்று வீசக்கூடும். இதனையொட்டி வட தமிழகம், புதுவை மற்றும் தென் ஆந்திர கடற்கரைப் பகுதிகளில் பலத்த மழை பெய்யக் கூடும். தமிழகம் மற்றும் புதுவைக் கடற்கரைப் பகுதிகளில் மணிக்கு 50 கி.மீ. முதல் 55 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும்.

இதனால் கடல் கொந்தளிப்புடன் காணப்படும். எனவே மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்று அவர் தெரிவித்தார். (வ)

## வடமாநிலங்களில் தொடருகிறது குளிர் 135 பேர் சாவு

டில்லி, டிசெ.29

வட மாநிலங்களில் நிலவி வரும் கடும் குளிர் காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை 135 ஆக அதிகரித்துள்ளது.

டில்லியில் நேற்றுக் காலை வெப்ப நிலை 4.1 டிகிரி செல்சியஸாக இருந்தது. உத்தரப் பிரதேசத்தில் நேற்றுக் காலை பனிமூட்டம் காரணமாக பிரதாப்கரில் லொறியும் காரும் மோதியதில் 2 பேர் உயிரிழந்தனர்.

உத்தரப் பிரதேசத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் குறைந்தபட்ச வெப்ப நிலை வழக்கத்தைவிட குறைவாக இருந்ததாக வானிலை ஆய்வு மையம் தெரி வித்துள்ளது.



இலங்கைச் சிறையில் வாடும் தமிழக மீனவர்களை விடுவிக்கக்கோரி மீனவ சங்கப் பிரதிநிதிகள் மத்திய அமைச்சர் சிதம்பரத்திடம் வலியுறுத்தினர்.

## இந்திய தேசிய கீதத்துக்கு வயது 100

'ஜன கண மன...' இந்திய தேசிய கீதத்தின் 100 ஆவது ஆண்டு பிறந்த நாள் இந்தியா முழுவதும் நேற்றுமுன்தினம் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. சமஸ்கிருதம் கலந்த வங்க மொழியில் ரவீந்திரநாத் தாகூர் எழுதிய இந்தப் பாடல் 1911 டிசெம்பர் 27 இல் கொல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் முதன் முறையாகப் பாடப்பட்டது.

இந்தியா சுதந்திரம் அடைந்து மூன்று ஆண்டுகளுக்குப் பின்பு 1950 ஜனவரி 24 ஆம் திகதி 'ஜன கண மன...' தேசிய கீதமாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. 1911 இல் கொல்கத்தாவில் அரங்கேறிய இப்பாடலுக்கு இப்போது 100 வயதாகியுள்ளது.(வ)

# 'பகவத் கீதை' தடை விவகாரம்; ரஷ்யத்தூதர் - கிருஸ்ணா பேச்சு

பகவத் கீதை நூலுக்கு தடை விதிக்க வேண்டும் என்று ரஷ்யாவில் மத ரீதியில் கோரிக்கை எழுந்துள்ள விவகாரத்தில் ரஷ்ய அரசு தலையிட்டுத் தீர்வு காணவேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது. இது தொடர்பாக இந்தியாவுக்கான ரஷ்யத் தூதர் அலெக்சாண்டர் கடாகினுடன் மத்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா ஆலோசனை நடத்தினார்.

டில்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது, இந்த விடயத்தில் இந்திய அரசின் நிலைப்பாடு விவரிக்கப்பட்டதோடு, ரஷ்ய அரசு தலையிட்டு இதற்கு சுமுகத் தீர்வு காணவேண்டும் என்று கிருஷ்ணா வலியுறுத்தினார் எனத் தெரிகிறது.

ரஷ்யாவின் டோம்ஸ்க் நகரிலுள்ள நீதிமன்றத்தில் கிறிஸ்தவ ஆர்த்தடாக்ஸ் தேவாலயம் சார்பில் பகவத்கீதையை தீவிரவாத நூல் என்றும் அதற்குத் தடை விதிக்க வேண்டும் என்றும் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்தப் பிரச்சினை குறித்து ரஷ்யத் தூதருடன் கிருஷ்ணா ஆலோசனை நடத்தியது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. இந்துக்களின் புனித நூலாகக் கருதப்படும் பகவத்கீதைக்குத் தடை விதிப்பது மத உணர்வுகளைப் பாதிக்கும். எனவே, இவ்விடயத்தில் ரஷ்ய அரசு தலையிட்டு சுமுக தீர்வு காண வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இது நீதிமன்ற விவகாரம் என்பதால், அரசால் அதிகபட்சம் எந்த அளவுக்குத் தலையிடமுடியுமோ அந்த அளவுக்குத் தலையிட்டு இவ்விவகாரத்தில் சுமுகத் தீர்வு காணப்படும் என்று ரஷ்யத் தூதர் உறுதி அளித்தார் எனக் கூறப்படுகிறது. (வ)

## பட்டாசுத்தொழிற்சாலையில் தீ விபத்து; 4 பேர் சாவு

சிவகாசி, டிசெ.29

சிவகாசி அருகே தனியாருக்குச் சொந்தமான பட்டாசு தயாரிப்புத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர். 2 பேர் படுகாயம் அடைந்தனர்.

சிவகாசி அருகே சொக்கலிங்கபுரத்தில் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் ரோல் கேப் தயாரிப்பதற்காக வெடி மருந்துகளை உலர வைக்கும் பணி நடைபெற்றது.

ரோல் கேப்புகளை துண்டுகளாக கத்தரிப்பதற்காக எடுத்த போது பட்டாசுகளில் ஏற்பட்ட உராய்வு காரணமாக தீ விபத்து ஏற்பட்டது.

இதன் காரணமாக பட்டாசுகள் வைத்திருந்த அறை இடிந்து தரைமட்டமானது. இதில் ஆலையில் பணியாற்றிய முருகேசன் பிள்ளை, சங்கரலிங்கம், சுந்தரராஜ், மாரிமுத்து ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும் தர்மர் மற்றும் மாரியப்பன் ஆகியோர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (வ)

# நிறைவேற்றப்பட்டது லோக்பால் பிரேரணை அரசமைப்புத் திருத்தப் பிரேரணை தோல்வி

டில்லி, டிசெ. 29

'லோக்பால், லோக் ஆயுத பிரேரணை - 2011' இந்திய மக்களவையில் குரல் வாக்கெடுப்பு மூலம் நேற்றுமுன்தினம் நிறைவேறியது.

லோக்பால் அமைப்புக்கு அரசமைப்பு அந்தஸ்து தருவதற்காகக் கொண்டுவரப்பட்ட அரசமைப்புச் சட்டத் திருத்த பிரேரணை தோற்கடிக்கப்பட்டது. அரசுக்கு இது பெரும் பின்னடைவாகக் கருதப்படுகிறது.

ஊழலை அம்பலப்படுத்துவோர் பாதுகாப்பு பிரேரணையும் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.

அறிமுகப்படுத்தப்பட்டு 43 ஆண்டுகளாகக் கிடப்பில் போடப்பட்ட லோக்பால் பிரேரணை தொடர்பாக காரசாரமான விவாதம் மக்களவையில் சுமார் 10 மணிநேரம் நடைபெற்றது.

எதிர்க்கட்சிகள் சார்பில் கொண்டு வரப்பட்ட சில திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. லோக் ஆயுத அமைப்பது கட்டாயம் என்று முதலில் கூறப்பட்டிருந்தது. எதிர்க்கட்சிகளின் வேண்டுகோளை ஏற்று லோக் ஆயுத பிரேரணையை அமைப்பது குறித்து மாநில அரசே முடிவு செய்துகொள்ளலாம் என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று ராணுவம், கடலோர காவல்படை ஆகியவற்றை லோக்பால் வரம்பிலிருந்து நீக்குவதற்கும் திருத்தம் செய்ய அரசு ஒப்புக் கொண்டது.

பிரதமரை விசாரிக்க லோக்பால் உறுப்பினர்களில் நான்கில் மூன்று பங்கு உறுப்பினர்கள் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்றிருந்தது. மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் ஒப்புதல் அளித்தால்போதும் என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பா.ஜ.கவின் திருத்தங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாகக் கூறி வாக்கெடுப்புக்கு முன் பகுஜன் சமாஜ் கட்சி உறுப்பினர்களும், சமாஜ்வாதி கட்சி உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தனர்.


பின்னர் நடைபெற்ற குரல் வாக்கெடுப்பில் லோக்பால் பிரேரணை நிறைவேறியதாக அறிவிக்கப்பட்டது. லோக்பால் அமைப்புக்கு அரசமைப்புச் சட்ட அந்தஸ்து தரும் திருத்த பிரேரணைக்கு 3 பிரிவுகளில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அரசமைப்பு சட்டத்தில் திருத்தம் கொண்டு வரவேண்டும் எனில் அவையின் மொத்த உறுப்பினர்களில் 50 சதவீதம் பேர் அவையில் இருக்க வேண்டும். அவர்களில் மூன்றில் இரண்டு பங்கு பேர் ஆதரிப்பது கட்டாயமாகும்.

ஆனால், இந்த திருத்த பிரேரணைக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை என்பதை எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் சுட்டிக்காட்டினார்.

இதையடுத்து இந்த பிரேரணை தோற்கடிக்கப்பட்டது என்று மக்களவைத் தலைவர் மீரா குமார் அறிவித்தார். (வ)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மண்ணில்
03.11.1935

விண்ணில்
01.12.2011

### அமரர் கந்தையா நாகரத்தினம்
(இளைப்பாறிய மின்சாரசபை ஊழியர்)

எமது குடும்பத்தின் அணையா விளக்காய் ஒளிர்விட்ட குடும்பத் தலைவர் க.நாகரத்தினம் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (29.12.2011) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற வுள்ளது. அத்தருணம் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் பங்குகொண்டு தொடர்ந்து நடைபெறும் மதிய போச னத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். அத் துடன் அன்னாரின் இறந்த செய்திகேட்டு பல வழிகளிலும் ஆறுதல் தெரி வித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய். (12223)(2.6.25) - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### இராஜரட்ணம் கதிர்காமநாதன்
(களஞ்சிப் பொறுப்பாளர் SK)



கந்தர்மடத்தைப்பிறப்பிடமாகவும், கந்தரோடை, தட்டாதெருவை வசிப்பிடமாகவும், தற்பொழுது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜரட்ணம் கதிர் காமநாதன் 27.12.2011 செவ்வாய்க் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான இராஜரட்ணம் -சரஸ்வதி தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்ற தம்பிராஜா மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், பாலேந் திரன் (பாபு-லண்டன்), இராசேந்திரம் (ராஜீ-கனடா), காலஞ் சென்ற குலேந்திரன் மற்றும் யோகேந்திரன் (லண்டன்) ஆகியோ ரின் அன்புத் தந்தையும், நவரட்ணம் (பபி-இந்தியா), சத்திய லட்சுமி (பாப்பா- கல்விப் பணிப்பாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயதேவி, காங்கேயன், பாலசிங்கம் (சந்திரன்) ஆகி யோரின் அன்பு மைத்துனரும்,அஜந்தா (லண்டன்), ஜெயதீபா (கனடா), சுதந்திரமதன், பாலமுரளி, பிரசாந்தி, ஆதவன் ஆகியோரின் அன்பு மாமனும், வனிதா, செந்தில் ஆகியோரின் அன்புப் பெரியப் பாவும், திவ்யா, வித்யா, ப்ரீத்தி, குலேன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2011) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் (கனடா நேரப்படி) கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தொடர்புகளுக்கு:
+19055541034
+16472916428

தகவல்
குடும்பத்தினர்.

(12[illegible]2)(6/25/8)

## கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்

### சகோதரி ஒலிவ் செல்வமலர் தர்மானந்தன்



இருபாலை, கோப்பாய் கானான் ஜெப ஆலய ஊழியர் ஒலிவ் செல்வமலர் தர்மானந்தன் 28.12.2011 நேற்று அதிகாலை 2.00 மணிக்கு கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற க.தர்மானந்தனின் அன்பு மனைவியும் நரேந்திரா(Pastor.Calvary Church ,Colombo) மகேந்திரா (Jeffries, UK), ரவீந்திரா (HSBC, UK) ஆகியோரின் அன்புத் தாயும் சுசி , எரிக்கா, செரானி ஆகியோரின் மாமியும் லிலாந்தி, ஹரின், ஸ்ரெபான், கனா,யோசுவா, பென்ஜமின், கேர்சன் ஆகியோரின் பாட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.12.2011 ) வியாழக்கிழமை பொதுமக்களின் அஞ்சலிக்காக கானான் ஜெப ஆலயமண்டபத்துக்கு கொண்டு செல்லப்படும். அன்னார் கடந்த 20 வருடகாலமாக கானான் சபையில் முழுநேர ஊழியராகப் பணிபுரிந்தார்.

அன்னாரின் அடக்க ஆராதனை நாளை (30.12.2011) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு இருபாலை கானான் ஜெப ஆலயத்தில் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து அவரின் பூதவுடல் கோப்பாய் ராஜவீதியில் உள்ள கானான் ஜெப ஆலய கல்லறைத் தோட்டத்துக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப் படும்.

*" கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள்"(வெளி. 14. 13)*

(சி/7262)(3.6.25)

தகவல்:
தலைமைப் போதகர்,
கானான் ஜெப ஆலயம்,
இருபாலை,கோப்பாய்.

## இதய அஞ்சலி



சத்தியமூர்த்தி சிவகலா அவர்களின் அன்பு மைத்துனர்

**செல்லத்துரை சிவபாதம்**

(கோகிலா-கனடா)

அவர்கள் கனடாவில் இறைபதமடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சம்பியன் லேன்,
கொக்குவில்.

வளர்மதி நண்பர்கள்.

## சுகயீனப் போராட்டம்

நாடெங்கிலும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று சுகயீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் நேற்று சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டனர். (ங-207)

## கண்ணீர் அஞ்சலி

எமது வைத்தியசாலையில் பரிசாரகராகக் கடமைபுரியும்

**வே. புவனேந்திரத்தின்** அன்புத்தந்தை

**கந்தையா வேலாயுதம்** அவர்கள்

14.12.2011 அன்று மறைந்ததையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தி னருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலை,
கைதடி. (12183)(6-22-8)

பணியாளர் நலன்புரி சங்கம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**கோவிந்தசாமி தவராஜா**

பிறப்பு : 25. 04. 1945
இறப்பு : 06. 01. 2011



அமரர்

**தவராஜா இரஞ்சிதமலர்**

பிறப்பு : 16. 04. 1947
இறப்பு : 11. 12. 2010

(முன்னாள் உரிமையாளர் - முருகன் ஸ்ரோஸ், முருகன் கிறைன்டிங் மில் (தருமபுரம்), கலாரஞ்சிதா ஸ்ரோஸ் (வல்வெட்டி)

### நினைவோடு வாழும் எம் நினைவுகள்

ஆறிரு மாதங்கள் அகன்றது கண்டோம் – ஆனால்
ஆறவில்லை எங்கள் மனம் இன்னமுமே!

ஆலமரம் போல் வாழ்ந்தோம் அவனியிலே!
அடிமரமோ் சாய்ந்ததனால் விழுதுகள் நாம்
தவிக்கின்றோம் அன்பின் அம்மாவே! அப்பாவே!

நீங்கள் செய்த தவறுதான் என்னம்மா! அப்பா!
சுயநலமே தெரியாமல் பொது நலமாய் வாழ்ந்ததா?
எம் வாழ்க்கையின் பயணத்தில் துடுப்பாக வந்தீரே!
எம் செல்வமே..... அப்பாவே!

நாம் வாகைமேல் வாகைசூட வழிகாட்டி நின்றீரே!
இன்று துடுப்பில்லாப் படகாக தவிக்கிறோம் பாதியிலே!

அன்பு மொழியின்றி அழுகின்றோம் பிள்ளைகள், மருமக்கள். உம் ஆசை
அரவணைப்பின்றி தவிக்கிறார்கள் பேரக்குழந்தைகள்.

நீங்கள் நம்பிய தெய்வங்கள் உம்மை காக்கவில்லை!
நாங்கள் நம்பிய தெய்வங்கள் நீங்களோ இன்று இல்லை! ஆனாலும்,
அழியாத உருவாகி ஆண்டாண்டு காலங்கள் நிலையாக வாழுமே உம்
நினைவுகள் என்றும் எம் நெஞ்சங்களில்!

"உங்கள் ஆத்மா சாந்திபெற வேண்டுகிறோம்"

ஓராண்டு திதி 30.12.2011 (வெள்ளிக்கிழமை) 127 3/4 அபிலா தோடர்மாடி, சேன் ஜேம்ஸ் வீதி, கொழும்பு - 15 இல் உள்ள அன்னாரது உறவினர் வீட்டில் நடைபெறும்.

சாந்தி சாந்தி சாந்தி

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

சுஜாதா :- 078 7524839
சுதன் :- 077 6231016

## 31 ஆம் நாள் நினைவலைகளும் சபிண்டீகரண நிகழ்வும்

குலம் மகிழ
27 * 05 * 1954



குவலயம் நெகிழ
30 * 11 * 2011

### அமரர் தேசிங்கம் குலேந்திரராஜா (கட்டி)

(மல்லிகா லொறி உரிமையாளர்)

**கடந்த 30.11.2011 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் தேசிங்கம் குலேந்திரராஜா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (30.12.2011) வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.**

*நோயுற்ற வேளையிலும் மனம் தளராது தானுண்டு தனது வேலை உண்டென நேரிய பார்வை வெள்ளை வெளேரென ஆடை அணிந்து வெள்ளை உள்ளத்துடன் பார்த்தவரைக் கவரும் கம்பீர நடையுடன் சுற்றிவரும் குலத்துக்கு இராசாவான உங்கள் கம்பீரத் தோற்றத்தை எப்போ காண்போம்? நீங்கள் முற்றத்தில் வந்து நின்றாலே அங்கு தனித்துவமான ஒரு சந்தோஷம்களைகட்டும். இவ்வரிய குணங்கள் உள்ள உங்களை எம்முடன் நீண்ட நாள் உறவாட காலனும் மனம் பொறுக்காது ஏன் அழைத்துச் சென்றானோ?*

**சகல வழிகளிலும் எமக்கு உதவிகள் புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றாம். இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.**

"தேவிபவனம்" வல்லியாவத்தை,
கரணவாய் மேற்கு, கரவெட்டி.
தொ.பே- 0213218677

குடும்பத்தினர்.

# UNIVERSITY OF JAFFNA
## BID NOTICE

The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed bids from the qualified contractors for the fallowing works.

| Work/Service Details | Security deposit (Rs) | Non refundable deposit (Rs) | Approximate direct cost of the work (Rs.in Million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|
| Rehabilitation and refurbishment of a Seminar Hall, Language and E-Learning Laboratories for Staff Development Centre. | 24,000.00 | 500.00 | 2.4 | C8 |
| Improving Parking Facilities at Kanagasuntheram Male Hostel and Sivagnanasundaram Female Hostel, University of Jaffna. | 16,000.00 | 500.00 | 1.6 | C9 |

Bid forms may be obtained from the Deputy Registrar/ Capital Works & Planning Unit University of Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the above bid fee at the shroff's Counter, University of Jaffna till 12.01.2012.

Perfected bid should be Sealed and marked with the job and the name of the work on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna P.Box 57, Thirunelvely, Jaffna or could be deposited in the bid box kept at Registrar' s Office, University of Jaffna.

Bid will be accepted till 2.30 p.m. on 20.01.2012 and open immediately thereafter.

Bidders or their accredited representatives could be present at the time of opening of bids.

Bid forms may be inspected by the Bidders free of charge at the Capital Works & Planning Unit of this University during office hours, if necessary.

**P.O Box 57, Thirunelvely, Jaffna.**
**28.12.2011.**

**Registrar,**
**University of Jaffna.**

## மரண அறிவித்தல்

### ஹூல், ஜோன் இரத்தினஜோதி ஐறேனியஸ்

போதகர், கிருபை சத்தியசபை, மன்னார். (ஜோதி)



(முன்னாள் பொறியியலாளர்- சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை)

செம்மணி வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும், சாவற்காடு, மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட ஹூல் ஜோன் இரத்தின ஜோதி ஐறேனியஸ் (ஜோதி) புதன்கிழமை (28.12.2011) கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வண.பிதா R.H.R.Hoole, ஜீவமணி(Cannonசோமசுந்தரம் அவர்களின் புதல்வி) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற காமினி, (பிரான்ஸிஸ் தம்பதியரின் மகள்) மற்றும் ஸ்ரீராணி (வேதவனம் தம்பதியரின் மகள்) ஆகியோரின் அன்புக் கணவரும், ராஜன், காலஞ்சென்ற முக்தன், மற்றும் ஜீவன், போல், தாமரி, நோயல் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தபீத்தா (மாணவி- மருத்துவ பீடம், யாழ். பல்கலைக்கழகம்), மோசே, இலைஜா, ரூத் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை (A.F.Raymond's) மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக இன்று (29.12.2011) வியாழக்கிழமை இரவு 9 மணிவரை வைக்கப்படும் அதே வேளை இன்று மாலை 6 மணிக்கு விசேட ஆராதனையும் நடைபெறும்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (30.12.2011) வெள்ளிக்கிழமை பி.ப 3 மணியளவில் சாவற்காடு, மன்னாரில் இடம்பெற்று மன்னார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

சாவற்காடு,
மன்னார்.

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன்
29 டிசெம்பர் 2011 வியாழக்கிழமை

# பாகிஸ்தான் பயிற்சியாளராகிறார் வட்மோர்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளராக வட்மோர் தெரிவு செய்யப்பட உள்ளார். இதற்கான அழைப்பை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் விடுத்தது.

இதை ஏற்று வட்மோர் ஜனவரி 2 ஆவது வாரம் பாகிஸ்தான் சென்று ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவார் என்று தெரிகின்றது.

களத்தடுப்பு பயிற்சியாளர் ஜூலியன் பவுன்டைன் இங்கிலாந்து தொடரிலேயே அணியுடன் இணைந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (15)

LIGUE 1

# இந்தியா - பாகிஸ்தான் விரைவில் மோதுகின்றன



நான்கு நாடுகள் பங்கேற்கும் ஆசிய கிண்ணக் கிரிக்கெட் அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன.

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகள் பங்கேற்கும் ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 2012 இல் பங்களாதேஷில் நடக்க இருக்கின்ற அனைத்து ஆட்டங்களும் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடக்கும் லீக் ஆட்டங்கள் எதிர்வரும் மார்ச் 12 இல் தொடங்கி 22 இல் முடியும்.

இந்திய அணி முதல் ஆட்டத்தில் இலங்கையை (மார்ச் 13) சந்திக்கின்றது. அத்துடன் பாகிஸ்தானை மார்ச் 18 இல் எதிர் கொள்கிறது. கடந்த உலகக் கிண்ண அரையிறுதிக்குப்பின் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ள போட்டிகள் என்பதால் அதிக எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இறுதியாட்டம் மார்ச் 22 இல் நடக்கவுள்ளது. (15)

# எட்டாவது சுற்றில் வீழ்ந்தது இந்தியா


மகளிருக்கான உலக செஸ் சம்பியன் தொடரின், எட்டாவது சுற்றில் இந்திய அணி 1 - 3 என்ற கணக்கில் ஜோர்ஜியாவிடம் தோல்வி அடைந்தது.

துருக்கியில் உள்ள மார்டின் நகரில், பெண்களுக்கான உலக செஸ் சாம்பியன் தொடர் நடக்கிறது. இதில் இந்தியா, சீனா, ஆர்மினியா உள்ளிட்ட பத்து அணிகள் பங்கேற்கின்றன. இதன் எட்டாவது சுற்று போட்டியில் இந்திய அணி, ஜோர்ஜியாவை எதிர்கொண்டது.

இந்தியா சார்பில் கொனேரு ஹம்பி, ஹரிகா துரோணவள்ளி தங்கள் ஆட்டத்தை சமநிலை செய்தனர். சவுமியா சுவாமிநாதன், தனியா சச்தேவ் ஆகியோர் தோல்வி அடைந்தனர். இதன் மூலம் இந்திய அணி 1 -3 என்ற கணக்கில் தோல்வி அடைந்தது.

மற்றைய போட்டிகளில் ரஷ்யா (4-0, எதிர்-தென்னாபிரிக்கா), கிரீஸ் (3.5-0.5, எதிர்-துருக்கி), உக்ரைன் (2.5-1.5, எதிர்-சீனா), ஆர்மினியா (2.5-1.5, எதிர்-வியட்னாம்) ஆகிய அணிகள் வெற்றி பெற்றன.

எட்டாவது சுற்றின் முடிவில், சீனா (14 புள்ளி), ரஷ்யா (12), இந்தியா (11), உக்ரைன் (10), ஜோர்ஜியா (10) ஆகிய அணிகள் முதல் வரிசையில் உள்ளன. (15)



**"வாராய், நீ வாராய்!" தென்னாபிரிக்கா மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் போது பிடியொன்றை எடுக்கும் முயற்சியில் அம்லா.**

# மான்செஸ்டர் யுனைட்டெட் அணி வெற்றி பெற்றது

பிரிமியர் லீக் கால்பந்து போட்டியில் மான்செஸ்டர் யுனைட்டெட் அணி அபார வெற்றி பெற்றது.

இங்கிலாந்தில் நடக்கும் இந்தத்தொடரின் லீக் போட்டியில் மான்செஸ்டர் யுனைட்டெட், விகான் அணிகள் மோதின. இதில் தொடக்கத்தில் இருந்தே அசத்தியது மான்செஸ்டர் அணி. (8 ஆவது நிமிடத்தில்) பார்க் ஜி-சங் ஒரு கோல் அடிக்க, பெர்படோவ் (41, 58 ஆவது நிமிடங்களில்) அடுத்தடுத்து இரு கோல்கள் அடித்தார். (75 ஆவது நிமிடத்தில்) வாலன்சியா தன்பங்கிற்கு ஒரு கோல் அடித்தார்.

அடுத்த சில நிமிடத்தில் (78 ஆவது நிமிடத்தில்) கிடைத்த 'பெனால்டி' வாய்ப்பில் அசத்திய பெர்படோவ், 'ஹற்றிக்' சாதனை படைத்தார். முடிவில் 5-0 என்று, மான்செஸ்டர் யுனைட்டெட் அணி வென்றது. (15)



'கோல்' அடிக்கும் முயற்சியில் இரு அணி வீரர்களும்

# இந்தியாவின் கைப்பாவை ஐ.சி.சி

## முன்னாள் ஆஸி. வீரர் குற்றஞ்சாட்டுகிறார்

International Cricket Council

இந்திய கிரிக்கெட் சபையின் கைப்பாவையாக சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் செயல்படுகிறது என்று ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் மெர் ஹக்ஸ் கூறியுள்ளார்.

சச்சின் 100 ஆவது சதமடிக்கும் வாய்ப்பை இந்த முறையும் இழந்துள்ளார். மெல்போர்ன் டெஸ்டில் அருமையாக ஆடிவந்த அவர் ஆட்டத்தின் கடைசி பந்து பரிமாற்றத்தில் துரதிர்ஷ்டவசமாக ஆட்டமிழந்தார்.

சுமார் 9 மாத காலமாக சாதனை நழுவி செல்வது ரசிகர்களை மிகுந்த ஏமாற்றத்திற்குள்ளாக்கி உள்ளது.

இந்த நிலையில் ஆஸ்திரேலிய முன்னாள் வீரர் மெர் ஹக்ஸ் கூறுகையில்,

''எல்லோருமே சச்சின் சாதனையை ஆவலுடன் எதிர்பார்த்துள்ளனர். ஊட கங்கள் வெகுநாளாக காத்துக் கொண்டிருக்கின்றன. இந்த எதிர்பார்ப்புகள் சச்சின் மனதில் நிச்சயம் ஓடி கொண்டிருக்கும். அதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

பொண்டிங் கடைசியாக 5 ஆட்டங்களில் 3 அரை சதங்கள் விளாசியுள்ளார். எனினும் அவரை நீக்க வேண்டுமென பலர் கூறுகின்றனர். ஆனால் சச்சின் 60, 70களில் ஆட்டமிழந்தால் அதிர்ஷ்டம் கைகொடுக்கவில்லை என்கின்றனர். யு.டி.ஆர்.எஸ் விடயத்தில் இந்திய கிரிக்கெட் சபையின் கைப்பாவையாக ஐ.சி.சி செயல்படுகிறது'' என்றார். (15)

# ஆஸி. ஊடகங்கள் இந்தியா மீது பாய்ச்சல்

டெஸ்ட் தொடரில் யு.டி.ஆர்.எஸ் முறை வேண்டாம் என்று மறுத்த இந்திய கிரிக்கெட் சபைக்கு (பி.சி.சி.ஐ), ஆஸ்திரேலிய ஊடகங்கள் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்தியா, ஆஸ்திரேலிய அணிகள் இடையில் 'பார்டர்-கவாஸ்கர்' கிண்ணத்துக்கான டெஸ்ட் தொடர் நடக்கிறது. இதில் யு.டி. ஆர்.எஸ் முறை பயன்படுத்துவதை பி.சி.சி.ஐ ஏற்கவில்லை. இதனிடையே, மெல்போர்ன் டெஸ்டில் ஆஸ்திரேலியாவின் மைக் ஹசி, கோவன் இருவரும் நடுவரின் தவறான தீர்ப்பில் வெளியேறினர். யு.டி.ஆர்.எஸ் முறை இல்லாததால் மேன்முறையீடு செய்யமுடியவில்லை.

இதுகுறித்து 'த டெய்லி டெலிகிராப் பத்திரிகையில், தொழில்நுட்பத்தை ஏற்க மறுக்கும் இந்தியாவின் கற்கால எண்ணத்துக்கு, ஹசியின் கிரிக்கெட் வாழ்க்கை விலையாகி உள்ளது. கோவன் ஏமாற்றப்பட்டார், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

'த ஆஸ்திரேலியன் என்ற பத்திரிகையில், மோசமான தீர்ப்புகளால், டெஸ்ட் தொடரின் தொடக்கத்திலேயே சர்ச்சையை ஏற்படுத்தி விட்டது, என்று தெரிவித்துள்ளது. நடுவர்களின் தீர்ப்புகள் துல்லியமாக இருக்க ஐ.சி.சி. தான் முயற்சி செய்ய வேண்டும், என்று தெரிவித்துள்ளது.

**சப்பல் எதிர்ப்பு:**

இந்தச் சம்பவம் குறித்து இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளர் கிரேக் சப்பல் கூறுகையில்,''உலகில் இந்தியா மட்டும் தான் யு.டி.ஆர்.எஸ் முறைக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறது. தொழில்நுட்பம் என்பது குறைபாடு இல்லாதது என்று கூற முடியாது. இருப்பினும், இது நடுவர்களுக்கு உதவியாக இருக்கும். எந்த இரு அணிகளும் மோதும் அனைத்து தொடரிலும், இந்த முறை கட்டாயம் பயன்படுத்த வேண்டும்'' என்றார்.(15)

# வெல்லுமா இந்தியா?




மெல்போர்னில் நடைபெறும் இந்திய - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தில் நேற்றைய 3 ஆவது நாள் ஆட்டத்தில் 15 இலக்குகள் வீழ்த்தப்பட்டன. ஆஸ்திரேலிய அணி கைவசம் 2 இலக்குகளுடன் 230 ஓட்டங்களால் இந்திய அணியை விட முன்னிலையில் உள்ளது.

மெல்பேர்னில் கடந்த திங்கட் கிழமை முதலாவது டெஸ்ட் ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணித்தலைவர் மைக்கல் கிளார்க் முதலில் துடுப்பாடத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி சகல இலக்குகளையும் இழந்து 333 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் அறிமுக வீரர் எட் கோவன் 68, பொண்டிங் 62, சிடில் 41 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் இந்திய அணி சார்பில் சகீர்கான் 77 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், அஸ்வின் 81 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், இசாந் சர்மா 106 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்று முன்தினம் ஆட்ட நேர நிறைவில் 3 இலக்குகளை இழந்து 214 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் டிராவிட் 68 ஓட்டங்கள், 'நைட் வோச்மனாக' களமிறங்கிய இஷாந்த் சர்மா (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்த நிலையில் நேற்றைய ஆட்டம் ஆரம்பமாகி மேலதிகமாக 68 ஓட்டங்கள் சேர்ப்பதற்குள் மீதி 7 இலக்குகளையும் இழந்தது இந்தியா. டிராவிட் 68, லக்ஸ்மன் 2, ஹோக்லி 11, டோனி 6, 'நைட் வோச்மனாக' களமிறங்கிய இஷாந் சர்மா 11 ஓட்டங்களுடன் 8 ஆவது இலக்காக ஆட்டமிழந்தார். பின் வரிசையில் அஸ்வின் ஓட்டங்களைக் குவித்த போதும் இந்திய அணி இறுதியில் 282 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அஸ்வின் 31 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். பந்து வீச்சில் ஆஸி. சார்பில் ஹில்பென்ஹாஸ் 75 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை வீழ்த்தினார். இவர் டெஸ்ட் இன்னிங்ஸ் ஒன்றில் 5 இலக்குகளை வீழ்த்தியமை இதுவே முதல் தடவையாகும். பீற்றர் சிடில் 63 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் பற்றின்சன் 55 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

முதல் இன்னிங்ஸில் 51 ஓட்டங்களால் முன்னிலை வகித்த நிலையில் ஆஸ்திரேலிய அணி நேற்றைய தினமே தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது. ஆனால் ஆஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்களால் இந்தியாவின் பந்து வீச்சை தாக்குபிடித்து நிலைத்து நிற்க முடியாமல் ஒற்றை ஓட்டங்களுடன் வெளியேறினர்.


வோர்னர் 5, கோவன் 8, மார்ஷ் 3, கிளார்க் 1 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க ஆஸ்திரேலியா 27 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்தது. அணியில் தமது இடத்தை தக்கவைத்துக்கொள்வதற்கு போராடும் ரிக்கி பொண்டிங், மைக்கல் ஹஸி ஆகியோர் மாத்திரமே குறிப்பிடத்தக்களவு ஓட்டங்களைப் பெற்றனர். முதல் இன்னிங்ஸில் 62 ஓட்டங்களைப் பெற்ற பொண்டிங் இரண்டாவது இன்னிங்ஸில் 69 ஓட்டங்களைப் பெற்றார். பொண்டிங், ஹஸி இடையே ஐந்தாவது இலக்குக்காக 85 ஓட்டங்கள் பகிரப்பட்டன.

பொண்டிங்கைத் தொடர்ந்து ஹடின் 6, சிடில் 4 லயன் 0 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க ஆஸ்திரேலியா 8 இலக்குகள் நஷ்டத்துக்கு 166 ஓட்டங்களைப் பெற்றது. முதல் இன்னிங்ஸில் சர்ச்சைக்குரிய விதமாக ஓட்டமெதுவுமின்றி ஆட்டமிழந்த ஹஸி நேற்று ஆட்டநேர நிறைவு வரையில் ஆட்டமிழக்காமல் 79 ஓட்டங்களைப் பெற்றார். ஹஸி 69 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கொடுத்த பிடியை 'ஸ்லிப்' பகுதியில் நின்றிருந்த டிராவிட் கைப்பற்றத் தவறினார்.

இறுதியில் நேற்றைய நாள் நிறைவில் ஆஸி. 8 இலக்குகள் நஷ்டத்துக்கு 179 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இந்திய பந்துவீச்சாளர்களில் உமேஸ் யாதவ் 49 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும் சகீர்கான் 32 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (ங-15)

# கர்ஜிக்கும் சிங்கங்கள்!





தென்னாபிரிக்க அணியை விட 426 ஓட்டங்கள் முன்னிலையுடன் கைவசம் 3 இலக்குகளுடன் இலங்கை அணி நேற்றைய ஆட்டத்தை நிறைவு செய்தது. தென்னாபிரிக்க மண்ணில் ஒரு இன்னிங்ஸில் அதி கூடிய ஓட்டம் பெற்ற இலங்கையர் என்ற சாதனையை சங்ககார படைத்தார்.

இலங்கை அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் டேர்பனில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது. முதலாவது டெஸ்ட் ஆட்டத்தை தென்னாபிரிக்க அணி கைப்பற்றிய நிலையில் இரண்டாவது ஆட்டம் தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணியின் தலைவர் ரி.எம்.டில்ஷான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சகல இலக்குகளையும் இழந்து 338 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பில் சமரவீர 102, அறிமுக வீரர் சந்திமால் 58, டில்ஷான் 47 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் ஆபிரிக்கா சார்பில் அறிமுக ஆட்டத்தில் விளையாடும் டீ லாங்கே 7 இலக்குகளை சரித்தார்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸைத் தொடங்கிய தென்னாபிரிக்க அணி இலங்கை அணியின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் 168 ஓட்டங்களுக்குள் சுருண்டது. துடுப்பாட்டத்தில் அம்லா 54, ஸ்ரெயின் ஆட்டமிழக்காமல் 29, டீ வில்லியர்ஸ் 25 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் வெலகெதர 52 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளையும், ஹேரத் 49 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும் வீழத்தினர்.

170 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி நேற்று முன்தினம் ஆட்டநேர நிறைவில் ஒரு இலக்கு நஷ்டத்துக்கு 7 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சங்ககார 3, பரணவிதாரன ஓட்டமெதனையும் பெறாதநிலையில் களத்தில் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்றைய ஆட்டத்தின் முதலாவது பந்து பரிமாற்றத்திலேயே சங்கக்கார கொடுத்த பிடியை ஸ்மித் தவற விட்டார். வாய்ப்பை பயன்படுத்திய சங்கா சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார். இருப்பினும் பரணவிதாரன 9, ஜெயவர்தன 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 44 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்து தடுமாறத் தொடங்கியது இலங்கை.

அதன் பின்னர் இணைந்த சங்கா, சமரவீர இலங்கை அணியைப் போராடி மீட்டனர். தொடர்ச்சியாக துடுப்பாட்டத்தில் சொதப்பிய சங்கா நேற்று சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார். முதலாவது இன்னிங்ஸில் சதமடித்த சமரவீரவும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாட இலங்கை அணி 100 ஓட்டங்களைத் தாண்டியது. 94 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்ட நிலையில் சமரவீர 43 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த மத்தியூஸ் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் மீண்டும் ஐந்தாவது இலக்குக்காக சங்காவுடன், அறிமுக வீரர் சந்திமால் இணைந்து துடுப்பெடுத்தாடினார். இவர்களது இணைப்பில் அணி இருநூறு ஓட்டங்களைத் தாண்டியது. அசத்தலாக துடுப்பெடுத்தாடிய சங்கா டெஸ்ட் அரங்கில் 28 ஆவது சதத்தை பூர்த்தி செய்தார். சங்கா 105 ஓட்டங்களைப் பெற்ற போது தென்னாபிரிக்காவில் அதி கூடிய ஓட்டங்களைப் பெற்ற இலங்கை வீரர் என்ற பெருமையை தனதாக்கினார்.

மறுமுனையில் அசத்திய சந்திமால் முதலாவது டெஸ்டின் இரண்டாவது இன்னிங்ஸிலும் அரைச்சதம் அடித்து கலக்கினார். ஐந்தாவது இலக்குக்காக 104 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் சந்திமால் 54 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்த பந்து பரிமாற்றத்திலேயே சங்ககார 108 ஓட்டங்களுடன் தகீரின் சுழலில் சிக்கி 'மிட் ஒன்' திசையில் ஸ்மித்திடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

நேற்றைய ஆட்ட நேர நிறைவில் இலங்கை அணி 7 இலக்குகளை இழந்து 256 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் பெரேரா 6, ஹேரத் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர். பந்து வீச்சில் ஸ்ரெயின் 3, தகீர் 2 இலக்குகளை கைப்பற்றினர். போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் முன்னதாகவே நிறுத்தப்பட்டது.

ஆட்டத்தின்போது 65 ஆவது பந்து பரிமாற்றத்தை ஸ்ரெயின் வீசினார். சந்திமால் தடுத்து ஆடிய போதும், ஒவ்வொரு பந்தையும் வீசிய பின்னர் சந்திமாலை கடுமையாகத் திட்டினார். இருப்பினும் பதிலுக்கு சந்திமால் அமைதியாகவே இருந்தார். இதனை வர்ணனை செய்த ரஷல் ஆர்னல்ட், சந்திமாலுக்கு ஆங்கிலம் விளங்காததாலேயே அமைதியாக இருப்பதாக குறிப்பிட்டார். (ங-15)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2011 ம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சையில் கணிதப்பிரிவில் 3A பெறுபேற்றைப் பெற்று யாழ். மாவட்டத்திலும் தேசிய ரீதியிலும் முதலாம் இடத்தைப் பெற்ற எமது பாடசாலையின் பழைய மாணவனும் யா/ உடுப்பிட்டி அ.மி.கல்லூரியின் மாணவனுமாகிய


**கமலக்கண்ணன் கமலவாசன்**

அவர்களை வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/கம்பர்மலை வித்தியாலயம், கொம்மந்தறை.

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 1955 ★ 01 ★ 10



மறைவு 2006 ★ 12 ★ 25

### முத்து அப்புக்குட்டி துரைச்சாமி

(பாதுகாப்பு உத்தியோகத்தர், இலங்கை வங்கி)
திதி: பஞ்சமி

ஐந்தாண்டு ஆனபோதும்
ஒவ்வொரு நிமிடமும் உங்கள்
நினைவுகள் தான் - அப்பா!
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அப்பா என அழைப்பதற்கு
நீங்கள் இல்லையே - அப்பா!
எத்தனை ஆண்டுகள் சென்றிடினும்
எமக்கு நீங்கள் அனையாத தீபம் தான் - அப்பா!

அம்பாள் வீதி,
கொக்குவில் மேற்கு.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை சிவபாதம் (கோகிலன் - கனடா)



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் கட்டுவன் தெற்கை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சிவபாதம் அவர்கள் 27.12.2011 செவ்வாய்க்கிழமை கனடாவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- சீதேவன் தம்பதியரின் அன்பு மகனும் ஏழாலை வடக்கு நடராஜா - தங்கரத்தினம் தம்பதியரின் மருமகனும் சிவரூபியின் அன்புக் கணவரும்,ராகேஷ், சபிற்றா, நிரோஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகாதேவன்,அற்புததேவி,ஞானதேவி, சிவபெருமான்(சின்னத்தம்பி - பிரான்ஸ்), கந்தசாமி (ரஞ்சன் - கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், வசந்த ரத்தினம், சபாரத்தினம், ஸ்ரீகந்தராஜா, விமலரூபி, சியாமளா, ரவிசங்கர்(ஜேர்மனி), சிவகலா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் 31.12.2011 சனிக்கிழமை நடைபெறும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ச.நடராஜா (ஏழாலை வடக்கு).
ஆ.சத்தியமூர்த்தி - கலா
விதானைலேன், கொக்குவில் கிழக்கு.

சிவரூபி(கனடா)
T.P.No:0014167620156

## மரண அறிவித்தல்

### யோசேப் அம்புறோஸ்



வெற்றிலைக்கேணி, முள்ளியானைப் பிறப்பிடமாகக் கொண்ட யோசேப் அம்புறோஸ் நேற்றுமுன்தினம் (27.12.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோசேப் - அக்கினேஸ் தம்பதியரின் அன்பு புதல்வனும் செபமாலை அம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ஜெனி, ஜெனிற்றா மற்றும் ஜெனோ, ஜேறாட், ஜெகன், ஜெலோரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயந்தி, யோகன், விஜயகுமார், டெய்சி, சர்மிலா ஆகியோரின் அன்பு மாமனும் மேவின், செரஞ்சி, சாரு, விதுஷா, நிரோயன், யூட்சிகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.12.2011) வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு வெற்றிலைக்கேணி புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வெற்றிலைக்கேணி,*
*முள்ளியான்.*

தகவல்:
குடும்பத்தினர்.

## சடலத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளும் செய்யப்பட்டிருந்தன.

இந்த நிலையில் 20 ஆம் திகதி அதிகாலை ஒரு மணியளவில் தாம் பிரேதத்துடன் ஓமந்தைக்கு வந்துவிட்டோம் என்று இறந்தவரின் சகோதரியான கொழும்பு ஜெயவர்த்தனா வைத்தியசாலையில் வைத்தியராகக் கடமையாற்றும் திருமதி விமலச்சந்திரா குமுதா ஏழாலையில் உள்ள உறவினர்களுக்கு கையடக்கத் தொலைபேசி மூலம் அறிவித்துள்ளார்.

பின்னர் முற்பகல் 11 மணியளவில் பனிக்கம் குளத்தில் சடலம் கொண்டுவந்த வாகனத்தின் நான்கு சில்லுகளின் காற்றும் போய்விட்டதால் அவற்றை சரி செய்த பின்னர் புறப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மீண்டும் பிற்பகல் 5 மணியளவில் குறித்த சகோதரி வாகனம் ஸ்ராட் ஆகவில்லை, அதனைத் திருத்திய பின்னே வருவோம்'' எனத் தெரிவித்துள்ளார். எனினும் இரவு வரை அவர்களும் சடலமும் வந்து சேரவில்லை. தொலைபேசித் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் கடந்த 21 ஆம் திகதி காலையில் தம்மை யாரோ சடலத்துடன் கடத்திச் சென்று காட்டில் வைத்திருப்பதாக உறவினர்களில் ஒருவர் தெரிவித்ததுடன் கையடக்கத் தொலைபேசியின் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து உறவினர்கள் சுன்னாகம் பொலிஸ் நிலையம் சென்று தமது முறைப்பாட்டைத் தெரிவிக்க முயன்ற போதும், அங்கு குறித்த முறைப்பாடு ஏற்றுக்கொள்ளப்படவில்லை.இந்த நிலையில் யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திலும் , புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.இதன் பின்னர் உடனடியாக சுன்னாகம் பொலிஸாருக்கு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விடுத்த பணிப்புரையைத் தொடர்ந்து, குறிப்பிட்ட விடயம் சம்பந்தமாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட வாகனத்தில் இறந்தவரின் மனைவியும் மூன்று பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் 7 பேருமே காணாமல் போனவர்களாவர். சுமார் பத்து நாள்கள் கடந்த நிலையிலும் கூட குறிப்பிட்ட நபர்களுக்கோ அன்றி கொண்டுவரப்பட்ட சடலத்திற்கோ, வாகனத்திற்கோ, சாரதிக்கோ என்ன நடந்தது என்று தெரியாத நிலையில் உறவினர்கள் பெரும் அதிர்ச்சியடைந்துள்ளனர். (ங-14-68)

## எங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்கள உதவிப் பணிப்பாளரைச் சந்தித்தே இவ்வாறு கேள்வி எழுப்பினார்கள். அந்த மீனவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடல் வளத்தை அழிக்கும் எனக் கருதி தடை செய்யப்பட்ட இழுவைமடியைப் பயன்படுத்திக் கடற்தொழில் செய்யும் உள்ளூர் மீனவர்களை மடக்கிப் பிடிப்பதில் திணைக்கள அதிகாரிகள் அக்கறை காட்டுகின்றனர். ஆனால் இந்தியா மற்றும் தென்னிலங்கை மீனவர்கள்ஆயிரக்கணக்கில் வந்து, தடை செய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி அத்துமீறி கடற்தொழில் செய்கின்றனர். இவர்களைத் திணைக்கள அதிகாரிகள் மடக்கிப் பிடிக்க நினைப் பதில்லை.

எமக்கு தடை செய்யப்பட்ட உபகரணங்கள் எவை என அறியத் தரவில்லை.இந்த நிலையில் திடீர் சோதனை செய்து எமது கடற்தொழில் உபகரணங்களை அள்ளிச் சென்றுள்ளமை எமது வாழ்வாதாரத்தை அழிக்கும் செயலாகும் என்று கூறினர்.

இதற்குப் பதிலளித்த உதவிப் பணிப்பாளர் அமைச்சின் சுற்று நிருபத்துக்கு அமைவாகத் தடை செய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்துவோரைக் கைது செய்கிறோம்.

இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டோம். இதற்கு மேல் அது எமக்கு அப்பாற்பட்ட விடயமாகவே உள்ளது. தென்னிலங்கை மீனவர்கள் அனுமதியின்றிஎமது திணைக்களத்துக்கு உட்பட்டகடற்பகுதிக்கு வருவதில்லை - என்றார்.

(த-14-311)

## பத்தாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 23 . 02 . 1924



மறைவு 19 . 12 . 2001

### அமரர் சுவாமிநாதர் பாலசிங்கம்

(சுவாமியார் வீதி, கொழும்புத்துறை மேற்கு)
திதி: பஞ்சமி

எங்கள் அன்புத் தெய்வமே
ஆண்டுகள் பத்து சென்றாலும் ஆறாது
உங்கள் நினைவுகளுடன் உங்கள் ஆத்மா சாந்தி பெற
வதிரி பீட விநாயகனை வணங்குகின்றோம்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

குடும்பத்தினர்.

ஏ/7263)(6-25-8)

## மரண அறிவித்தல்

### மரியாம்பிள்ளை மரியநாயகம்



சில்லாலையைப் பிறப்பிடமாக வும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை மரியநாயகம் 24.12.2011 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற எலிச பெத் மரியநாயகத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியை - கோண்டாவில் இராம கிருஷ்ண மகாவித்தியாலயம்) அன்புக் கணவரும், காலஞ்சென்ற திரு. திருமதி மரியாம்பிள்ளையின் அன்பு மகனும், வதனி (கொழும்பு), குமார்( கனடா), சுரேஷ் ( லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற றெஜி (Ceylon Tobacco Company), சுரேஷினி(கனடா), துஷி(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் மணி, அருள், ஜூலியஸ், விற்ருவார் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற மேரி ஜோசவ், காலஞ்சென்ற அன்ரன் றொசாயரோ, அமுதா, வில்லியம் ஆகியோரின் மைத்துனரும், அனுஷா, அலெக்ஷா, அருணன், அஜந்தன், தனுஜா, ஜனுஷாந்த், ஐரின், ஏரன், ஜொய்லின் ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர் சாலையில் 31.12.2011 சனிக்கிழமை காலை 8 மணி முதல் 10 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு கல்கிசை சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

*183,3/3, இராஜகுரு,*
*ஸ்ரீ சுபுதி வீதி,*
*வெள்ளவத்தை.*

தகவல்:
குடும்பத்தினர்.

(12182)(6/25/8)

### கந்தர் சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற பிரதம கணக்காளர்)

இணுவிலைப் பிறப்பிடமாகவும் கொள்ளுப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட V.K.சுப்பிரமணியம் நேற்று (28.12.2011) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் கமலாதேவியின் அன்புக் கணவரும் இணுவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தர் - மாணிக்கம் தம்பதியரின் இளைய மகனும் கொக்குவிலைச் சேர்ந்த நடராஜா (காட்டர்) - தங்கச்சியம்மா தம்பதியரின் மூத்த மருமகனும் அழகேசன் (கனடா), ஆதித்தன் (Computer System L.T.D. Colombo), முகுந்தன் (பெற்றோலியக் கூட்டுத்தாபனம், நுகேகொடை இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் Dr.கயல்விழி (கனடா), Dr.தமிழ்ச்செல்வி (தேசிய வைத்திய சாலை, கொழும்பு), பவானி (இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு) ஆகியோரின் அருமை மாமனும் கவின்கோ, சிற்றன்யா, சாயலன் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2011) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று மதியம் ஒரு மணிக்கு தகனக் கிரியைக்காக பூதவுடல் பொரளை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*16, ஸ்கொபீல்ட் பிளேஸ்,*
*கொழும்பு - 03.*

தகவல்: மனைவி,
பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## அப்பாப்பிள்ளை வேலுப்பிள்ளை

யாழ். வாதரவத்தையைப் பிறப்பிடமாகவும் இல.505, 7 ஆம் யூனிற் இராமநாதபுரம், கிளிநொச்சியை நிரந்தர வதிவிடமாகவும் இல.43, 3 ஆம் ஒழுங்கை, மகாறம்பைக்குளம் வவுனியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட அப்பாப்பிள்ளை வேலுப்பிள்ளை அவர்கள் நேற்றுமுன்தினம் (27.12.2011) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியவதியின் அன்புக் கணவரும் பூலோகவதி, லீலாவதி, இந்திராவதி (பிரதி அதிபர் கிளி இராம நாதபுரம் ம.வி), யோகவதி (கொலண்ட்), ஸ்ரீ றஞ்சன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற துரைசிங்கம், தியாராசா, காலஞ்சென்ற திருநாவுக்கரசு, மகேந்திரராஜா (கொலண்ட்), எவறெஸ்ட்ரா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஜெயந்தி (ஆசிரியர், ஸ்ரீ இராமபுரம் திருஞானசம்பந்த வித்தியாலயம்), கம்சா, கவீனா, சந்திரபோஸ் (ஜேர்மனி), சந்திர சோபா(ஜேர்மனி), காலஞ்சென்ற சந்திரவர்மன், நிருத்தன் (மருத் துவர், றாகம வைத்தியசாலை), சோபிதன், யாணுகா (லண்டன்), யசோபன், மிதுனன், சுபாஷ்ரிகா (யாழ். பல்கலை, கலைப்பீடம்), மாதுமை (கொலண்ட்), திருவரங்கன் மற்றும் லண்டனைச் சேர்ந்த சஞ்சுதன், கீதன்சன், சன்சிகா ஆகியோரின் பேரனும் நிவேதிகா, நிவேதா, பிரதாயினி, பிரணவன்,வாணுசோபன், றாகவி, கஷ்மிதா, கபிநயன், டினோசன், றுக்சன், அருத்ரா, நிதனா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (29.12.2011) வியாழக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது தற்காலிக இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகப் பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.43, 3 ஆம் ஒழுங்கை,
மகாறம்பைக்குளம், வவுனியா. (12243)

தகவல்:
குடும்பத்தினர்.

## இராஜரட்ணம் கதிர்காமநாதன்

(களஞ்சியப் பொறுப்பாளர் S.K)



கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் கந்த ரோடை, தட்டாதெருவை வதிவிடமாக வும் தற்போது கனடாவில் வசித்தவருமா கிய இராஜரட்ணம் கதிர்காமநாதன் நேற்றுமுன்தினம் (27.12.2011) செவ் வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரா ஜரட்ணம் - சரஸ்வதி தம்பதியரின் அருமை மகனும் காலஞ்சென்ற தம்பிராஜா-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் சரோஜினி தேவியின் அன்புக் கண வரும், பாலேந்திரன் (லண்டன்), இராஜேந்திரன் (கனடா), காலஞ்சென்ற குலேந்திரன் மற்றும் கோகேந்திரன் (லண் டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நவரட்ணம் (பபி - இந்தியா), சத்தியலட்சுமி (பாப்பா, கல்விப் பணிப்பாளர்) ஆகி யோரின் அன்புச் சகோதரரும் ஜெயதேவி, காங்கேயன், Dr. பாலசிங்கம் (சந்திரன்), சுதந்திரமங்கையர்க்கரசி ஆகியோ ரின் அன்பு மைத்துனரும் அஜந்தா (லண்டன்), ஜெயதீபா (கனடா), Dr. சுதந்திரமதன், பாலமுரளி, Dr.பிரசாந்தி, ஆத வன் ஆகியோரின் அன்பு மாமனும் வனிதா, செந்தில் ஆகி யோரின் பெரிய தந்தையும் திவ்யா, வித்தியா, ப்ரீத்தி, குலேன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் Chapel Ridge Funeral Home இல் இன்று (29.12.2011) வியாழக்கிழமை கனடா நேரப்படி முற்பகல் 11 மணி முதல் ஒரு மணி வரை அஞ்ச லிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் ஒரு மணி முதல் 3 மணி வரை ஈமைக்கிரியை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Chapel Ridge Funeral Home
8911 Woodbine Rd.
L3R SJ/
905 305 8508 (12241)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி இராசரத்தினம் சின்னம்மா

கைதடியைப் பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசரத்தினம் சின்னம்மா நேற்று (28.12.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் தேவமனோகரி, ஜெகதீஸ்வரி, நவரத்தின ராசா, குணரத்தினராசா, யோகரத்தினராசா, புஸ்பமலர் ஆகியோரின் பாசமிகு தாயும் இராஜசேகரம், பர மேஸ்வரன், மல்லிகாதேவி, வனஜநாயகி, விஜயலட்சுமி, உமைபாகன் ஆகியோரின் அன்பு மாமியும் சுஜீவா, றஜீவன், பவதாரணி, துளசிமாறன், நமஜா, கஜன், கஜித், பிறையன், அஜித்தன், அபிலாசன், மதுஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (29.12.2011) வியாழக்கிழமை பி.ப. 12.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழைய வீதி,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

தகவல்:
குடும்பத்தினர்.

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வில் காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது என அரசு பகிரங்கமாகவே தெரிவித்து வருகிறது. அப்படியான ஒரு தீர்வை ஏற்கவே மாட்டோம் என பதிலுக்கு கூட்டமைப் பும் தெரிவித்து விட்டது. இதனால் அரசு - கூட்டமைப்பு இடையேயான பேச்சுக்கள் முறிவடையக்கூடிய நிலையை எட்டி யுள்ள வேளையில், இந்திய வெளியுறவுத் துறை அமைச்சரின் இந்த விஜயம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்குமெனத் தெரிவிக்கப்படுகின்றது. அதிகாரப் பகிர்வு குறித்துக் கிருஷ்ணா இருதரப்புகளுடனும் பேச்சு நடத்துவார் எனவும் கொழும்பிலுள்ள உயர்மட்ட இராஜதந்திர வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இரண்டு தினங்கள் கொழும்பில் தங்கி யிருக்கும் இந்திய வெளியுறவுத்துறைச் செய லர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்தவுள்ளார். அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் உட்பட்ட தமிழ்க் கட்சிகளின் முக்கியஸ்தர்களுடனும் கிருஷ்ணா நேரடிப் பேச்சுகளை நடத்தவுள்ளார்.

இந்தியாவின் உதவியுடன் நிர்மாணிக் கப்பட்டுவரும் வடக்கு வீடமைப்புத் திட் டத்தையும் இந்திய வெளியுறவுத்துறைச் செயலர் பார்வையிடவுள்ளாரெனத் தெரி விக்கப்படுகிறது. (த-சி)

## ஆணைக்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யும், அமைச்சர் சம்பிக்க ரணவக்க இன்னொரு கருத்தையும் தெரிவிக்கின் றனர். இது குழப்பமாகவுள்ளது.

இந்த அறிக்கை தொடர்பில் அரசு அமைச்சர்களைக்கொண்டு குழப்பத்தை ஏற்படுத்தப்போகிறதா? என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

அறிக்கையின் அடிப்படையில் நடவ டிக்கை எடுக்கவேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு. இந்த அறிக்கை தொடர்பான தனது நிலைப்பாடு என்னவென்று அரசு கூறவேண்டும்.

இந்தியாவினுடைய அல்லது ஜப்பானி னுடைய சதி என்றா அரசு இந்த அறிக்கை யைக் கூறப்போகின்றது? இந்த அறிக்கை தொடர்பில் சர்வதேசத்துக்கு விளக்கமளிக் கவேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு.

நாட்டில் ஒரு பிரச்சினை ஏற்படுகின்ற போது விசாரணை நடத்துவதும் வேறு வழியில் இந்த விசாரணையை இல்லாமல் செய்வதும் அரசின் செயற்பாடாகவுள்ளது. அவ் வாறான ஒன்றாக இந்த அமைச்சர்களின் செயற்பாடுகள் அமைந்துள்ளனவோ என்ற சந் தேகம் ஏற்பட்டுள்ளது - என்றார். (த-சி)

## மார்ச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்வதற்கு ஜனவரி மாதம் 6ஆம் திகதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இருப்பினும் இந்தப் பிரதேசங்களில் கண் ணிவெடிகள் அகற்றும் நடவடிக்கை முடிவ டையாமையை காரணம் காட்டி டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு தேர்தல்கள் ஒத்திவைக் கப்பட்டன. நலன்புரி நிலையங்களில் பெரும் எண்ணிக்கையான வாக்காளர்கள் தங்கி யுள்ளமை, பருவமழை என்பன தேர்தல் வேலைகளுக்கு இடையூறு ஏற்படுத்து வதால் இரு பிரதேச சபைகளுக்கான தேர் தல்களை ஒத்திவைப்பதைத் தவிர வேறு வழியில்லையெனவும் தேர்தல் ஆணை யாளர் கூறினார்.

வாக்காளர்கள் இடாப்புக்களில் தங்க ளது பெயர்களை பதிவு செய்யாதவர்கள் வாக்காளர்களாக பதிவுகளை மேற்கொள் வதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப் படும் என்றும் அவர் தெரிவித்தார். (த-சி)

## பொன்சேகாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் குற்றம் செய்யவில்லை.

புலிகள் அமைப்பில் இருந்து கொண்டு மக்களைக் கொன்றுகுவித்த கருணா, பிள்ளையான், கே.பி., தயா மாஸ்டர் மற்றும் ஜோர்ஜ் மாஸ்டர் ஆகியோர் மன்னிப்புக் கேட்டுக் கொண்டே சொகுசாக வாழ்கிறார்கள்?

நாட்டை அழித்த அவர்களுக்கு சொகுசு வாழ்க்கை; நாட்டைக்காத்த பொன்சேகாவுக்கு சிறைவாழ்க்கை. பொன் சேகாவை எதுவித நிபந்தனைகளு மின்றி அரசு உடன் விடுதலை செய்ய வேண்டும்.

நாட்டு மக்கள் தொடர்ச்சியாக அவ ரின் விடுதலையை வலியுறுத்தி வரு கின்றனர். அந்த வலியுறுத்தல் அரசால் புறக்கணிக்கப்பட்ட வண்ணமே உள் ளது - என்றார். (த-சி)

# மரண அறிவித்தல்கள்

## லூக்காஸ்பிள்ளை திருச்செல்வம்

யாழ். அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், இல-493/6, இராமநா தபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட லூக்காஸ்பிள்ளை திருச்செல்வம் (26.12.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற லூக்காஸ்பிள்ளை- பிரகாசியம்மா தம்பதியரின் அன்பு மகனும், கரம்பனைச் சேர்ந்த சந்தியாப்பிள்ளை- நேசமுத்து தம்பதியரின் மருமகனும், சிற்றம்மாவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, ஞானப்பிரகாசம் மற்றும் மரிசலின், ஞானரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அன்பன், நிர்மலன், பாலன், தேவறஞ்சிதமலர், ஜசிந்தா, தயாளன், செனிக்கா, டயான்,சீலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், லொறின், யோகம், மாலா, யோகராசா, தேவராசா, தயா, சிறிறஞ்சன், பாலினி, அமுதினி ஆகியோரின் அன்பு மாமனும், சேவியர், காலஞ்சென்ற சூசைப்பிள்ளை மற்றும் மெற்றலின், தம்பித்துரை, சிசிலியா ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிருஜா, அனோஜா, கீர்த்தா, நிருசா, கிசானா, எவானா, எவான்சி, கிறோன், மேரிகா, கீதன், சண்சிகா, ஓவியா, கவிச்செல்வன், காவியன், சாதசஞ்சுனா ஆகியோரின் பாசமிகு பேரனும், சோபியா, நிதனா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (29.12.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித ஆரோக்கியநாதர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் இராமநாதபுரம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல-606/6, இராமநாதபுரம்,
கிளிநொச்சி.

தகவல்: தேவராஜா,
(மருகமன்).

## நடராசா பவாநாதன்



பாலாவோடை, உடுவில் தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த நடராசா பவாநாதன் கடந்த 27.12.2011 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா -இராசமணி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற வர்களான சின்னத்தம்பி- தங்கச்சியம்மா தம்ப தியரின் மருமகனும், இராசசௌந்தரியின் (குஞ்சு) அன்புக் கணவரும், மதுஷா, ஸ்ரீராஷ்பவன், ஸ்ரீரகுபவன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பத்மாவதி மற்றும் பரமேஸ்வரன், நகுலேஸ்வரி, சண்முகரத்தினம் ஆகியோரின் சகோதரனும், இராசநாயகி, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும், ஜெயராஜசிங்கம், கிரிஷாணந்தன், திஸ்ஷாணந்தன், பாதுஷா, தேவராஜ், அபிராமி, மயூரணி, சாகிர்த்தியன், சாகிர்த்தியா, நிகேதன் ஆகியோரின் சித்தப்பாவும், தர்ஜினி, சாரங்கி, சிந்துஜா, திவ்வியன், தயாளினி, ராஜன், நீதன் ஆகியோரின் அன்பு மாமனும், ஹரிகேசன், ஷர்ஷாலினி, சந்செய், ஷாலினா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

பாலாவோடை, உடுவில் தெற்கு, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

## செல்லம்மா செல்லத்துரை



கைதடி வடக்கு, கைதடியைப் பிறப்பிட மாகவும் 77, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பா ணத்தை வதிவிடமாகவும் கொண்ட செல்லம்மா செல்லத்துரை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் செல்லத்துரையின் (இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்) மனைவியும் காலஞ்சென்றவர்க ளான சுப்பிரமணியம் - சின்னம்மா தம்பதியரின் மகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*77, கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்: செல்வமனோகரி
*(மகள்).*

## திருமதி அருள்விழி மனோரஞ்சன்

(மண்டைதீவு- அருள்)

மண்டைதீவு, 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் சங்குவேலியை வாழ்விடமாகவும் தற்போது பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட அருள்விழி மனோரஞ்சன் நேற்று (28.12.2011) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரெத்தினம்- நேசமணி தம்பதியரின் பாசமிகு மகளும், செல்வரத்தினம்- தனலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், மனோரஞ்சனின் பாசமிகு மனைவியும், லாவண்யா, அட்ஷயா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

வராகி அம்மன் கோயில் வீதி, கொக்குவில் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி
## சிதம்பரநாதன் நிர்மலாதேவி



வடமராட்சி கிழக்கு மருதங்கேணியைப் பிறப் பிடமாகவும் சுவிஸ் Luzern ஐவதிவிடமாகவும் கொண்ட சிதம்பரநாதன்- நிர்மலாதேவி நேற்று முன்தினம் (27-12-2011) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட் டார்.

அன்னார் காலஞ்சென்ற மதியாபரணம், பரிபூர ணம், தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற நடராசா, சிவபாக்கியம் தம்பதியரின் மருமகளும், சிதம்பரநாதனின்(சுவிஸ்) அன்பு மனைவியும் மதிவதனி(சுவிஸ்), சியாமளா(நோர்வே) ஆகியோரின் பாசமிகுதாயும் சகுந்தலாதேவி(நோர்வே),சிவகுமார்,கிட்டினகுமார் (நோர்வே),விசயகுமார்(டென்மார்க்),ராசகுமார்(சுவிஸ்), காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் சித்திரா(லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் சிவா(சுவிஸ்), மனோ(நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியும், ஆருசன், ஆருதி,தூயவன், ஓவியன் அகியோரின் ஆருயிர்ப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 28.12.2011 புதன்கிழமை அன்று முற்பகல் 10.00 மணிமுதல் பிற்பகல் 8.00 மணிவரையும், 29.12.2011 வியாழக்கிழமை அன்று முற்பகல் 8.00 மணி முதல் நண்பகல் 12.00மணிவரையும் பார்வைக்கு வைக்கப்பட்டு நண்பகல் 12.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை இறுதிக்கிரியை நடைபெற்று Friendof Friedefal Friedental Str 60, 6004 Luzerna இல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வத்திராயன் தெற்கு, தாளையடி.

தகவல்:
ம.சிவகுமார்(சகோதரன்)

## பௌதிகவியல் 2014 A/L

ஆரம்பம்: வியாழன் 29.12.2011 5.00 p.m.
புதன் 04.01.2012 9.30 a.m.

**Day Classes**

| Batch I | Batch II |
|---|---|
| Monday → Friday 9.30 a.m. | Wednesday & Friday 5.30 p.m. |

இலத்திரனியல் — திங்கள், வெள்ளி 3.00 p.m.
அலைகளும் அதிர்வுகளும் — சனி, ஞாயிறு 5.00 p.m.

**By: Kajan**

முத்தட்டு மட லேன், கோண்டாவில் மேற்கு.
28, குமாரசாமி வீதி, கந்தர்மடம்.
T.P.: 0213734114 (பல்கலைக்கழகம் முன்பாக)
(12209)(5)

வன்னிப் பகுதியில் 'உதயன்' வாசகர்களுக்காகச் சேவையாற்றி வருகிறது வன்னிப்பணிமனை. உங்கள் விளம்பரங்கள், செய்திகள் என்பவற்றைப் பிரசுரிக்க இன்றே நாடுங்கள்...

**'உதயன்'** வன்னிப் பணிமனை
(புதிய தெரோ பாடசாலை முன்பாக)
கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி.

## COLLEGE OF CHEMISTRY
Palam Road Kantharmadam

**PHYSICS**
**N.KAPILAN B.Sc.**
ஆரம்பம் 29.12.2011
Thursday 4.00 p.m.
அனுமதிக்கு பெற்றோரின் வருகை அவசியம்.
(12184)(5.6)

## BEACON
கலை, வர்த்தகப்பிரிவு

| கலைப்பிரிவு | வர்த்தகப்பிரிவு |
|---|---|
| தமிழ் நாகதமிழ்ந்திரன் | பொருளியல் அருணன் |
| இந்துநாகரிகம் ரமணன் | கணக்கீடு சுகிர்தன் |

ஆரம்பம்: **02.01.2012**
திங்கட்கிழமை காலை 8.00 மணி.
(12185)(5.6)

## A/L 2014 NEC
கணித, உயிரியல் பிரிவுகள்

CHEMISTRY S.வாசு | PHYSICS N.எடிசன் | C.MATHS S.சயந்தன்
BIOLOGY V.A.ஞானேந்திரன் S.சுதா

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
ஆரம்பம் : 30.12.2011 வெள்ளி மாலை 3.00

## நேற்று இன்று அல்ல என்றென்றும்
வலி. மேற்கில் தனக்கென்று தனித்துவமான கல்வி நிறுவனம்

**2014 A/L** **SUBRA 14**

சித்தன்கேணி வட்டுக்கோட்டை
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பம்
*05.01.2012*
வியாழன் மாலை 4 மணி (சுப வேளையில்)
தரமானதும் தகுதியானதுமான ஆசிரியரின் வழிகாட்டலில்
A/L Day Class 02.01.2012 இல் ஆரம்பம்
(C7191)(5.6)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு
இறைச்சிக்கோழி, கல்பேட்ஸ் மற்றும் வான் கோழி, கினிக்கோழி, கோழிமுட்டை மொத்த மாகவும், சில்லறையாகவும் விற்கப்படும்.
விவரங்களுக்கு: *கிருஷ்ண பாம்,*
மானிப்பாய், விதானைவளவு, மானிப்பாய்.
(11994)(5) தொ.பே.: 0772338084

## A/L ICT - 2014 Batch
புதிய பிரிவு ஆரம்பமாகின்றது
G.C.E. A/L இல் பிரதான பாடம்
100 % Pass rate in first batch
02/01/2012 Monday at 3.00 pm
Call Us: 0776577359
அனுமதிக்கு முந்துங்கள்
10 years of experience in IT
By Mr R.Kumaran-B.Sc. (Computing & IS)
**MIS** Open Source College
74, சபாபதி வீதி, யாழ்ப்பாணம்-இராமநாதன் வீதியிலிருந்து 150 m

## Upto 90% Scholorship + Free5
Ms Office, DTP, Hardware & Networking
Accounting, Web Design, English, Internet



6 கற்கைநெறிகளில் ஏதாவது ஒரு கற்கைநெறியை தேர்வு செய்து ஏனைய 5 கற்கைநெறிகளையும் கற்கைநெறிக்கட்டணமின்றி பயிலும் வாய்ப்பு
இன்றே உங்கள் <Name><Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலநேரத்தை தனித்துக்கொள்ளுங்கள்

**MCS** தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.
Supported By UNDP/JRRP
324,Palaly Road,Parameswara Junction
facebook - mcsitcampus www.mcsitcampus.org

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
2011 December G.C.E O/L பரீசைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு விசேட கட்டணக்கழிவு வழங்கப்படும்

### Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Month)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

### BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
Duration : 2 Months

### Diploma In English (2 Month)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

### IELTS (International English Language Testing System)
(Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது) 2 1/2 Months
*We guarantee minimum band 5.0 upwards*

### A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- 2012 April இல் எதிர்பார்க்கப்படும் புதிய நடைமுறையின் கீழ் ஆங்கிலத்தின் தராதரத்தை B1 நிலைக்கு உயர்த்த முடிவு செய்திருப்பதால் அதற்கு முன் உங்களை பதிவு செய்யுங்கள்.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

அனைத்துப்பிரிவுகளும் ஆரம்பமாகின்றன

| | | |
|---|---|---|
| Batch I | 04.01.2012 | 9.00 a.m |
| Batch II | 04.01.2012 | 11.00 a.m |
| Batch III | 07.01.2012 | 3.00 p.m. |
| Batch IV | 07.01.2012 | 4.00 p.m. |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vaiavarpulliam Kulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074


## மரண அறிவித்தல்



### தம்பிஜயா சிவராஜா
(இளைப்பாறிய அதிபர், யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம், திருநெல்வேலி)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கோயில் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா சிவராஜா 25.12.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஜயா-செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சாரதாதேவியின் (ஆசிரியை, யா/வேம்படி மகளிர் கல்லூரி) பாசமிகு கணவரும் நிருஜா, ஹம்சாயி, உமாராஜி ஆகியோரின் பாசமிகு தந்தையும் மயூரனின் (கனடா) அன்பு மாமனும் காலஞ்சென்ற தங்கவேலுவின் சகோதரனும் தேவகி, மகேந்திரன் (கனடா), சகுந்தலாதேவி (கனடா), மனோகரன் (கனடா), சக்திதேவி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.9 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*225, கோயில் வீதி, நல்லூர்.* தகவல்: குடும்பத்தினர்.


## CHEMISTRY CENTRE
33, அரசலி வீதி ஓட்டுமடம் சந்தியிலிருந்து 20 m
30.12 வெள்ளி ஆரம்பமாகும் அனேக அலகுகள்
INORGANIC Mon, Tue, Fri 6-7 p.m
ORGANIC Mon, Tue, Fri 7-8 p.m.
BASIC Tue 5-6p.m, Fri 3-4p.m.
GENERAL Fri 4-6 p.m.
CHEMISTRY CENTRE BRANCH இல் (300, பலாலி வீதி, கந்தர்மடம்)
A/L 2014
ஆரம்பம் தமிழ் மொழிமூலம் 31.12 சனி 4.30
ஆங்கில மொழிமூலம் 31.12 சனி 5.30
By: அன்பு
தொடர்பு: 0779037351


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு 24 * 08 * 1928



இறப்பு 28 * 11 * 2011

### திருமதி சிசிலியா மெற்றலின் கிறிஸ்தோப்பர் (மாமி)

என்றும் எங்கள் நினைவில் வாழுகின்ற எங்கள் அன்பு அம்மா, இறைவனின் பிரசன்னத்தில் வீற்றிருந்து எங்களுக்காக மன்றாடுங்கள்.

''என் ஆன்மா ஆண்டவரை ஏற்றிப் போற்றுகின்றது'' கடந்த பல வருடங்களாக சிகிச்சையளித்த வைத்திய கலாநிதி டாக்டர் S.கேதீஸ்வரன், திருச்சிலுவை வைத்தியசாலை அருட் சகோதரிகள், தாதிமார்கள், பணியாளர்கள், ஆன்மீக குருவானவர், அருட்திரு M.றெக்ஸ் சவுந்தரா மற்றும் உதவி புரிந்த உற்றார், உறவினருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

30, பழைய பூங்கா வீதி,
முதலாம் லேன், யாழ்ப்பாணம்.

மகன்மார்கள்
கிறிஸ்ரி கிறிஸ்தோப்பர்,
பிரான்சிஸ் சேவியர்,
லோறன்ஸ்பிள்ளை, சூரியகுமார்.
(11852)(5)


பொறித்த விலையைவிடக் குறைவான விலையில்....

**கபிலா காலணியகம்**
24, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(27.12.2011 முதல் 01.01.2012 வரை)

பாடசாலை மாணவர்களுக்கான Bata DSI பாதணிகளைப் பெற்றுக்கொள்ள

**கபிலா பாதணியகம்**
13,நவீன சந்தை, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெற் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.